ஸ்ரீராமஜெயம்.

கோயிற்கலம்பகம்-என்கின்ற

திருவரங்கக்கலம்பகம்

மூலமும்-உரையும்

அழகியமணவாளதாசர் என்கின்ற-திவ்வியகவி.

பிள்ளைப்பெருமாளையங்காரவர்கள்

அருளிச்செய்தது

இஃது.

தண்டலம் தமிழ் உபாத்தியாயர்

சுப்பராயமுதலியாரால்

பார்வையிடப்பட்டு.

கரும்பாக்கம்

கைலாயமுதலியார்

திருப்பதி.

இரத்தினமுதலியார்

இவர்களது.

க[illegible]க்கியான முத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

வெகுதான்ய௵—தை௴

1879

ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்.

திருவரங்கக்கலம்பகம்

மூலமும்-உரையும்.

தனியன்கள்-நேரிசைவெண்பா

ஆழ்வார்முன்னனவர்க்கு மாமறைதந்தார்தமிழால்
வாழ்வார்மணவாளர் மாண்பவருட்-டாழ்வாரும்
எம்போலியர்க்கு மிரங்கியரங்கக்கலம்ப
கம்போதநல்கவைத்தார் காண்.

சொன்னேக்கும் பொருணேக்குந் தொடைநோக்குநடைநோக்குந்துறை யினேக்கோ;டென்னேக்குங்காணவிலங்கியமாவதன்றியிதிலீடுபட்டோர் நன்னேக்கும்புத்தியும்பத்தியும்பெறுவர்முத்தியுண்டாநானென்சொல்லே ன்,பன்னேக்கமணவாளர்பகராம்பக்கலம்பகத்தைப்பாரீபாரீர்.

காப்பு-கட்டளைக்கலித்துறை.

மறைப்பாற்கடலைத்திருநாவின்மந்தரத்தாற்கடைந்து
துறைப்பார்படுத்தித்தமிழாயிரத்தின்சுவையமிர்தங்
கறைப்பாம்பணைப்பள்ளியானன்பரீட்டங்களித்தருந்த
நிறைப்பான்கழலன்றிச்சனமவிடாய்க்குநிழலில்லையே

என்றவிக்கவிமுதல் நான்குகவியுந்துதிகவியாக முற்கூறப்பட்டன அவைவருமாறன்றியுந் திருவரங்கேசருடைய சரித்திரங்களையுந் திருவழவன் அவையவங்களையு மெடுத்துக்கொண்டு (வெண்பா.)

வைக்குமபுயந்தவம்வண்டம்மானைப்பரண்மதங்கி
கைக்கிளைசிற்றூசல்களிமடக்கு -மிக்கமறம்

காலத்தழைபிரங்கல்சம்பிரதங்கார்தூது
கோலுங்கலம்பகத்தின்கூறு

என்னும் இக்கலம்பகம் பாட்டியலில் வித்துவசிரோமணியாய்ச் சிப்பி தவிலோத்துங்காராய் திருவவதாரஞ்செய்தருளிய அழகிய மணவாளதாசனனவர் தொகுத்துச்சொல்லுஞ் சூத்திரமிது வாதலானும் முனிபுங்கவராகிய அகஸ்தியராற்சொல்லப்பட்ட அருந்தமிழ்மொழி வழக்கமாதலானுங் கற்குமவர் கருத்திற்கும் நாற்குஞ்சொற்சுவை- பொருட்சுவை-தோன்றச்செய்தமையானும், இம்மை மறுமையென்னுமிருமைக்குந் துணையாய் நன்னெறிபயக்கு மென்பதனுனும் உரையெழுதவெண்டி விரும்பினமையால் சிற்றறிவுடையே னாதலால் என்னறிவினில் அறையுமிலக்கியங்களுட் சிறிதுமறிந்த நானன்றே ஆயினும் நன்மையால் பயனறிந்திடேறவேண்டுமென்னு மாசையெனக்கு மென்சொல்வழிகேளாது வாதிக்கத்துடங்குதலால்; நீரளவேயாகுமாம் நீராம்பற்றுன்கற்ற - நூலளவேயாருமாம் நுண்ணறிவு, என்பதுவும் (தொட்டணைத்தூது மணற்கேணி மாந்தற்குக் கற்றனைத்தூறுமறிவு) என்பதுபோல, யானறிந்தவளவின் உரையெழுதினேனுதலால் இவ்வாறெழுதிய வுரைகொண்டுந் திருவரங்கேசருடைய சிறப்பினைச்சொல்லும் வேறுமுள்ள நூல்களைக்கொண்டு முழுதுணர்ந்த அந்தணர்முதலிய மூதறிவோர்சொல்லும் உபதேசமுறையைக்கொண்டும் இதின்பொருளினது விரிவெல்லாமறிந்துகொள்க.

[இ-ள்.] இருக்குவேதம்-எசுறுவேதம்-அதரணவேதமென்றுசொல்லாநின்ற நான்குவேதமாகிய திருப்பாற்கடலை தம்முடைய அழகியநாவாகிய மந்தரகிரியென்னு மத்தினலேகடைந்து இயலிசைநாடகமென்னுமூத்துறை முதலாகிய துறையினிடத்திற் சேர்த்தியதென்கலையின் முதன்மைபெற்ற ஆயிரப் பிரபந்தமானவதிகாசமிருந்த அமிர்தத்தைகரியவிடத்தைக் கண்டத்திலுடைய கட்செவியாகிய வணையிற் பள்ளிகொண்டருளிய ஸ்ரீரங்கநாயருடைய திருவடிக் கன்பாளர்கூட்டமுழுது மனங்களிகூர்ந்து பானம்பண்ணப் பரிபூரணமாக நிறைக்கப்பட்ட நம்மாழ்வாருடைய திவ்விய ஸ்ரீபாதபற்பநிழல் அல்லது பிறக்கிறது மிறக்கிறதுமாகியநம திருவினை வெப்பவேதனையால் வந்த விடாயானது தீருதற்குப்பொருந்த வேறுநிழல்காணேனென்றவாறு (க)

வேதந்தொகுத்துத்தமிழ்ப்பாடல்செய்த விமலன்பொய்கைப்
பூதன்மயிலையர்கோன்புகட்சேரன் புத்தூரன்றொண்டர்
பாதந்தருந்துகண்மாமழிசைக்குமன் பாணன்மங்கை
நாதன்மதுரகவிகோதைபாதங்க ணண்ணுதுமே.

(என்பது)முன்கூறப்பட்ட நான்குவேதசாரத்தையுந் தொகுத்துத்த
மிழ்மொழிப்பாடலாகச் சாற்றியருளிய நிருமல நாகிய சடகோபாழ்வார்
பொய்கையாழ்வார் பூததாழ்வார் பேயாழ்வார் குலசேகராழ்வார் பெரி
யாழ்வார் தொண்டரடிப்பொடியாழ்வார் திருமழிசையாழ்வார் திருப்பா
ணாழ்வார் திருமங்கையாழ்வார் மதுரகவியாழ்வார் என்னுமிவர்கள் பாதம
லரைப்பரமென்றடைந்துவாழ்வாமென்றவாறு, (உ)

பிடிக்கும்பரசமயக்குலவேழம்பிளிரவெகுண்
டடிக்கும்குரற்சிங்கவேறனையானெழுபாருமுய்யப்
படிக்கும்புகழெம்மிராமானுஜமுனி புல்குணமும
வடிக்குங்கருத்தினர்க்கே திருமாமணிமண்டபமே

(எ-து) தங்கள் தங்கள் சமையமே சமையமென்னு மதானுசாரமாக
வேறில்லையென்றுபிடிவாதமாகப்பிடித்துப்பேசப் பட்டதையாயிகம் வை
சேடிகம்உலகாயுதம்மயகசம்அருகம்அத்தமுதலாகியபரசமையமாகிய யா
னைக்கூட்டங்களை வீறிட்டலறஇடிமுழக்கம்போலச்செற்சிக்கிற கண்டத்
தொனியையுடையவொரு ஆண்சிங்கம்போலப் பராக்கிறமமுடையவர் பூ
லோகம்புவலோகம்சுவலோகம் மகாலோகம்சனலோகம்தவலோகம்-சத
தியலோகமான மேலேழுலோகமும் அதல விதல சுதல நிதல ரிராதல
மகாதலமான கீழேழுலோகமுஞ்சொல்லித் துதிக்கும் புகழினையுடைய
வராகிய வெம்பிராமானுஜ முனீசுரனாருடைய பலபல குணாதிசயங்களை யு
ம் நாவினுக்கிரக மூறவடித்துச் சொல்லுங் கரத்தினையுடைய பேர்களுக்
கும் அதன்றிமற்றபேர்களுக்குக் கிடைக்குமோ வைகுந்தத்திற் றிருமாம
ணிமண்டபமாகிய முத்திமண்டபமென்றவாறு (௩)

வானிட்டகீர்த்திவளர்கூறத்தாழ்வான்மகிழவந்த
தேனிட்டதார்நம்பெருமாள்குமாரர்சிவனையயன்
தானிட்டசாபந்துடைத்தாளரங்கர்சங்காழிபுயம்
நானிட்டனென்றருள்பட்டர்பொற்றாள்கதிநந்தமக்கே

(எ-து) வானுலகமளாவிய கீர்த்தியானது வளராநின்ற கூறத்தாழ்வா
ழ்வாருடைய திருவளமகிட்சியடையத் தக்கதாகிய மகவாய்வந்தவர் அது
வுமன்றியும் வண்டுகள் படியப்பட்ட மணமாலைதரித்தருளியவரங்கநாயக
ருளா லுதையஞ்செய்கையால் நம்பெருமாள் குமாரனென்றும் ஒருபேர்
சொல்லப்பட்டவர் சிவனானவர் பிரமதேவனுடைய சிரசைச் சிதைதத
மையால் பிரமதேவனிட்ட சாபத்தைத் தீர்த்தவராகிய திருவரங் கேசரு

டைய அடையாளமுத்திரையாகிய சங்குசக்கரத்தை யெனதிரண்டுபுயத்திலுந் தரித்து நானிட்டனாக முன்பின்றிரங்கி யிரட்சித்தருளிய பராச பட்டர் வியாசபட்டர் என்பவர்களுடைய பொற்பாதமே நமக்குக்கெதியென்று போற்றல்செய்வாமென்றவாறு.

துதிகவி - முற்றும்,

நூல்.

மயக்கிசைந்கொச்சகக்கலிப்பா-இவை-எட்டடித்தரவுகள்-உ

சீர்பூத்தசெழுங்கமலத்திருத்தவிசின்வீற்றிருக்கும்
நீர்பூத்ததிருமகளுநிலமகளுமடிவருடச்
சிறப்பறவைபுறங்காப்பச்சேனையர்கோன்பணிகேட்ப
நறைப்படலைத்துழாயமார்பினுமிறுபோன்மணிவிளங்க
அரியதானவர்க்கடிந்தவைம்படையும்புடைதயங்கக்
கரியமால்வரைமூளரிக்காடின்றுகிடந்தாங்குப்
பாயிரநான்மறைபரவப்பார்க்கடலுற்பருமணிச்சூட்
டாயிரவாய்ப்பாம்பணைமேலறிதுயிலினிதமர்ந்தோய் (க)
மண்ணகந்துயர்நீக்கவானகந்தொழுதேத்தக்
கண்ணகன்சோணாட்டுக்காவிரிவாய்ப்புள்ளினத்துப்
பம்புகதிர்விசும்பிரவிபசும்புரவிவழிவிலங்கு
செம்பொன்மொழிலேழுடுத்ததிருவரங்கப்பெருங்கோயில்
ஆணிப்பொற்றகடுஞ்சுமணிக்கதவுநீள்வாயில்
மாணிக்கவெயில்பரப்பும்வைரமணிவிமானத்துள்
மின்னிலங்குதொடிவலயன்வலக்கைகீழ்கொடுத்து
தென்னிலங்கைத்திசைநோக்கித்திருநயனந் துயில்வோய்கேள் ()

(எ-து) சீரமையுஞ்-செழுமையும் விளங்கியசெவ்வியதாமரையாகிய அழகியவாசனத்தில் வீற்றிருக்கத்தக்க குணமுண்டானசீதேவியும் பூமாதேவியுந்திருவடித்தாமரைகளைத்தங்கள் கைகளினால்வருடும்படியாகவுஞ் சிறகினையுடைய பறவைவேந்தாகிய கருடன்கடைப்பறநகாத்திருக்கவும்சேனைமுதலியரானவர்ஏவற்றொழில்கேட்டுநிற்கவும்தேன்பொருந்திய துளவமாலையணிந்தருளிய திருமார்பிலே இளஞாயிறுதித்ததுபோல கிரணங்களையுமிழ்ந்து கவுஸ்துவாபரணமணியானதுவிளங்கவும் யாவராலும் வெல்லுதற்

கரிய அசுராதியரைக்கடிந்து வென்ற-சங்கு-சக்கரந்-தண்டு வாள் - கோதண்டமாகிய பஞ்சாயுதங்க ளிரு பக்கமும் நின்று விளங்கவும் கருமை பெற்ற வொருபெரிய மலையானது கமலவனமாகப் பூத்துக்கிடந்ததுபோல-அடிதுடங்கிப் பாயிரமாகிய நான்கு வேதமும் மும்முறைமுறையாகப் பரவிப்போற்றிசெய்யத் திருப்பாற்கடலிலே பெருமைமிக்க மாணிக்கமணுகளைப் பணமுடியிடத்துண்டாகிய ஆயிரம்வாயுமுடையவராவணையின்மேலே யோகநித்திரையிலினிதாகவமர்ந்தவனே-அபபடி யமர்ந்ததுமன்றி மண்ணுலகத்திலுள்ள துன்பமெல்லா மகலவும்-விண்ணுலக முழுதுந் தொழுது தோத்திரஞ்சொல்லவும் இடம்விசாலமா யகண்டகாவேரித் தீர்த்தத்திலே வெண்மணற் குன்றினிடத்திலே நெருங்கிய இரணங்களையுடைய ஆகாயத்திலே வரப்பட்ட சூரியன்றேரிற் கட்டியபச்சைக் குதிரைகள் உயர்ச்சியினாலே வழிவிலங்கிப்பக்கத்தே போகாநின்றமசம்பொன்னினாற்செய்த சத்தப்பிறகாரஞ் சூழ்ந்ததிருவரங்கமாகிய பெருமைமிக்க கோயிலினிடத்திலே ஆணிப்பொற் றகட்டினால் மேய்ந்து நவமணிகளிழைத்த கபாடனம் நீண்ட திரு வாயற்படிக்குள்ளாய் மாணிக்கமணுகளின் சோதியாகிய வெயிலெறிக்கும் வச்சிரமணியாலமைத்த பிரணவாகாரமான விமானத்தின்மேல் மின்னற் கொடிபோ லொளிவிளங்கிய கொடிமுதலாகிய வாகுவலையமணிந்த அழகின்மிக்க வலது திருக்கையைத் திருமுடிக்கீழே கொடுங்கை யாணையாகக் கொடுத்து தெற்கின்க ணுண்டாகிய இலங்கைத்திசையை நோக்கித்திருக்கண் வளர்ந்தருளியசுவாமியே அடியேன்சொல்லும் விண்ணப்பங்கேட்டருள்வாயாகவேண்டியதென்றவாறு

இவை-ஈரடித்தாழிசைகள்

தேவராய்தேவர்க்குந்தெரியாதவொளியுருவாய்
மூவராய்மூவர்க்குண்முதல்வனாய்நின்றோய்நீ (க)

போற்றுவார்போற்றுவதுன்புகழ்பொருளையாதலினால்
வேற்றுவாசகமடியேன்விளம்புமாறறியேனால் (உ)

பணித்தடங்காதிமையவற்கும் பங்கயத்தோன்முதலோர்க்கும்
பணித்தடங்காபுகழடியேன்பணித்தடங்கற்பாலதோ (ங)

யாங்கடவுளென்றிருக்குமெவ்வுலகிற்கடவுளர்க்கும்
ஆங்கடவுணீயென்றாலஃதுனக்குவியப்பாமோ (ச)

அனைத்துலகுமனைத்துயிருமமைத்தளித்துத்துடைப்பதுநீ
நினைத்தவிளையாட்டென்றானின்பெருமைக்களவாமோ (ரு)

சருக்கிரியவுயிர்க்குயிராய்க்கரந்தெங்கும் பரந்துறையு
ஒருதனிநாயகமென்றாலுன புகழ்க்குவரம்பாமோ (௬

(எ-து) தேவர்களாய்த்தோன்றி அப்படியே தோன்றிய தேவர்களுக்கு
ங் காணப்படாதஜோதி வடிவமாயிருந்தருளிய-பிர்மாவிஷ்ணு ருத்திரனெ
ன்று மும்மூர்த்திவடிவமாய்த் தோன்றி அப்படிதோன்றிய மூவர்க்குமுத
ல்வனாகிய மூலகாரணனாய் நின்றவனும் நீயே-உன்னைத்தோத்திரஞ் செய்
யப்பட்டவர்கள் தொத்திரஞ் செய்வதுன்னுடைய புகழ்சேர்ந்த பொருள
யன்றி மற்றொன்றில்லாமையால் வேறொருவசனமாயடியேனெடுத்துச்செ
ல்ல வழியறிந்திலேன்-பெருமைபெற்ற செவியிலே குண்டலமாகப் பாம்
பைப்பணிந்தஈசுரனுக்கும் நாபிக்கமலத்திற் - பிறந்த-பிர்மா முதலான பே
ர்களுக்குஞ் சொல்லி முடியாதவுன் கீர்த்தியை அடியேனாற்சொல்லி முடி
க்கப்படுவதோ யாங்களே தெய்வ மென்று இறுமாந் திருக்கு மெந்தெந்த
வுலகத்திலுள்ள தெய்வங்களுக்குந் தெய்வமாகிய கடவுள்நீயேயென்று
சொல்லுவேனாகி லதுகொண்டு தான்உன்பெருமைக்கு அளவுசொல்லக்
கூடுமோ-நினைவினால்நினைத்து நிதானித்தற்கரிய சகலசீவராசிகளுக்குஞ்
சருவேந்திரி யாமியாய் ஒளித்துச் சூக்குமவடிவாயெங்கெங்கும் நிறைந்தி
ருக்கும் ஒப்பது மிக்கது மில்லாதவொருதனி நாயகமென்று சொல்லிப் பு
கழவேனாகிலு முனதுபுகழாகிய பெருங்கடலுக்கு அதுவொரு அணையா
குமோ வென்றவாறு. (௨)

இவை-ஈரடி-அராகங்கள்-௪

உருவெனவருவென வுளனென விலனென
அருமறை யிறுதியு மறிவரு நிலைமையை (௧)

இவரிவ ரிறையவ ரெனமன வுறுதியோ
டவரவர் தொழவரு சமயமு மருளினை (௨)

கடுவளி கனல்புனல் ககனமோ டகலிடம்
உடுபதிகதிரவ னுருவமு மருளினை (௩)

கடிமலரடியிணை கருதினர் பெறுகென
அடிநடுமுடிவற வருள்பரகதியினை (௪

(எ-து) உருவமென்றும்-அருவமென்றும்-உள்ளவனென்றும்-இல்லவ
னென்றும்-ஒன்றோடொன்றொவ்வாமற் றடுமாறிச் சொல்வதேயல்லாம
ல் இதிலொன்றை மெய்யென்று திடப்படுத்தி வேதமுடிவிலேயு மறியப்
படாத நிலைமையை யுடையவனுமாய் அதுமன்றி

யாங்கள்வழிபடுங்கடவுளர் இவர்காணிவர்காணென்று திடப்படுத்தி வேதமுடிவிலேயும் அறியப்படாத நிலைமையையுடையனுமானாய் அதுவுமன்றி சித்தத்துடனே அவரவர்தொழும்படிக்கீடாய் ஆறுசமைய பேதங்களையும் உண்டாக்கினவனுமானாய் அதுவுமன்றி நெடியதாகிய காற்று நெருப்பு தண்ணீர் ஆகாயம் பூமிசந்திரன் சூரியனென்றுஞ் சொல்லத்தக்க வடிவங்களை வகுத்தவனுமானாய் அதுவுமன்றிப் பரிமள மலரையொத்த உனது திருவடியையுஞ் சிந்தித்தவர்பெறக்கடவதென்று ஆதிமத்தியாந்தமென்பதில்லாமையாக அளிக்கப்பட்ட வதிரகசியமான பரகதியைப்பொருந்தினவனுமாக விருந்தாயாகில் உன்னையாவராலறிந்து துதிக்கப்படுமென்றவாறு (௧)

இவைபெயர்த்தும்-ஈரடித்தாழிசைகள்-௪.

ஒருநாலுமுகத்தவனோ டுலகீன்றாயென்பரதுந்
திருநாபிமலர்ந்ததல்லாற் றிருவுளத்திலுணராயால் (௫)

மேருகிரியுடலவுணன் மிடல்கெடுத்தாயென்பரதுன்
கூறுகிரேனையறிந்த[illegible]லாற் கோவேநீயறியாயால் (௨

பன்றியாய்ப்படியெடுத்த பாழியாயென்பரது
வென்றிபாருனதெயிற்றின் மென்றுகள்போன்றிருந்ததால் (௩)

அண்டமெலாமுண்டாயென்ப ரறியாதாராங்கவைநீ
உண்டருளுங்காலத்தி லொருதுற்றுக்காற்றாவால் (௪)

(எ-று) ஒப்பற்ற சதுர்முகனாகிய பிரம்மதேவனையும் உலகங்களையும் நீ பெற்றாயென்று சொல்லுவார்கள அப்படிசொல்லப்படுவது உனது அழகிய நாபிக்கமலமே பெற்றதன்றியுனது திருவுளத்திலே நீயறிபாயே மகமேருகிரியையொத்த திரேகத்தையுடைய விரணியாசூரனுடையபராக்கிரமத்தை அடக்கினாயென்று சொல்லுவார்கள் அப்படிசொல்லப்படுவதுவுனது கூறிய நகமேபறித்ததன்றி சுவாமிநீயறியாயே சுவேதவராக வவதாரமாய் பூமியைச்சுமந்து வலிமையையுடையவனென்று சொல்லுவார்கள் அப்படி சொல்லப்படுவது வெற்றியையுடைய உனதுகொம்பிலே யொட்டிநின்றுவொருசிறிய மணற்பொடியைப்போ லிருந்ததன்றி மற்றொரு பாரவாசியாகக் காணப்பெற்றதல்லவே அண்டங்களெல்லாம்நீயுண்டுவிட்டதென்று சொல்லுவார்கள் அந்த அண்டங்களையெல்லாம் நீ யுண்ணத் துடங்குமளவில் அதுவுனக்கு வொருகவளத்துக்குங்காணுமோ காணமாட்டாதென்றவாறு. (௪

இவை நாற்சீர் ஓரடி அம்போதரங்கம்-௨.

நஞ்சமு மமுதமு நரகும்வீடுமாய்
வஞ்சமு ஞானமு மறப்புமாயினை

இருவினைப்பகுதியு மின்பதுன்பமும்
கருணையும்வெகுளியுங் கருத்துமாயினை

(எ-து) கொல்விக்கநஞ்சமும்-பிழைப்பிக்கவமுதமும், வேதனைப்படுத்த நரகமும், பரமானந்தத்தையுடைய மோட்சமுமாயினதன்றி வஞ்சிக்க வஞ்சமும், அறிவிக்கஅறிவும், பிறப்பிக்கப்பிறப்புமாயினாய அதுவுமன்றி இருவினைப்பகுதியாகிய பிறப்பிறப்பும்புண்ணிய பாவமுஞ் சுகதுக்கமுமாயவனவன்-எது முன்னிலையாயிரங்கவிரக்கமுங் கோபிக்கக்கோபமுங் குறிக்கக்குறிப்புமானாய் ஆகையாற்சாலமும் உன்னைவிட்டகன்றதில்லை அதைவிட்டு நீயகன்றதுமில்லையென்றவாறு. (௯)

இவை-முச்சீர்-ஓரடி அம்போதரங்கம்(௪)

அலைகடல்வயிறுகலக்கினை-யவுணராமதுகையடக்கினை
மலைகடகளிருவதைத்தனை-மலைதலைகவிழவெடுத்தனை

இவை-இருசீர்-ஓரடி அம்போதரங்கம்-௮.

மண்ணைவிண்டனை-வெண்ணையுண்டனை
மருதிடந்தனை-எருதடர்த்தினை
உண்ணிறைந்தனை-எண்ணிறந்தனை
ஒருமையாயினை-பெருமையேயினை

(எ-து) அலைகளையுடைத்தாய் யாவராலுங்கலங்காத சமுத்திரத்தினுடைய வயிறுகலங்கவசையற்றமகமேருவாற் கலக்கவுங்கலக்கினாய் அதுவுமன்றிச் சுரர்களுக்கிடுக்கண்செய்கையால் அசுராதியர்களுடையஆண்மையை யடக்கவுமடக்கினாய் அதுவுமன்றிக் காதகனாகிய கஞ்சனால்வந்துமலைக்கப்பட்ட குவலயாபீடமென்னு மதயானையின்மாண்டு விழவதைக்கவும் வதைத்தாய் அதுவுமன்றி இந்திரனாற்பெய்யப்பட்ட மழையைத்தடுத்துப்பசுக்குலங்களையும் ஆயர்கூட்டங்களையுங் காக்கவேண்டி கோவர்த்தனகிரியின் கொடுமுடியாகியது தலைகீழாய்மேலேயதன் விரிவுகுடையாயிருக்க எடுக்கவுமெடுத்தாய் அதுவுமன்றியும் பன்றியாகவடிவமெடுத்து மூக்கொம்பினாலே குதத்திமண்டலமுழுதும் பிளக்கவும் பிளந்தாய் அதுவுமன்றி ஆயர்பாடியில் அன்னையாகிய ஆசோதை தயிர்கடையும்போது

நான்மனையிற் காயும்பால் பொங்கிற்றென்று நீ யுண்ணு முலையை வலிதிற் பதித்துவோடுகையில் மத்தினாற் பாண்டத்தையுடைத்து வெண்ணெயை யணைத்து எடுத்துண்ணவுமுண்டாய் அப்படியுண்டதுவுமன்றிப் பின்னும் காலினாற்றயிர்ப்பானையை யெல்லாந்தகர்ந்துருட்டிக் கண்டானடிக்கப் போகுமென்றுபயந்து மற்றொருத்திவீட்டிற்புகுந்து வொளித்து அங்கு முண்டானவுரி யெட்டாமையால் உரல்வைத்தேறிக் கல்லினாற் குழிசை யையுடைத்து வெண்ணெய் நெய்யெடுத்துண்டு கூடவந்த தோழர்களுக்குங்கொடுத்து பூனைக்கும்வழங்குமளவில் வேதமுந்தேடிக்காணாத சிறிய திருவடிச்சுவட்டின்வழியேவந்துகண்டு வாய்மடித்து நெக்கித் தாம்பினாலுரலோடே பிணித்துமத்தினாலடிக்கவருகையில் அவ்விடத்தில் முற்காலத்திலே நாரதர்சாபத்தால் நளகூபரன்மணிக்கிரீவனென்னுங் குபேரன் பிள்ளைகளிரண்டும் மருதமரமாய் நிற்கிறசாபந்தீர இரண்டுக்கும் நடுவே தவழ்ந்து அந்தமருதமரத்தைமுறிக்கவுமுறித்தாய் அதுவுமன்றிக் கவுசலதேசாதிபனான நக்கினசித்தென்பவன்பெற்ற சத்தியையென்னும் பெண்ணைவிவாகஞ்செய்யும்பொருட்டா யார்க்குமடங்காததாய் நின்ற யேழெருதுக்குமேழாயத் திருவுருக்கொண்டுசென்று அவ்வேழெருதின் சவுரியவலிமையையடக்கித் தள்ளளவுந்தள்ளினாய் அதுவுமன்றி யெள்ளுக்குள்ளெண்ணெய்போ லெங்குமிறையவும் நிறைந்தாய் அதுவுமன்றியிவ்வளமென்றேரிலக்கத்துக்கெட்டாமல் நிற்கவும்நின்றாய் அதுவுமன்றியொன்றாகவுமானாய்ப பலவாகவுமானாய் ஆனையாலுனது திருவிளையாட்டின் செயலையாவென்சொல்லுவேனென்றவாறு.

எனவாங்கு-இது-தனிச்சொல்

இது-பதினான்கடிநிலமண்டில-ஆசிரியச்சுரிதகம்.

மலர்தலையுலகத்துப் புலமைசான்ற
பதின்மரும்பணித்த பாடலோடையொடு
முதுமறைகரங்க முரசமார்ப்ப
வலம்புரிபிளிறும் புலம்புரிகோயில்
ஆழியஞ்செல்வ வாழியம்பரம
வாழிவாழி மாயோய்வாழி
நெடியோய்வாழிநின மாட்டொன்றே
அடியேன்வேண்டுவ தஃதுநீமறுக்கேல்
பூவருமயன்முதல் யாவருமறியா
மூவுலகளந்தநின் சேவடிவாழ்த்தித்

தொழுந்தகைத்தொண்டர்தந் தொண்டருட்சேர்க்கா
தெழுவகைத்தோற்றத் தின்னுப்பிறப்பின்
என்பொழியாக்கையுட் சேர்ப்பினுமவர்பால்
அன்பொழியாமை யருண்மதியெனக்கே

(எ-து) விரிவாகியவிடமுள்ள பூலோகத்திலேபுலமைமிகுந்த பதின்மராகிய ஆழ்வாராதியர்சொல்லியருளிய நாலாயிரப்பிரபந்தமாகிய பாட்டினது வோசையுடனேகூடப் பழமையாகிய சதுர்வேதங்களுஞ் சத்திக்கவும் வெற்றிமுரச முழங்கவும் வலம்புரிச்சங்கந்தொனிக்கவும், பொன்னாற் சமைந்தருளிய திருவரங்கமாகிய கோயிலினிடத்தில் அழகிய சக்கராழியைத் தரித்தசெல்வனே, ஆதிமூலமாயழகியபரனே, நீ வாழ்வாயாக நீ கண்டுவளராநின்றவனே நீவாழ்வாயாக உனதிடத்தில் அடியேன் விண்ணப்பஞ்செய்யவேண்டுவ தொன்றுண்டு அதனை யில்லையென்றுமறுத்துவிடாமலீதல்வேண்டும் அஃதியாதெனிற் றாமரைப்பூவிலுற்பவித்த பிரமதேவன்முதற்கொண்டு யாவரொருவராலு மளவுகாணப்படாதபூமியந்தரசுவர்க்கமெனனும் மூவுலகையுமளந்த வுனது திருவடித்தாமரையை வாழ்த்திவணங்குகின்ற தகைமைப்பாட்டினையுடைய தொண்டர்க்குத் தொண்டரானவர்களுக்குள்ளே அடியேனையு மொருவனாகச்சேர்க்க வேண்டியது அடியேன்பக்குவனல்லாமையால் அப்படிசேர்க்கத்திருவுளத்துக்குப் பாங்கின்றிச் சேர்த்திடாமல் நான்குவகைப்பட்ட அண்டசம் - சுவேதசம்-உற்பிசப-சராயுசமென்னும், பிறப்பிலெழுவகைத்தோற்றமாகிய தாபரங்கள்-பத்தொன்பது லட்சமும், ஊர்வன பதினைந்து லட்சமும், தேவர்கள் பதினொருலட்சமும், நீருறை வனபத்துலட்சமும், பறவைகள் பத்துலட்சமும், நாற்காலிகள் பத்துலட்சமும், மானிடர் ஒன்பதுலட்சமும், ஆகக்கூடின எண்பத்து நான்கு லட்ச சீவராசியின் பேதா பேதங்களில் மிகவும் அற்பமாயென் பொழியாக்கையாகிய புழுவாகப் பிறப்பித்தாலும் உனது பாதாரவிந்த திருவடிகளினிடத்துண்டாகிய அன்புவொருக்காலு மறந்து போகாமையாகிய மதியையடியேனுக்கு அளித்தருளவேண்டுமென்றவாறு. (க)

நேரிசைவெண்பா.

எனக்கேதிருவரங்க னேபிரானெம்மான்
தனக்கேயடிமைதமியேன்-புனக்கேழ்

மருத்துளவோன்மேலன்றி மற்றொருவர்மேலென்
கருத்துளவோவாராயுங் கால்

(எ-து) ஆராய்ந்து பார்க்குமளவில் எனக்குத்திருவரங்கத்தில் எம்பெருமானென்னும் பெயரினையுடையவனாகியும் எமக்குச் சுவாமியாகியும் புனத்திற் பசுமைமிக்க நிறமுஞ்சுகந்தமுமுள்ள துளவமாலையணிந்தவனாகியு மிருக்கிற அவன்றனக்கே தமியேனாகி அடியேனவந்து அடிமையானது அவனையன்றி மற்றொருவராகிய தெய்வங்களைப்பரமென் றடைந்து அவர்கள் மேலென்கருத்து நாடத்தக்கதுண்டாகுமோ வாகாதென்றவாறு. (௨)

கட்டளைக்கலித்துறை.

காலாயிரமுடியாயிர மாயிரங்கைபரப்பி
மேலாயிரந்தலைநாகங்கவிப்பவின் பூத்தகஞ்சம்
போலாயிரங்கண்வளரும்பிரானபொன்னரங்கமென்றே
மாலாயிரங்கவல்லார்க்கெய்தலாந்திருவைகுந்தமே

(எ-து) ஆயிரங்கரங்களும், ஆயிரமுடிகளும், ஆயிரங்கைகளுமுடையவனாய் அந்தக்கைகளையெல்லாம பரப்பிக்கொண்டு உகாந்தப்பிரளயவெள்ளத்தினமேலே அநந்தனாகிய நாகம் ஆயிரம்பணாமுடிகளைக்கவிக்க ஆகாசத்திலேபூத்த ஆம்போருகபுட்பம்போலாகி ஆயிரங்கண்மலர்களை முகிழ்த்துக்கொண்டு துயின்றருளிய பிரானாகிய யெம்பெருமானெழுந்தருளியிருக்கா நின்ற திருவரங்கமாகிய தலமென்று ஆசையுற்றிரங்கி மனோவாக்கு காயங்களினால் மதிக்கவுந்துதிக்கவும் வணங்கவும் வல்லவர்களுக்குப் பிரபஞ்சமாயினது தடையின்றி அழகிய வைகுந்தத்திற் சேர்ந்திருந்துவாழ்கககிடைக்கு மென்றவாறு.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

வைகலந்தமூவிலைவேலீசற்கும்வாசவற்கும்
வாசப்பூமேன்
மெய்கலந்தநால்வேதவிரிஞ்சனுக்குமேலாவீற்
றிருப்பர்மாதோ
பைகலந்தபாம்பணைமேற்றிருவரங்கப்பெருங்கருட்
பள்ளிகொள்ளும்
கைகலந்தநேமியான் றிருநாமத்தொருநாமங்
கற்றோர்தாமே

(எ-து) படத்தினையுடைய பாம்பாகிய அணையின்மேலே திருவரங்கமாகிய பெரியநகரத்தில் திருக்கண்வளர்ந்தருளிய கையில்தரித்தசக்காயுதனுடைய ஆயிரத்திருநாமத்திலே யொருதிருநாமமாகிலுங் கற்றபேர்கள் கூர்மையுடைய சூலாயுதமேந்திய யீசுரனுக்குந் தேவேந்திரனுக்கும் வாசப்பூவான நறுமலர்நாற்றமிருந்த தாமரையிலிருக்கும் சதுர்வேதத்துக்குரிய பிரமதேவனுக்கு மேலாகிய பதியில் வீற்றிருப்பார்களென்றவாறு

எண்சீரடி யாசிரியவிருத்தம்.

கற்றாரொனினும் பதினாலுலகுங்
கண்டாரெனினுந்தண்டாமிகுபற்
றற்றாரெனினுந்திருமாலடியா
ரல்லாதவர்வீடில்லாதவரே
பொற்றாமரையாள்கணவன்றுயிலும்
பொற்கோயிலையேபுகழ்வார்பணிவார்
மற்றாரெனினும்பெற்றாரவரோ
வானோர்திருமாமணிமண்டபமே

(எ-து) சகலவேதபுராண சாஸ்திரமுதலான கலைகளையெல்லாங் கற்றார்களேயாயினும் மேலேழுலோகங் கீழேழுலோகமான பதினாலுலகங்களையெல்லாம் கண்டார்களேயாயினும் தவிர்த்தற் கரியதாய் மிகுந்த ஆசாபாசங்களை யறுத்தவரேயாயினுந் திருமாலுக்கடிய ரல்லாதவர்களாயினாராகில் அவர்கள்வீடுபேறில்லாதவர்களாய் மெலிவார்கள் பொற்றாமரையாளாகிய இலக்குமிகாந்தன் துயிலாநின்ற கோயிலாகிய திருவரங்கத்தைநம்பிக் கையாய்ப் புகழவும்பணியவுந் துடங்கினவர்கள் மேன்மக்களன்றி நீமக்களாயினும் அவர்கள் வந்து பெற்றன்றனரோ வைகுந்தத்திலே வானவர்களுந் தொழத்தக்க மாட்சிமையுடைய மணிமண்டமாகிய முத்திமண்டபமென்றவாறு. (௫)

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மண்டலமும்விண்டலமுநின்றவடகுன்றமும்
வளைந்தமலையுக்கடலுமே
தண்டமுமகண்டமுமயின்றவர்துயின்றருள்
அரும்பதிவிரும்பிவினவில்

கொண்டல்குழுருக்குடகிழிந்துமதகுந்தியகில்
கொண்டுநுரைமண்டிவருநீர்
தெண்டிரைதொறுந்தரளமுங்கனகமுஞ்சிதறு
தென்றிருவரங்கநகரே

(எ-து) மண்ணுலகையும், விண்ணுலகையும், நிலை நிற்கின்றமகாமேருகிரியையும், அதைச்சூழ்ந்த மற்றமலைகளையுஞ் சமுத்திரத்தையும்; பழமையாகிய அண்டத்தையும் நவகண்டமல்லாத அகண்டத்தையும் அமுதுசெய்தருளிய அருளாளர் திருக்கண்வளரத் தக்கதாய் அரிதாகிய பதியை ஆசையுடனே யாதென்று விரும்பிக்கேட்கில் மேகங்கள்படிந்து முழுங்கப்பட்ட மேலைத்திசையிலிருந்திறங்கி மதலை முட்டித்தள்ளி அதிற்கட்டைகளை யுருட்டிக்கொண்டு நுரைத்துவரப்பட்ட நீரிலே தெளிந்த அலைகளை மோதுந்தோறு மோதுந்தோறும் முத்தும், பொன்னும், சிதறப்பட்ட காவேரிநதி தீரத்திலழகின் மிகுந்த திருவரங்கமாகிய நகரமென்றவாறு (௧)

புயவகுப்பு-ஆசிரியவண்ணவிருத்தம்-இதுமுதலடி.

நசுகதிர்வழங்குககடுபடுசெம்பொன் நவமணிகுயின்றதொடியணியணிந்து
ககனவிலிடுநீலவெற்பொற்றிருந்தன
நரியபுதுமன்றறிசைமுழுதுமண்ட நரவுருதிகொண்டதுளவணியலங்கல்
மதுகரமொருகோடிசுற்றப்புனைந்தன
நளினமடமங்கைகுவலயமடந்தைசனகனதனைக்கு பொதுவர்மகளென்றி
வனிதையர்தனபாரமொத்தக்குழைந்தன
நதிபதிசுழன்று கதறிநுரைசிந்த வரவகடுரிஞ்சியவறவலமர்ந்து
வடவரையுடறேயநட்டுக்கடைந்தன.

இது-இரண்டாமடி.

இகலியிருகுன்றிலிருசுடரொழுந்து பொருவதெனவிம்ப மதிமுகமிலக்கும்
இருகுழையிருபாடலைப்பச்சிறந்தன
இணையறவிமிர்ந்துவலியொடுதிரண்டு புகழொடுபரந்து புழுகொடுமளைந்து
கலவையினணிசேறுதற்றுக்கமழ்ந்தன
எதிரொருவரின்றிபகிலவுலகுந்தன் அடிதொழவிருந்தவிரணியனடங்க
முரணியவனமார்பமெற்றிப்பிளந்தன
எறிகடல்கலங்கிமுறையிடவெகுண்டு சிசிசரகிலங்கையரசொடுமலங்க
வொருசிலையிருகால்வளைந்துச்சிவந்தன

இது-மூன்றாமடி

மிருகளவினின்றவிளவுகனிசித்திடவடியவிடுகன்றுகுணிலெனவெறித்து
பறவையினகல்வாய்கிழித்துப்பகிர்ந்தன.
வெறிபடுகுருந்தமுறிபடவடர்ந்து குடகடமகிழ்ந்து குரவைகள்பிணை
பொருதொழிலெருதேழுசெற்றுத்தணிந்தன [ந்து
வெடிபட முழங்கியெழுமுகிலுமண்டமொடுநிரைதியங்கவெழிதிவலைகண்டு
தடவரைகுடையாவெடுத்ததுச்சமந்தன
விழிவடவைபொங்கவெதிர்பொரநடந்த களிறுளம்வெருண்டு பிளிறிடமு
புகாமுகவிருகோடுபற்றிப்பிளந்தன [னிந்து

இது-நான்காமடி

அகலிடமுழுதும்பருலகமுமடங்கி அபயமடியெங்களபயமெனவந்து
விழுதொழுமினையூறகற்றிப்புரந்தன
அருகுறவிளங்குமெருதிகிரிசங்கம்வெயிலொருமருந்துநிலவொருமருங்கு
எதிரெதிர்கதிர்வீசவிட்டுப்பொலிந்தன [ம்
அருமறைதுணிந்தபொருண்முடிவையின்சொல் அழுதொழுகுகின்ற தமி
பருளியசடகோபர்சொற்பெற்றுயர்ந்தன [ழினில்விளங்கும்
அரவணைவிரும்பியறிதுயிலமர்ந்த அணிதிருவரங்கர்மணிதிகழ்முகுந்தர்
அழகியமணவாளர்கொற்றப்புயங்களே

(எ-து) ஒளிரப்பட்ட வொளிகளையுகவத்தக்க செம்பொற் றகட்டினுலும் நவரத்தினங்களினுலுஞ்செய்த கோடிமுதலாகிய பூஷணங்களையணிந்து வானவில்லிட்டு விளங்கப்பட்ட நீலமலையை யொத்திருந்ததுவும் நவ்விதாகிய பதுமணம் எட்டுதிசைகளையும் வளைக்கத் தேன்குதிகொண்ட அழகிய துளவமாலையை வண்டினங்களானது வொருகோடிக்கு மேலும் வந்துசுற்றிக்கொள்ளத்தக்கதாகச் சூட்டினதும் தாமரைப்பூவில் மடமைதழுவிய குணத்தால் மிககமழ்கையாகிய திருமகள்நிலமகள் சனகராசாவின்மகள் இடையர் மகளிர்களென்று சொல்லப்பட்ட விப்பெண்கள் மாருடனே களத்தகொங்கைகளானது வொத்தும்படியாற் குழைந்ததுவும் சமுத்திரமானது சுழன்றுகதறி நுரைகளைச்சிந்திக்க ஆதிசேஷனுகிய அரவத்தின்வயிற்றைப்பட்டு மறுக்கமுற்றலற கலியாணிலைமை யுடைத்தாய பதினாறாயிரம் யோசனை தூர மேல்நோக்கியதாய்ப் பதினாயிரம்யோசனை தூரஞ் சுற்றளவுடையதாய மேல்விரிவு முப்பத்திராயிரம் யோசனை தூரமுடைத்தாய்ப் பதினாலுலகத்துக்கு மத்தாரமான மகமேருகிரியினுட

லந்தோய்ந்துபோக நட்டுக்கடைந்தவும் மாறுபாட்டிரண்டு மலையினிடத்
திவிருசுடரென்னுஞ் சந்திராதித்தருதித்து ஒருவருக்கொருவர் பொருவ
துபோலக் கலைநிரம்பியமதியினது விம்பம்போன்ற திருமுகத்திலே வி
ளங்குகின்ற யிருகுழைகளிருபக்கம் அசையும்படிக்குச் சிறப்பித்திருந்த
துவுந் தனக்கிணையொன்றுமின்றி நிமிர்தலையுற்று நின்மையுடனே கூடித்
திரண்டு புகழோடும்பொருந்தி விசாலமாய்நறும்புழுகினுடனே தோய்ந்
து நால்வகைச்சாந்தாகிய கலவையினாலணியத்தக்கதா யிருந்ததுவும் இரா
ணியனுடையசவுரிய மடங்க முரணியவென்னுந் திண்ணியமலையையொ
த்த மார்பினைக்கண்டித்துப் பிளந்ததுவும் அலைகளையெறியுங் கடலாகியது
கலங்கி அபயமென்று முறையிடக்கோபித்து இராக்கதர்க்கிடமாகிய யில
ங்கையை இராவணனுடனே நடுங்கிமயங்க வொப்பற்றகோதண்டத்தினு
டைய விரண்டுகொடியும் வளையச்செய்து சிவந்ததுவும் கஞ்சனால் விடு
பட்டுக்காட்டகத்தில்வந்த வற்சாசுரனானவன் மடிய அவன்மிகுந்தகவட
மாயுருவெடுத்து நின்றகுழைக்கன்றைத்தானே குறுந்தடியாகப் பிடித்து
ச்சுழற்றி யங்கணின்ற விளாவின்கனிசிந்த விட்டெறிந்ததுவுமன்றி அர்த்
தராத்திரியி லாயர்பாடியிலே ஆயரோடுங்கூடி யொருதாமரைத் தடாகத்
தில் வரும்போது அங்குமொரு அசுரன் குருக்காகிய புள்ளாய்விழுங்கு
தலும் அப்புள்ளினதான்றவாயைக் கிழித்துப் பகிர்ச்சியாகப் பகிர்ந்தது
ம் மணங்கமழுங் குருந்தமரமான தமுறிபடும்படியாய் நெருங்கிக்கையைக்
கொட்டிக் குவிக்குங் குடமென்னுங் கூத்தைமகிழ்ந்தாடியதும் அது
வுமன்றிக் கைகளைக்கோத்தாடலாகிய குரவையாடலைப் பிணைத்தாடி மற்
பொருதொழில் எல்லவனை இத்தனையுஞ்செயித்துச் சினந்தணிந்ததுவு
ம் அண்டமுகடும்வெடிக்க முழங்கி யாயர்கூட்டமுந் திகைக்கச் சத்தமேக
முங்கூடிக்கொண்டு கற்களைவிட்டெறிவதுபோலச்சொரியு மழையைக்க
ண்டு விலக்கவிசாலமான கோவர்த்தனகிரியைக் குடையாயெடுத்துச் சு
மந்ததுவுங் கண்ணிலே வடவாக்கினிப்போல பொறிபறக்க வெதிர்த்துப்
பொருதவந்தயானை மனந்திடுக்கிடப்பயந்து வீரிட்டலறமுனிந்து புகரா
கிய புள்ளிபாய்ந்தமுகத்தையுடைய அந்த மந்தகஜத்தின்கொம்பு இரண்
டையும் பற்றிப்பிடுங்கினதும் மண்ணுலகமும் விண்ணுலகமும் நடுநடு
ங்கி யபையமபைய மடியோங்களென்றடைந்து திருவடியிற் றெண்டனு
கவிழுந்தோறும் அவர்களுக்குற்ற விடங்கண்டவிர்த்துக் காத்ததுவு மிர
ண்டருகிலுமுற்று விளங்குங்கீர்த்தியோர் மேலெறிகின்றசக்கரமுஞ் சங்

கும் ஒருபக்கத்திற் சூரியனதுவெயிலுமொருபக்கத்திற் சந்திரனது நில வுமொனறுக்கொன்றெதிர்த்து ஒன்றின்மேலொன்று கிரணங்களை விட் டெறிக்கச் சிறப்பித்ததும் அரிதாகிய வேதத்திற்றுணிந்து சொல்லியவே தாந்தப்பொருளை இனியசொல்லாகிய வமுதமொழுகப்பட்ட தமிழினு லோதியருளிய சடகோபாழ்வாருடைய சொல்லாகிய பாமாலையைச்சூட் டப்பெற்றுயர்ந்ததுவும் யாதென்னிற் பாம்பாகியவணையை விரும்பி யத ன்மேல் யோகநித்திரையா யமர்ந்தருளிய திருவரங்கேசர் நீலமாணிக்கம் போல விளங்கியமுகுந்தர் அழகியமணவாளரானவருடைய வெற்றியைப் பொருந்திய தோள்களென்றவாறு. (எ)

நேரிசைவெண்பா.

புயனுன்குடையானைப் பொன்னரங்கத்தானை
அயனுந்திருவுந்தியானை-வியனும்
பரகதிக்குக்காதலாய்ப் பாடினேன்கண்டீர்
நரகதிக்குக்காணும னன்

(எ-து) சதுர்ப்புயங்களையுடையவனைத் திருவரங்கமாகிய தலேச்சுரத் தையுடையவனைப் பிரமதேவனைப்பெற்ற வுந்திக்கமலத்தையுடையவனை அடியேனுசையாய் எதுவேண்டிப் பாடினே னென்பீராகில் நரகத்தையு டைய யெமலோகத்தைநாடாமல் பலனதிகமாகிய கதியையுடைய பர லோகமே யடையவேண்டுமென்னும் பரிவினாலே பாடினேன் கண்டீரோ வென்றவாறு. (அ

கட்டளைக்கலித்து

ஈனந்தவைகுந்தநாடெய்திவாழிலென் ஞாலத்தன்றி]
யீனந்தவாதிநிரயத்துவீழிலென் யானடைந்தேன்
கோனந்தன்மைந்தனை நான்முகன்றந்தையைக்கோயிலச்சு
தானந்தனையெனக்காராவமுதை யரங்கனையே

(எ-து) காணிந்த ஞாலமாகிய பூமியின்கண்ணெல்லாம் அந்த வைகுந் தமாகிய நாட்டினிடத்திலுஞ்சென்று வாழமாட்டேன் ஈனமாகிய வீடா ரூத நரகத்தினிடத்திலுஞ்சென்று வீழமாட்டேன் எனக்கொரு பற்றுக் கோடாக ஒருவனைப் பரமென்றடைந்துவிட்டேன் அவனுரோவென்னி ல், ஆயர் குலாதிபனான நந்தகோபாலனுக்கு நந்தனானவன் நான்முகனு

ன விதாதாவுக்குப் பிதாவானவன் கோயிலாகிய வரங்கத்தி லச்சுதான ந்தனானவன் அதுவுமன்றி உண்ணுந்தோறு முண்ணுந்தோறும் எங்களுக்குத் தெவிட்டாத வமுதத்தையொத்த அரங்கநாயகனையே அடைந்தெனென்றவாறு, (௯

எண்சீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்.

அரவினடித்தானு முரவிலொடித்தானும்
அடவிகடந்தானும் புடவியிடந்தானும்
குரவைபிணைந்தானும் பரவையணைந்தானும்
கோசலைபெற்றானும் வீசலையுற்றானும்
முரனையறுத்தானுங் கரனையொறுத்தானும்
முத்தியளித்தானும் பத்திவிளித்தானும்
பரமபதத்தானுஞ் சரமவிதத்தானும்
பாயல்வடத்தானுங் கோயிலிடத்தானே.

(எ-து) அரவமாகிய காளிங்கன் முடிமேல்நின்று நடித்தவனும் உரமுடைய வுமாபதிவில்லை யொடித்தவனும் அடவியாகிய வாரணியத்தில் மாதா பிதா வாக்கியப்படிக்கு நடந்தவனும் புடவியாகிய பூமியை யேனமாயிடந்தவனும் குரவையாகிய கூத்துக்குக்கையைக்கோர்வையாகப்பிணைத்தவனும் பரவையாகிய வுவரியைப் பருப்பதங்களாற் றிருவணைசெய்தவனுங் கோசலையான தசரதன்தேவிபிள்ளையாகப்பெற்றவனும் வீசப்பட்டவலையாகிய சிரசாகரத்திற்கண்டுயிலுற்றவனும் முரனாகிய வசுரன்முடியை யறுத்தவனும் கரதூஷணன் முதலாகிய வரக்கரை வெறுத்துக்கடர்ந்தவனும் தன்னைவினையத் தலைவனையறிந்த தபோதனருக்கு முத்தியைக்கொடுத்தவனும் குவலையாபீடமென்னும் அத்தியை மதமடக்கினவனும் அன்றியும் அத்தியாகிய யானை ஆதிமூலமென் றழைத்தவனுமாம் பரமாகியபதத்தை யுடையவனுஞ் சரமமுபாயமாகிய சுகரூபனும் பாயலாகப்படுக்கு மிடமாக வடபத்திரத்தை மகிழ்ந்தவனுமாரோவென்னில் கோயிலாகிய பீடமே குடியாகியவரங்கநாயகனேயாகுமென்றவாறு

கட்டளைக்கலித்துறை

தானேதனக்கோத்த தாட்டாமரைக்குச்சரண்புகுந்தாள்
ஆனேனினியுன்னருளறியேனெனதாருயிரோ

தேனேயென்றீவினைக்கோர்மருந்தேபெருந்தேவர்க்கெல்லாங்
கோனேயரங்கத்தரவணைமேற்பள்ளி கொண்டவனே.

(எ-து) என்னுடைய வுயிர்க்குயிரானவனே அப்படி யுயிர்க்குயிராகும் ஒழியாத வின்பத்தை யுதவுகலாந் தேனிலுமினித்தவனேஎனது தீவினை யாகிய பிறவித்துன்பந்தீர்ப்பதற்கொரு அருமருந்தானவனே பெருமை மிக்க தேவதேவாதிபனே திருவரங்கத்திலேபாம்பணையில் பள்ளிகொண் டவனே தனக்குத்தானே ஒப்பாகிய உனது சரணாரவிந்தத்துக்கே சரண டைந்த அடிமையானேன் இனிமேலுனது திருவருளிருந்து நடத்தும்ப டியினையதென்றறியேனென்றவாறு. (௰௧)

மேகவிடுதூது நேரிசைவெண்பா

கொண்டல்காளுங்களைக் குறித்தேதொழுகின்றேன்
அண்டர்காணாவரங்கத்தம்மானைக்-கண்டு
மனத்துளவத்தைப்படுமென் மையலெல்லாஞ்சொல்லி
புனத்துளவைத்தைக்கொண்றீர் போய்.

(எ-து) வாருங்கள் மேகங்கள் உங்களைக்குறித்துத் தொழுகிறேன் எவர்களாலு மளவிட்டுக் காண்பதற்கரியதிருவரங்கத்திலேயெமக்குச் சுவா மியாயிருந்துள்ளவனை நீங்கள் போமளவிற் கண்டு சந்தித்து எனக்கெய் தாமமிழுவிருதயத்தி லிடர்ப்படலாகிய யெனதுமையலாகியவாசையை யறிக்கையைதெரியப்படுத்தி அவரணிந்த புனத்திற் பச்சென்றபசுந்துழா யமாலையைக்கொண்டு வரவேணுமென்றவாறு. (௰௨)

கலிவிருத்தம்

போயவனியிற்சிலபுறச்சமயநாடும்
பேயறிவைவிட்டெழுபிறப்பையுமறுப்பீர்
ஆயனையனந்தனையனந்தசயனத்தெம்
மாயனையரங்கனைவணங்கிமருவீரோ

(எ-து) வாரீருலகத்தீர்காள் மனத்திடமின்றி வையக்கடோறும் மலத் திகிரிபோற் சுற்றித்திரிந்து சித்தப்பிராந்தியாய்ப் பலபல சமயங்களைப் பயனின்றியே நாடப்பட்ட பேதமையாகிய பேயறிவைக்கைவிட்டுஎழு வகைப்பட்ட பிறவியின் வேரைக்களைந்து பிறவாமையாகிய வீட்டின்ப த்தை மேவுவீர்கள் ஆயனை நந்தகோபாலனை யனந்தனானவனை யனந்த னை சேஷசயனத்திற் றிருக்கண் வளர்ந்தருளிய வெம்முடைய மாயவ

லை திருவரங்கத்தையுடையவனை வணங்கினவருடைய திருவடித் தாமரையே ஸ்திரமென்று சேழுவீராகவேணுமென்றவாறு (௰௩

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்,

மருவுதந்தையுங்குருவுமெந்தையு
மருள்கெடுப்பதும்மருள்கொடுப்பதும்
உருகுநெஞ்சமும்பெருகுதஞ்சமும்
உரியஞானமும்பெரியவானமும்
திருவரங்கனுரிருவரங்கனுர்
செங்கண்மாயனுரெங்களாயனுர்
அருண்முகுந்தனுர்திருவைகுந்தனுர்
ஆயலநாதனுர்கமலபாதமே

(எ-து) மருவி வளர்க்கட்ட மாதாபிதாவுந் தேசிகனுந்தெய்வமும் மருளைக்கெடுக்கப்பட்டதும் அருளைக்கொடுக்கப்பட்டதும் உருக்கமுள்ள நெஞ்சமும் பெருக்கமுள்ள தஞ்சமுமாகிய பற்றுக்கோடும் உரிதாகிய ஞானமும் பெரிதாகியவானமெனனும் பரலோகமுமானதுவும் எதுவோவென்னில், இங்ஙனஞ் சொன்னதொன்றுமல்ல திருவரங்கமாகியகோயிலையுடையவர் இருவரங்காகிய யீசுரனையும், பிர்மாவையும், தமதங்கத்திலுமுடையவர் செங்கமலம்போன்ற திருநாயனத்தையுடைய மாயனுனவர் எங்களுக்கியைந்தவாயனென்னும் நந்தகோபனுனவர் அன்றியும் அருளுவமான முகுந்தனுனவர் ஸ்ரீவைகுந்தத்தில் வாழப்பட்டவர்அமலனுகிய நாதனுன வரங்கநாயகருடைய திருவடிததாமரையே அப்படிக் கெல்லாமானதென்றவாறு. (௰௪)

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

பாதியாயழுகிப்கால்கையரோனும்
பழிதொழிலுமிழிகுலகும்படைத்தாரோனும்
ஆதியாயரவணையாயென்பராகில்
அவரன்றோயாம்வணங்குமடிகளாவார்
சாதியாலொழுக்கத்தான்மிக்கோரோனுஞ்
சதுர்மறையால்வேள்வியாற்றக்கோரோனும்
போதினன்முகம்பணியப்பள்ளிகொள்வான்
பொன்னரங்கம்போற்றுதார்புலையர்தாமே

(எ-து) பண்ணுத பாவங்களைப் பண்ணிப்பாதியாயழுகிப் போன கரசரணுதிகளையுடையரோ யாயினும் பழிப்புக்கிடமாகிய தொழிலு மிழிவாகி

யகுலமுமுடையவரோயாயினும் அவர்கள்வந்து அன்புடனேவாக்கு மனத்துக்கு மளவிடப்படாத வாதியானவனே அரவணையிலமர்ந்தருளு மாதிகேசவனே யென்று ஒருதரஞ் சொல்லுவார்களேயாகி லவர்களேகண்டீர் நாங்கள்நமஸ்கரிக்கப்பட்ட நாயன்மாரானவர்கள் அதுவன்றிச்சாதியினாலு மொழுக்கத்தினாலு முயர்ந்தவர்களேயானாலும் வேத பாராயணத்தினாலேயும் வேள்விசெய்வதினாலுமே தக்கதகமையோரானாலுந் தாமரையிற் பிறந்த சதுமுகப்பிர்ம்மாவந்து பணிந்துபூசிக்கப் பணையிற்பள்ளி கொண்ட பரமபுருஷோத்தமனுடைய பொன்னரங்கத்தைப் போற்றிசெய்யாதொழுவார்களேயாகில் அவர்கள் கடையருக்குங் கடையரோ யானபேர்களென்றவாறு. (௰௫)

கட்டளைக்கலித்துறை.

புலையாம்பிறவிபிறந்தென்செய்தோம்பொன்னிபொன்கொழிக்கும்
அலைபார்திருவரங்கத்தெம்பிரானமதன்னையொடும்
தொலையாதகானங்கடந்தவனாட்டந்தோறும்புல்லாய்ச்
சிலைபாய்க்கிடந்திடுமேநெஞ்சமேகழநீண்டுகைக்கே

(எ-து) பொய்மையாகிய கடைப்பட்ட செனனத்தையெடுத் தென்ன பலனையடைந்தோம் ஏழைமனமே பொன்முதலாகிய மணிகளைக் கொழிக்குமலைகணிரம்பி யகன்றகாவேரியினிடத்திலே அழகியவரங்கத்தி லுள்ளவனாகியவெம்முடைய பிரானானவன் எனது தாயாகியசீதாபிராட்டியாருடனேகூடநடந்து கடக்குதற்கரிய காட்டைக்கடந்து சென்றவக்காலத்திலே அவர்கடந்தருளிய அவ்வழிகள்தோறும் புல்லாயாகிலும பிறந்து கிடக்கவானாலும் தவஞ்செய்துக்கொள்ளமாட்டாமற்போனோமே அவரது திருவடிகளை யடையுகபொருட் டென்றவாறு. (௰௬)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

தீண்டாவழும்புஞ்செந்நீருஞ் சீயுநரம்புஞ்செறிதசையும்
வேண்டாநாற்றமிகுமுடலை வினைசுமந்துமெலிவேனே
நீண்டாய்தூண்டாய்விளக்கொளியாய்நின்றுயொன்றுயடியாா
ஆண்டாய்காண்டாவனமெரித்த வரங்காவடியேற்கிரங்காயே

(எ-து) தீண்டத்தகாத அருவருக்கப்பட்டவழும்பும் உதிரமும்சீழும் நரம்பு மிடைக்கிடையோ செறியப்பட்ட மாங்கிஷமும் விருப்பப்படாத துற்கந்தமு மிகுந்த பலமாண்டமாகிய வுடம்மைப்பொல்லாத வினையைச் செய்த அடியேனெடுத்துச் சுமந்துமெலியக்கடவேனோ குறளுருவமாம்

நீண்டு வளராநின்றவனே தூண்டாதசுடரினது சோதிப்பிரகாசமான விளக்கொளியாயெங்கும் பரந்துநின்றாயென்பது அறிந்திருந்து மறிந்துகொள்ளமாட்டாத மூடத்தன்மையையுடையேனையும் ஒரு பொருளாயாட்கொண்டருளினவனே காண்டாவனந்தகனஞ்செய்தருளிய வரங்கனாயகனே அடியேன்கடைத்தேறும்படிக்குத் திருவுளத்திலிரங்கி இரட்சிக்கவேண்டுமென்றவாறு,—(அடியேனை யாண்டாயென்பலைதயாமற் பின்னு மாங்காவடியேற்கிரங்காயேயென்று சொல்லவேண்டுமோ வென்னில், யேகமானது வாநீரைச் சுத்தோதகமாக்கிவைத்தாலு மற்று முருண்டோடிப் பழயபடிக்கு வாரிநீராமாறுபோல அப்படியாண்டருளினாலும் அஞ்ஞானத்தாற் கலக்கித்திரும்பித் தேடாமலருளவேண்டுமென்பதுகருத்து)(௰எ

தவம்-கலிநிலைத்து.

காயிலைதின்றுங்கானிலுறைந்துங்கதிதேடித்
தீயிடைநின்றும்பூவலம்வந்துந்திரிவீர்காள்
தாயிலுமன்பன்பூமகணன்பன்றடநாகம்
பாயன்முகுந்தன்கோயிலரங்கம்பணிவீரே

(எ-து) காயிலைமுதலாகிய கந்தமூலபலங்களைப் பட்சித்தும் வனவாசஞ்செய்தும் கெதியைவிரும்பிபஞ்சாக்கினிமத்தியிலிருந்துஅரிதாகிய தபசைச்செய்தும் பூமியிற்பிரணமாய்வந்துந் திரியப்பட்டவர்களே சொல்லக்கேளீர் அன்னைபிதாவிலுமதிகமான அன்புண்டானவன பூமகளாகிய ஸ்ரீதேவிக்கு நன்பனாகச் சீதரனென்றிருக்கிறவன் விசாலமான பாம்பாகிய பாயலிற்பள்ளிகொண்டருளிய முகுந்தனானவன் அப்படியானவனுடைய கோயிலாகிய திருவரங்கத்தைச் சென்று கண்டுவணங்குவீர்களாகவேண்டும் அப்படிவணங்கில் வருந்தாமலெளிதிற்றானே யெல்லாப்பலனையுமடைந்துய்யலாமென்றவாறு. (௰அ)

இதுவும்அது-கட்டளைக்கலித்துறை.

வீரரங்காகியவைவரைமாற்றி விடவரவின்
போரரங்காகநடித்தபொற்றாள்பற்றிப்பொன்னிநன்னீர்
சீரரங்காநின்றெழும்பனென்றேசிந்தைசெய்யிலது
கூரரங்காநெஞ்சமேவஞ்சமாயக்கொடுவினைக்கே

(எ-து) தோத்திரந்-தொக்கு - சட்ச - சிங்குவை-பாக்கிராணம். என்னும் ஐம்பொறியாகிய விவையற்றின் வழித்தான்-சத்த-பரிச-ரூப - ரச-

கெந்தமென்னுந் தன்மாத்திரையாகிய வைம்புலவேடராகிய வீரர்களை லலைத்தெழு நெஞ்சிலுலவுக்ஞானவாளால் மடித்து நற்செயிறுடைய நாகபடத்தினின்ற தன்பேராகிய பூசலை யாடரங்கமாகவாடியருளிய வழகிய திருவடிகளையடைந்து பொன்னியாகிய காவேரியின் புண்ணியதீர்த்தச் சிறப்பினையுடைய திருவரங்கேசனை யானுன்னுடைய அடியாற்குமடியனை வடிவமையென தகத்துருகினெஞ்சமே நீகணப்போதாகிலுங் கருதினதுண்டாகில் அதுவே பற்றுக்கோடாகவந்து தம்மைவஞ்சித்துமயக்கப்பண்ணுங்கொடிய வினையென்று மிரும்பிற்குக்கூரிய அரமாம் அதைய றுத்துத்தள்ளுதற்கென்றவாறு. (௰௯

(நேரிசைவெண்பா)

கேசவனையேசெவிகள்கேட்கத்திருவரங்கத்
தீசனையேசென்னியிறைஞ்சிடக-நேசமுடன்
கண்ணனையேகாண்கவிருகண்ணினர்கொள்காயாம்பூ
வண்ணனையேவாழ்த்துகவென்வாய்

(இ-து) என்னுடைய அவயவங்களி லிரண்டுசெவிகளும் எவ்விடத்திலு மெக்காலத்திலு மெத்துன்பமெய்துமிடத்திலு மற்றொன்றையுங்கேளாமற் கற்றுணர்ந்தமாய்க் கேசவனுடைய கீர்த்தியையே கேட்கக்கடவது அன்றியும் என்னுடைய சென்னியாகியசிரம் மற்றொரு தெய்வங்களை வணங்காமல் திருவரங்கேசனாகிய தெய்வத்தையேவணங்கக்கடவது அன்றியுமென்னுடைய வுறுப்புகளிலுயர்ந்த இரண்டு கண்களுமாசையாக யாதொன்றையுங் காணாமற் கண்ணனைத்தானே காணக்கடவது அன்றியுமென்னுடைய வாயானது வீணிலேவொன்றைத் துதியாமல் காயாம்பூ வண்ணனாகிய கடவுளையே துதிக்கக்கடவதென்றவாறு (உ௰)

இரங்கல் எழுசீர்க்கழிநெடில்-ஆசிரியவிருத்தம்

வாயினிரங்கினையாரமறிந்தனை வால்வளைசிந்தினைதண்
பாயலையுந்தினைமாலையடைந்தனை பாரிலுறங்கிலையால்
கோயிலரங்கனைமாகனகந்திகழ் கோகனம்பொலியும்
ஆயிழைநண்பனைநீயும்விரும்பினை யாகுநெடுங்கடலே

(எ-து) வாராய் நெடியகடலே என்னைப்போல நீயுங் கோயிலாகிய திருவரங்கத்திலுள்ள வரங்கநாயகனைப் பெருமைமிக்க கனகமயமாய்க்கதிர்வீட்டிலங்கும் கமலமலரிற் பொலிவுபெற்றவாயிழையாகிய சமலைக்கு நட்பான காதலனை விரும்பினவளாக வேண்டும் அதெத்தன்மைத் தென்

பையாகில் அவர்வந்தணையாத வாறருமையினால் யான்வாயினாலிரங்கிப் புலம்புகிறதுபோல நீயுமுன்வாயினாலிரங்கிப்புலம்புகிறாய் அதுவுமன்றியான் ஆபரணமானமுத்தங்களைவெறுத்தெறிவதுபோலஆரமானமுத்தங்களை வெறுத்தெறிகிறாய் அதுவுமன்றியான்வால்வளையாகிய கையிலணிந்தவெள்வளைகளைச்சிந்திவிடுகிறதுபோலநீயும் சங்கங்களாகிய வெள்வளைச் சிந்திவிடுகிறாய் அதுவுமன்றி யான்கண்படைகொள்ளுந் தன்மைபொருந்தியபாயலைவிரும்பாமற்றள்ளி விடுகிறதுபோல நீயும்பாயப்பட்ட அலையாகிய பாயலைத்தள்ளிவிடுகிறாய் அதுவுமன்றி யான்மயலாகிய மாலையடைந்ததுபோல நீயுமருளினதொழுங்காகிய மாலையடைந்தாய் அதுவுமன்றி யானிரவொருகமாயுறங்காமைபோல நீயுமுறங்காமையாயிருந்தாய் ஆகையால் யானொருத்தியு மிவ்வாறாயினேனென்றிருந்தேன் என்னோடொக்க நீயுமிவ்வாறாயினையோவென்று தலைவிகடலின் மேல்வைத்திரங்கின தென்றவாறு,—மாலையடைந்தனை யென்பதற்கு மாலென்பது பெருமையாதலாற் பெருமையை யடைந்தாயென்றுரைப்பாருமுளர் (உக)

இதுவும்-அது-கலிநிலைவண்ணத்துறை

கடல்வழிவிடவிசிசரர் பொடிபடவிருகண்சீறி
வடகயிலையிலெழு விடைதழுவியதுமறந்தாரோ
அடலறவமளியிலறி துயிலமருமரங்கேசர்
இடர்கெடவருகிலர் முருகலர்துளவுமிரங்காரோ

(எ-து) முற்காலத்திற் சீதையென்னுமொரு பெண்ணைவேண்டிக் கடலானது அஞ்சிவழிவிட்டுவணைகச்சேதுபந்தனஞ்செய்துபோய் இலங்கையிலுண்டான இராவணன்-கும்பகர்ணன் - முதலான அரக்கரெல்லாமாண்டு தூளிபடலமாகத்திருக்கண்சிவந்ததுமன்றி மற்றும்வெள்ளி மலையிலும் விசேஷித்துவிளங்கப்பட்ட விடைகளாகிய எருதுகளேழையுஞ் சததியை யென்னுமொரு பெண்ணுக்காத்தழுவியவளை மணந்ததுவும் மறந்து விட்டாரோ வென்னவே மறவாமல்செயதாரெனப் படுமாதலால் என்னுடைய விடருங்கெடும்படிக்கிசைந்துவந்தணைந்தவருமல்ல அப்படியணைவதற் கியையாராகில் துளவமாலையை யாகிலு மிரங்கித்தந்தவருமல்ல வலியினையுடைய அரவாகியவமளியில் யோகநித்திரையாயமைந்தருளிய வரங்கநாயகரானவராதலால் அவரருளானது ஒருதன்மையாயிருந்திலதென் றென்றவாறு, (உஉ

நேரிசைவெண்பா.

இரங்கத்தனித்தனியே யெய்துகின்றதுன்பந்
தரங்கத்தையேதாற்றடுப்பீர்-அரங்கர்க்குக்
கஞ்சந்திருப்பாதங் கார்மேனியென்றவர்பால்
நெஞ்சந்திருப்பாத நீர்

(எ-து) சமுசாரமாகிய சாகரத்திலழுந்தித் தளர்ச்சியுற்றிரங்கும்படிக்குத்தனித்தனியே யொன்றின்மேலொன்று யோயாமலோடிவரப்பட்ட மாயாவிகாரமாய் மட்டிற்கரியமனோதுக்கமாகிய தரங்கமென்னு மலைகளையே கைக்கொண்டு தவித்துய்வீரோவைகளால் அரங்கநாயகனார் கம்போருகம் போலும் அழகிய திருவடியே அறுங்கார்மேகம்போலும் கரியதிருமேனியென்றும உவமிக்கப்படாமைக்கு வழித்துய்யவேண்டித் தீயநெறிக்கட்செல்லுஞ் சித்தத்தை அந்நெறிக்கட்செல்லாமல் அவர்பாலிற்செல்லத் திருப்பமாட்டாத திடசித்தமில்லாத நீங்களென்றவாறு. (உரு)

இரங்கல்தாழிசை.

நீரிருக்கமடமங்கைமீர்கிளி கடாமிருக்கமதுகரமெலாம்
நிறைந்திருக்கமடவன்னமுன்னணிநாயாயிருக்கவுநாயாமல்யான்
ஆரிருக்கிலுமென்னெஞ்சமல்லாதொருவஞ்சமற்றதுணையில்லையென்
றுதாத்திஞெடுதூதுவிட்டபிழைபாரிடத்துநாசெய்தாறுவேன்
சீரிருக்குமறைமுடிவுதேடறிய திருவரங்கனைவணங்கியே
திருத்துழாய்தரில்விரும்பியேகொடுதிரும்பியேவருதலின்றியே
வாரிருக்குமுலைமடர்மடைந்தையுறைமார்பிலேபெரியதோளிலே
மயங்கியின்பிறமுயங்கியென்னையுமறந்துதன்னையுமறந்ததே

(எ-து) வாருங்கள் மடப்பத்தினையுடைய மங்கைமீரோ என்மனதிற் கிசைந்த நீங்களனைவருமிருக்க நானாசையாய்வளர்த்த கிளிகளுமென்கையிலிருக்க மணங்களுக்காக வராநின்ற வண்டுசாதிகளும் நிறைந்திருக்கமடமையையுடைய பேடையன்னங்களும் முன்னைநிரைநிரையாயிருக்க இவையெல்லாம் நம்பாமலெவர்க ளிருந்தாலும் என்னிதயத்தைவிட வேறொரு விசுவாசமான துணையில்லையென்று விசாரித்துத்துணிந்து ஐயப்படாமலாதரவினுடனே யதைத்தூதனுப்பி யான்மோசம்போன பிழையை நாணமின்றி முகம்பாராதாரிடத்திலே சொல்லியாறப்போறேன் அவையாதெனில், என்னிதையமான செய்திச்சிறப்பினையுடைய வேதமுடிவிலேயும் திருவரங்கனைக்கண்டு சேர்ந்து தெண்டஞ்செய்து விண்ணப்

பஞ்செய்கைபால் அவரிரங்கித்திருத்துழாய் மாலையைத்தந்தாராகில் விரு ம்பிவாங்கிக்கொண்டு திரும்பிவரவேண்டுமென்பதில்லாமல் கைச்சார்ந்த கனதனத்தையுடைய மலர்மடந்தையாகிய மகாலட்சுமிவாசமாகியவர் மார்பினுடைய அழகிலேயும் பெரிதாகிய தோளினையுடைய அழகிலேயு மயங்கி இன்பமுறப்பொருந்தி என்னையுமறந்து தூதாகப்போன தன்னையுமறந்துவிட்டதாகி உலகத்திலே துன்பத்திற்கியாரோதுணையவர் தம்முடைய நெஞ்சந்துணையல வழியென்பதென்னிடத்திலிருக்க யானயானாவெறுப்பேனென்றவாறு. (உசு)

இதுவும் அது நேரிசைவெண்பா

மறக்குமோகாவின் மதுவருந்தியப்பால்
பறக்குமோசந்நிதிமுன் பாமோ-சிறக்கத்
தருவரங்கள்கேட்குமோ தாழ்க்குமோநெஞ்சே
திருவரங்கர்பாற்போன தேன.

(எ-து) நான் நமது திருவரங்கேசரிடத்திலே தூதாகச்செலுத்தின வண்டானது அங்ஙனஞ்சென்றவுடனே யென்னை மறந்துபோய்விடுமோ அல்லவென்று பூங்காவிலேபோய்ப் புஷ்பங்கடோறும் மதுக்களைமவழ்ந்து பானம்பண்ணி அப்பாற்பறந்து தான்போய்விடுமோ அல்லவென்று சந்நிக்கு முற்பட்டுநிற்குமோ அல்லவென்று சிறப்பிக்கும்படிக்கு அவர்தரப்பட்ட வரங்களைக்கேட்டுநிற்குமோ அல்லவென்று சற்றுந்தாழ்ந்து தானிற்குமோ யானிவ்வகைத்தோன்றி யாது மறிந்திலென் என்செய்வேனென்றவாறு (உ௭)

அம்மானை-மடக்குத்தாழிசை

தேனமருஞ்சோலைத் திருவரங்கவொப்பொருளும்
ஆனவர்தாமாண்பெண் ணலியலர்காணம்மானை
ஆணவர்தாமாண்பெண் ணலியலரோயாமாகில்
சானகியைக்கொள்வரோ தாரமாயம்மானை
தாரமாய்க்கொண்டதுமோர் சாபத்தாலம்மானை

(எ-து) வண்டுசாதிகள் மருவாநின்ற பூங்காவனஞ்சூழ்ந்த திருவரங்கத்தினிடத்திலே யெம்பெருமானொழுந்தருளி யிருக்கப்பட்டவர் ஆணுமல்லாத பெண்ணுமல்லாதவர் அலியுமல்லாதவராகில் சானகியாகிய சீதையைத்தாரமாய்க் கொள்கைக்குத்தகுமோ வென்றில் அம்மானையப்படித்

தாரமாகக்கொண்டது மொருசாபமாகிய வில்லை யொடித்ததனல் அம் மானையென்றவாறு.— (அறியதுபாடி லம்மானையாதலால் - அப்படித் தாரமாய்க்கொண்டது வொருசாபகாரணத்தா லென்றுள்ளுரை யுரைத்த மையு மறிந்துக்கொள்க.) (உசு)

இரங்கல்-மடக்குத்தாழிசை.

மானையெய்தவரின்னமென்மடமானையெய்திலர்நேமியால்
மாலைதநதவர்பைந்துழாய்மது மாலைதந்திலரிந்திரன்
சோனைமாரிவிலக்கிவிட்டவர்சொரிகண்மாரிவிலக்கிலார்
சுரர்களுக்கமுதங்கொடுத்தவர்சோதிவாயமுதங்கொடார்
தானையைவர்கொடிக்களித்தவர்தானைகொண்டதளிக்கிலார்
சங்கரற்கிரவைத்தடுத்தவர்கைதலுக்கிரவைத்தடார்
ஆனைமுன்வருமன்புளார்முலையானைமுன்வருமன்பிலார்
அணியரங்கர்நடத்துவீதியவீதியாகவிருந்ததே

(ஏ-து) முன்பு மாரீசனாகிய மானை யம்பினாலெய்தவ ரிப்போ இன்ன முமென்னுடைய மடமானைக்கத்தினாலே மானையொப்பானை யெயதில ரென்னவே எய்தப்பொறுகின்றிலரென்பதாயிற்று அன்றியுஞ் சக்ராயுத த்தினாற் பொழுதைமறைத்து மாலையாகிய செவ்வந்துமாலையைத்தந்தவர் பசுமைபொருந்திய துளவமாலைமாலையைத் தந்திலர் அன்றியுந் தேவேந்தி ரனால் விடுப்பட்டுவந்து பொழியப்பட்ட சோனைமழையை விலக்கிவிட் டார் சொரியப்பட்ட கன்மாரியை விலக்கிவிடுகின்றலர், அன்றியும் தேவ ர்களுக்கெல்லா மமிர்தத்தைக்கொடுத்தவர் செவ்வியவொளிசிவந்த தமது திருவாய்மலரிடத் துண்டாகிய வமிர்தத்தைக் கொடுக்கிலர் அன்றியும் ஐவர்கொடியாகிய துரோபதைக்கு மாளாததுகிலையளித்தவர் இங்கனமெ ன் சிறியபேதைத்தன்மையுடையவட்குச் சரிதுசேர்ந்து துகிலையளித்த வர் சங்கரருக்கிரவச்சத்தைத்தடுத்தவர் கைதபலானவட்கிரவு நீட்டிக்கும ச்சத்தைத்தடுத்தவர் அன்றியுங் கெஜேந்திரனாகிய யானைக்கு முற்பட்டு வரும்படிக்கு அன்புண்டானவர் முலையாகிய கொங்கைப் போரானைக்கு முற்பட்டுவரும்படிக் கனபில்லாதவராயிருந்தார் ஆகையால் அழகிய திரு வரங்கேசர் நடத்துகின்ற வீதியெல்லா மனிதியாயிருந்ததென்றவாறு,— இவையெல்லா மூரண்டோடையாய் முடிததவாறறிக,) (உஎ)

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இருளினும்வெளியினுமருளினுந்தெருளினும்
இன்பமேயடையினுந்துன்பமேமிடையினும்
ஒருவர்முன்புகழினுமிருவர்பின்புகழினும்
ஊனிறந்தழியினும்யான்மறந்தொழிவனோ
சுருதிநின்றோலிடுங்கரதலங்காலொடும்
துவளுநூன்மார்பமும்பவளவாய்முறுவலும்
திருவரங்கேசர்தஞ்சுருள்கருங்கேசமும்
செய்யநீண்முடியுமத்துய்யசேவடியுமே

(எ-து) இருளாகிய போதிலும் பகலாகியபோதிலும் மாயையின் வசத்தனாய் மயங்கினாலும் அப்படிமயங்காமற் றிடச்சித்தனாய்த் தெளிந்தாலும் இன்பமானதெய்தியின்புற்றாலுந் துன்பமானது துன்னித் துன்புற்றாலும் ஒருவர் முன்னின்று புகழ்ந்தாலும் அப்படி புகழ்ந்தவர்முன் புகழ்ந்தாலும்முன்னாலமைத்தவிவ்வுடம்பேபிறந்தழிந்துபோனாலும் யான்மறந் தொழிந்திருக்கவல்லவனோவேனோகானகுவேதமும்முறையிடப்பட்ட திருவரங்கேசருடைய நான்குபுயங்களையும் புரிநூலானது துவண்டு புரளாநின்ற பொலிவினையுடையமார்பினையுஞ் செம்பவளம்போன்ற திருவாயிற்சிறந்த முத்தினையொத்த முறுவலையுஞ்சுருண்டு கிருபையுற்றசோதியான செசத்தையுஞ் செவ்விதாயநீண்ட திருமுடியையும் வன்மையுடனே துய்யதாய்ச் சிவந்ததிருவடித் தாமரையையு மெக்காலத்து மறவேனென்றவாறு()

(நேரிசைவெண்பா)

சேவடியான்மூவடிமண்டென்னரங்கத்தம்மானீ
மாவலிபால்வாங்கியநாண்மண்ணுலகோ-மூவுலகும்
வீசுங்காலோர்வலியவெவ்வினையேனெஞ்சமோ
பேசுங்காலேதோபெரிது

(எ-து) தெற்குத்திசைக்குத் திருப்பதியாகிய திருவரங்கத்திலுள்ள சுவாமி அடியேன்விண்ணப்பங் கேட்டருள்வாக வேண்டும் தேரீமாவலிணிடத்திலே வாமனடிவாய்வந்திரந்து உமதுசேவடியினாலே மூவடிமண் கேட்டு வாங்கினவந்நாளிலே பூமியந்தர சுவர்க்கமானமூவுலகமுவீசிவிளங்கிய பாதமோபெரியதானது அல்லவென்று தீவினையினுடையசிறிவான சிந்தைதானோ பெரியதானதென்று பேசுமளவில் இம்மூவுலகு மிருக்குமிடம்விசாலமன்றி நீண்டதிருவடியானதென் சிந்தையிலடங்கிநீங்காமல் நிறைந்திருக்கையால் என்னெஞ்சமேபெரியதென்றவாறு (உகூ

நாரைவிடுதூது-கட்டளைக்கலித்துறை

பெருவரங்கேசவனல்லாதருள்செயும்பேரிலையே
ஒருவரங்கேசற்றுமோதாரென்காதலைமோடியெங்கும்
கருவரங்கேசலிக்கததிரிவோர்க்குக்கருணைசெய்யும்
திருவரங்கேசற்குநீசொல்லல்வேண்டுஞ்செழுங்குருவே

(எ-து) எனக்குப்பெரிதாகிய வரந்தந்தாள்கைக்குக் கேசவனல்லாது பேரில்லை என்காதலையுன்னைவிட வொருவருமவர்க்குச்சற்றாகிலுந் தெரியப்படச்சொல்வாருமில்லை ஆகையாலேவீணாகக்கருவரங்காகிய கெர்ப்பக்கிரகங்கடோறும் பிறந்துமிறந்து முழலப்பட்டதிருவரங்கேசருக்குநீயே போய் என் துயரமெல்லாஞ் சொல்லவேணுஞ் செழுமைபொருந்தியகுருகாகியயுள்ளோயென்றவாறு. (௩௰)

இரங்கல்தாழிசை.

குருகுறங்குகானலேகருநிறங்கொள்பானலே
  கொடியிருண்டஞாழலேநெடியகண்டநீழலே
பொருள்தரங்கவேலையேநிருதரங்கமாலையே
  போதயின்றகம்புளேயேதையின்றியம்புகேள்
திருவரங்கரிணையிலாவொருபுயங்கவணையிலே
  திகழ்வலக்கைகீழதாமுகிழ்மலர்க்கண்வளர்வதோர்
கருணைநம்புலதனமும்மருணவிம்பவதரமும்
  காவிகொண்டமேனியுமாவிகொண்டுபோனவே

(எ-து) குருகாகிய பட்சிசாலஞ் சஞ்சரித்துறங்காநின்ற கானலாகிய கடற்கரையே கரியநிறங்கொண்டபானலாகிய யாரும்குவளையே கொடியிருண்ட ஞாழலாகியதருவே நெடியதாய்நிழலை நிழற்றுநின்ற தாழையே பொருதப்பட்ட தரங்கமாகிய அலைகளையுடையசமுத்திரமே நிருதராகியவிராக்கதருடைய நிறம்போன்றமாலையாகிய அந்தியேதோதாகிய பூந்தாதிகளைப்பொசிக்கப்பட்ட கம்புகளாகிய சம்பங்கோழியே உங்களுடனே யிப்போயான் எதையென்றெடுத்துச் சொல்லப்போகிறேன் திருவரங்கருடைய விணையில்லாதவொருபுயங்கமாகிய பாம்பணையிலேதிகழ்ந்துபிரகாசிக்கும் வலக்கையைத் திருமுடிக்கீழேகொடுக்கையணையாகக் கொடுத்து மூசளிதமாகிய மலர்க்கண்வளராநின்ற வொருவெப்பற்ற கருணைவெள்ள

ங்குடிகொண்ட முகாம்புயமுஞ்சிவந்த ஆதொண்டைப்பழத்தை யொத்தவவாமுங்காவியாகியகருங்குவளைப்பூவை யொத்ததிருமேனியுமாகிய இவ்வவையவங்கடோறு முண்டான அழகுகளெல்லாங்கூடி பெண்ணுவியாகிய பிராணனைக் கொள்ளைகொண்டு போயிற்றென்றவாறு (௩௧)

பன்னிருசீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்.

போனகம்பதினலுபுவனந்திருப்பள்ளி
  பொறியரவணைப்பாற்கடற்
பூமடந்தையுநிலமடந்தையுந்தேவியர்
  புராதனமறைக்குமெட்டா
வானகம்பேரின்பமுடன்வீற்றிருக்குமிடம்
  வானகம்வயினதேயன்
மலர்வந்தநான்முகன்றிருமைந்தனவன்மைந்தன்
  மதிசூடிவாசவன்முதல்
தேனகுந்தொடைமவுலிமுப்பத்துமுக்கோடி
  தேவருனதேவல்செயவோர்
திங்களும்பரிதியுஞ்சங்கமுந்திகிரியுந்
  திரிவண்வுகிற்பனவுமாம்
ஏனைமன்னுயிர்முழுதும்விளையாடநீவகுத்
  திட்டபலமாயையதனல்
எழிலரங்கர்துயிலுமெம்பிரானின்பெருமை
  யாவரேவாழ்த்துவாரோ

(ஏ-து) அழகிய திருவரங்கத்திலே சேஷசயனத்திற் றிருக்கண்வளரா நின்றசுவாமி தேவரீருக்குப் போனகமாகிய பொசிப்பாவது பதினலுபுவனமும் அதுவுமன்றித் தேவரீருக்கழகிய பள்ளியறையாவது பொறியாவென்னும் பாம்பாகிய வணையையுடைய திருப்பாற்கடல் அதுவுமன்றித் தேவரீருக்குத்தேவிமாராகிறவர் சீதேயும் பூதேவியும் அதுவுமன்றித்தேவரீருக்கு வின்பத்தோடுங்கூடிப் பரவாசுதேவர் எழுந்தருளியிருக்கு மாவது புராதனமாகிய நான்கு தேவதத்துக்கு மெட்டாதவானுலோகம் அதுவுமன்றித் தேவரீருக்கு வாகனமானவி வயினதேவனாகியகருடன் அதுவுமன்றித தேவரீருக்குவந்துயேவற்றொழில் செய்யப்பட்டவர்கள் உனது உந்திக்கமலத்திற் பிறந்தபிரமதேவனாகிய பிள்ளைக்குப்பிள்ளையாகிய பி

றையைச்சூடினவன்] தேவேந்திரன் முதலாகிய கற்பகப்பூத்தேன் றுளிக்காநின்றபூமாலை பொருந்திய பொன்முடிகவித்த முப்பத்து முக்கோடி தேவர்கள் அதுவுமன்றித்தேவரீருக்கு ஆயுதமாவது சந்திர சூரியராகிய சங்குசக்கராயுதம் அதுவுமன்றித்தேவரீருக்கு விளையாடவாவது பலபல மாயையாக வகுக்கப்பட்ட தத்துவனமும் ஊர்வனமும் தவழ்வனவும்நிற்பனவு முதலாகிய சகலசீவராசிகள் ஆகையால் தேவரீருடைய பெருமையையாவராலறிந்து புகழப்படுமென்றவாறு (௩௨)

இரங்கல்-இதுவும்-அது

சென்னக்கேசவலு நாயுடு

வாழுமெளவித்துழாய்மணமுமகரக்குழைமேதாய்விழியருளும்
மலர்ந்தபவளத்திருநகையுமார்பிலணிந்தமணிச்சுடரும்
தாழுமுளரித்திருநாபித்தடத்துளடங்குமனைத்துயிரும்
சரணக்கமலத்துமைகேள்வன் சடையிற்புனலுங்காணேனல்
ஆழமுடையகருங்கடலினகடுகிழியச்சுழித்தோடி
அலைக்குங்குடகாவிரிதாப்பணைவாயாவிற்றுயிலமுதை
எழுபிறப்பிலடியவனாயெழுதாப்பெரியபெருமானை
எழுதவரியபெருமானென்றெண்ணுதெழுதியிருந்தேனே

(எ-து) திவ்வியமங்கள் சுருபமாய்ச் சிறந்ததிருமுடியிற் சூடிய துளவமாலிகையின் சுவர்தத்தையுந் திருமகரக்குழைவிளங்கிய திருச்செவியிற் சென்று சேராநின்ற கடாட்சவீட்சணத்திற் பெருங்கருணை வெள்ளத்தையுஞ் செம்பவளம்பொன்ற திருவாய்கமலராற் சிறந்தசிறுநகையையுந் திருமார்பிலணிந்த கவுஸ்துவாபரண மினியின்சோதியையுந் தாழ்ந்து குழிந்த தாமரையாகிய நாபித்தடத்துக்குள்ளா யடங்கிநின்ற சர்வ சீவராசியையுஞ் சரணாரவிந்தத்தில் உமாபதியினுடைய சடைக்கங்கையும் நான் காணேன் ஆகையாலாழமுண்டான கருங்கடலினுடைய அகடாகிய வயிறுகிழியச் சுழித்துக்கொண்டோங்கி அலைக்காநின்ற குடாகாவேரிக்கு நடுவே வைந்துலாயையுடையபாம்பாகிய அணையிலே யருட்கண்வளர்ந்தருளி யமுதமபோன்றவனைத் தமக்கு அடியாரானவர்களுடைய எழுபிறவித் தொகையையு மியமன்கணக்கி லெழுதாத பெரியபெருமானை யெழுதற்கரிய வெழிலுடையபெருமாளென்று மெண்ணுமல் என்பேதையாகிய புத்தியினு லிப்படத்திலெனவென்று துணிந்து வெழுதியிருந்தேன் (௩௩)

இதுவுமது-எணசீர்க்கழிநெடில்-ஆசிரியவிருத்தம்

இருங்குங்குமத்தோ ளரங்கேசர்முன்னுள்
இலங்காபுரங்கா வலன்காலினல்வீழ்

கருங்குன்றுபோன்மண்மூகக்குத்திவீழக்
கண்டாரெனக்கின்றுதண்டாளிரத்தால்
மருங்கெங்கும்வம்போதுவார்வாயடங்கும்
வாடைக்குநிலமங்கையாடைக்குநோகேன்
நெருங்குந்தனஞ்சந்தனம்பூசலாகும்
நீளாதிராமைய்யன்மீளாதிராதே

(எ-து) பெரியதாகிய குங்குமங்களைக் கொட்டாநின்ற தோளினையுடைய வரங்கநாயகர் முற்காலத்தில் இலங்காபுரிக்குக் காவலனாகிய இராவணனைக் காலாகிய சண்டமாருதத்தினாற் கவர்ந்து விழாநின்ற கருமலைபோல மண்ணிலே முகங்குத்தித் தலைகீழாய் விழும்படிக்குச்செய்தவர் இப்போதெனக்குத் தண்மையையுடைய மாலையைத்தந்தாராகில் இவ்விடத்திலெங்கெங்கு மலர்த்தூற்றுவாருடைய வாயலராகாமலடங்கும் அதுவன்றியும் வாடையாகிய காற்றுக்கும நிலமங்கையாகிய கடலுக்கும் யான்நோக்கத் தக்கதில்லை இழையும்நுழையப்படாத நெருக்குதலையுடைய தனத்திலே நற்சந்தனக்குழம்பைத் தீட்டவலாகும் இரவும் நீட்டியாதென்னுசைநோயுமநீங்குமென்றவாறு. (௩௪)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்,

தேடுகின்றனையைம்பொறிகளுக்கினைதேடியுங்கிடையாமல்
வாடுகின்றனைவீடுசென்றென்றினிமருவுவைமடநெஞ்சே
ஆடுகின்றிலையழுகிலைதொழுகிலையரங்கனைக்கரங்கூப்பிப்
பாடுகினறிலைநினைகிலைபதினமர்தம்பாடலின்படியாயே

(எ-து) அல்லும்பகலும் அவமேதிரிந் தைம்பொறியாகிய-மெய்-வாய்-கண்-மூக்குச்-செவியென்பதற்குச்-சத்த-பரிச-ரூப - ரசகந்தமாகிய பொசிப்புகளைத்தேடாநின்றாய் அப்படி தேடியுங்கிடையாமையாய் வாடாநின்றாயாகில் நமக்கு மோட்சமாகிய வீட்டினிடத்திலே இனியென்றைக்குச் சேரப்போறாய் மடமையையுடைய நெஞ்சமே அரங்கநாயகனை இரண்டு கைகளையுங் குவித்தும் பாடுகிறாயில்லை ஆனந்தமாகநின்றாடுகிறாயில்லை திருவடிகளிற் றெண்டனாய் விழுகிறாயில்லை நினைந்துநினைந்து பரவசமாகிறாயில்லை, பதின்மராகிய ஆழ்வாராதியர் பாடின பாடலையும் படிக்கிறாயில்லையென்றவாறு (௩௫)

எழுசீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்.

ஆயினைமனையைச்சேயினைப்பிதாவை
அனத்தினைத்தனததினைவிரும்பும்

பேயினைமறந்துநோயினைமூப்பைப்
பிறப்பினையிறப்பினைத்துடைப்பீர்
ஆயனைமுளரிவாயனையெங்கள்
அமலனைக்கமலனைப்பயந்த
தாயனைநெடியமாயனைவடபாற்
றரங்கனையரங்கனைத்தொழுமே

(எ-து) மாதா பிதாவும் பெண்டீர் பிள்ளைகளையும் - அன்னத்தையும்-சொர்ணத்தையும் - மற்றமுள்ள பண்டபதார்த்தங்களையும் - பொய்யென்று நினையாமல் மெய்யென்று விரும்பும் பேயாகியசிந்தைமறந்து- நோயையும், மூப்பையும், பிறப்பையு மிறப்பையுந் துடைத்து அடியினைக் கருதுவீர்கள்; எப்படியெனறு லாயனாகிய கோபாலனை மலர்ந்த செந்தாமரையையொத்த வாயையுடையவனை எங்கள் மும்மலத்தையு மொழிக்கப்பட்ட வமலனான வனைக கமலனாகிய பிரமதேவனைப்பெற்ற தாயானவனை நெடிதாகிய மாயனை வடபத்திரத்திலும் பாற்கடலிலும் பள்ளிகொண்டவனை யரங்க நாயகனையடைந்து தொழுதுகொள்ளுங்களென்றவாறு

மடக்குக்கட்டளைமண்டலக்கலிப்பா.

தொழப்பெறுதந்தவாரணத்தந்தமே
தொட்டிறுத்ததும்வாரணத்தந்தமே
வழுத்துதாண்முன்புவனங்கடந்ததே
மலர்ந்தவுந்திபுவனங்கடந்ததே
ஒழித்ததுங்குழைச்சங்கரன்சாபமே
ஓசித்ததுங்குழைச்சங்கரன்சாபமே
அழித்ததும்பொருதானவரங்கமே
அரிதநூரினிதானவரங்கமே

(எ-து) அரங்கேசருடைய பெருமையை இத்தன்மைத்தென் றறிந்து தொழமாட்டாததும், அழகிய வேதாந்தமே அவர் தங்கையிலேதொட்டுமுறிந்ததுவும் யானைக்கொம்பையே யவர் முன்புசீதைபிராட்டியாருடனே வனங்களைக்கடந்து சென்றதுவும்தொண்டர்களா யுள்ளோர் யாருந்துதிக்க திருவடியே அதுவுமன்றி இப்புவனங்களையெல்லாம் பெற்றதுவும் அவருடையமலர்ந்த நாபிக்கமலமே அதுவுமன்றி யொருவராலுமொழிதற்கரியதை அவவொழிந்ததுவுந் துயரமுற்ற சங்கரனுடைய சாபத்தையே மற்றும் யாவராலும் வளைக்கப்படாதத்தை யவர்களைத் தொடித்ததுவுங் குழையாகச் சங்கைத்தரித்த அரனுடையவில்லையே மற்று

மவனழிக்கிறதும் பொருதப்பட்ட அசுராதியருடைய அங்கத்தையேஅ வனுக்கிருப்பிடமாகத் தேவலோகத்திலுமினிதானது அரங்கமா நகரமெ யென்றவாறு. (௩௭)

நேரிசைஆசிரியப்பா.உயிர்வருக்கைமோனைகாண்க,

அரங்கமாளிக் கருங்கடல்வண்ணனை
  ஆலிமாமுகிலை வாலிகாலனை
இந்தளூருறை யெந்தைபெம்மானை
  ஈசனுன்முகன் வாசவன்றலைவனை
உள்ளுவாருளத் துள்ளுறைசோதியை
  ஊரகநின்றரு ளீரகத்தடிகளை
எவ்வுண்மாயனைத் தெய்வநாயகனை
  ஏர்மலிசிகரத்து நீர்மலையாதியை
ஐவாயரவி லறிதுயிலமலனை
  ஒருக்கால்மொழியினு மொழிகுவைநெஞ்சே
ஓகநீர்ஞாலத் துழலும்
  ஔவியபிறப்பி லழுந்திவாடுவதே

(எ-து) அரங்கமாகிய மாளிகையினிடத்தில்வாழுங் கரியகடலையொத்த திருமேனியின் வண்ணத்தையுடையவனை யாலினிடத்திலே மாவாகிய மகாலட்சுமிக்கும் முதன்மையானவனை- வாலிக்குவலியகாலனானவனைத் திருவிந்த ளூரிலுறையப்பட்ட வெந்தையாகியசுவாமியை ஈசனென்றும், நான்முகனென்றும்; வாசவனென்றுஞ்சொல்லப்பட்ட இவர்களுக்குத் தலைவனானவனை ஓபாமல் நினைப்போர்க ளுடைய நெஞ்சகத்துள்ளே நிறைந்தஜோதியானவனை திருவூரகத்திலேநின்றருளிய திரிலோகத்தடிக ளாகிய தேவனைத்திருவெவ்வுளூரில் வீரராகவனென்னிமாயவனை திருவ யிந்திரபுரத்திற்றெய்வநாயகனானவனை அழகின்மிகுந்த சிகரங்களையுடை ய நீர்மலையினிடத்திலெனக்கெந்தை யிருக்கப்பட்டவனை ஐந்துதலையையு டைய வராவணையிலறிதுயிலாகவமர்ந்தருளிய அமலனானவனை நெஞ்சு மேஒருதரம் அவனது துதியைசொன்னாயேயாகிலு மொழித்துவிடலாம் கடல்சூழ்ந்தவுலகத்திலே யுலாவிநின்றுழலு மௌவியமென்னும் பொய் ம்மை யாகியபிறவி சாகரத்திலழுந்தி வரப்பட்ட அனுபவமெல்ல மென்ற வாறு. (௩௮

இரங்கல்-தாழிசை

வாடியோடவனசமன்ன விருகண்வெள்ளமருவிபோல்
மருவியோடமதனன்வாளி யுருவியோடவாடையூ
டாடியோடவன்றிலோசை செவியிலோடவண்டுழாம்
ஆசையோடுமெங்கள்பேதை யாவியோடனீதியோ
மோடியோடவங்கிவெப்பு மங்கியோடவைங்கரன்
முடுகியோடமுருகனோட முக்கணீசன்மக்களைத்
தேடியோடவாணனாயிரம்புயங்கள் குருதிநீர்
சிந்தியோடநேமிதொட்ட திருவரங்கராஜனே.

(எ-து) மோடியாகிய மூதணங்குதோற்றோடவும், அங்கியாகிய நெருப்பினுடையவெப்பமு மங்கியோடவும், ஐந்துகரமுடைய யானைமுகவன் முடுகியோடவும், அதன்தம்பியாகிய முருகனவன்பின்புநடுகியோடவும், மூன்றுகண்ணினையுடைய ஈசனவன் மக்களைத்தேடியோடவும், வாணசூரனுடைய ஆயிரம்புயங்களினுமிருந்து குருதிநீர்வெள்ளமானது குதித்தோடவும், சக்காராயுததத்தைவிடுத்தருளிய திருவரங்கராஜனே எங்கள் பேதத்தன்மையை யுடையவளுடைய கமலம்போன்ற விருகண்மலரும் வாடிப்போகவும், மன்மதனெய்யப்பட்ட வைங்கணையும்பட் டுருவியோடவும், வாடையானதுவந்திழைந்தோடவும், அன்றிலாகிய பட்சியினோசையினால் இருசெவியிலும் நுழைந்தோடவும், வண்மையுடைய உமது துளபமாலைமேல்வைத்த ஆசையுடனேகூட அவளாவி கூட்டிலிராத நீங்கியோடவும் நீதியோ சொல்லுமென்றவாறு (௩௬)

கலிச்சந்தவிருத்தம்.

சருகருந்தியும் பொறிவருந்தருந்
தவர்களண்டர்குஞ் சரமுககன்முகன்
பரிதிசந்திரன் சிவனயன்புரந்
தரனிரந்தரம் பரவுமெந்தையூர்
குருகைதஞ்சைதென் கணபுரங்குறுங்
குடிகுடந்தைவண் டுவரையிந்தளூர்
திருவைகுந்தமஞ் சனசிலம்பயிந்
திரபுரஞ்செழுந் திருவரங்கமே.

(எ-து) சருகுமுதலாகிய பொசிப்புகளைப் பொசித்து ஐந்துபொறிகளும் வருந்தப்பட்ட அரியதபோதனர்கள் - தேவர்கள்-ஆனைமுகவன்

ஆறுமுகவன்-சந்திரன்-சூரியன்-சிவம்- அயன்-தேவேந்திரன் முதலான பேர்கள் சதாகாலமும்பரவிப் பணியுமெந்தையாகியஎம்பெருமானுக்கு யிருப்படமாகியபலூராவது திருக்குருவை-திருத்தஞ்சை-திருக்கண்ணபுரம்-திருக்குறுங்குடி-திருக்குடந்தை-திருத்துவரை-திருவிந்தளூர்-திருவைகுந்தம்-திருநீலகிரி-திருவயிந்தபுரம்-செழிப்பினையுடைய திருவரங்கமுதலானமற்றுமுள்ள தலங்களுமாமென்றவாறு. (சய)

மடக்குக்கொச்சகக்கலிப்பா.

திருவரங்கந்திருக்கோயில்சேர்ந்துமதுதிருக்கோயில்
தருவதொன்றும்வைகுந்தந்தயங்கொளிசேர்வைகுந்தம்
ஒருமருங்கினந்துடையாரொழிந்தோர்சனனந்துடையார்
மருவமறந்திருப்பீரோவணங்கமருந்திருப்பீரோ.

(ஏ-து) திருவரங்கமாகிய வழகியகோயிலைச்சென்று சேர்ந்துஉங்கள்திருக்காகிய தீவினைகளெல்லாந்தீர்ந்துதேயானல் தருவர்எக்காலமுந்தாமிருந்தருளியதம்முடைய வொளிரு மொளிசேர்ந்தவைகுந்தத்திலிருக்கும் பதவியையொருவருமருங்காகிய இடதுகையிலேந்தியசங்கத்தையுடையவரோயன்றி மற்றொருவருங்கள்செனனத்தைப் போக்கமாட்டார்கள் ஆகையாலவருடையதிருவடித்தாமரையைமருவுதற்குப்பொருந்தாமற் போகப்பட்ட மாறுபடாகியவுங்கள்மனதைத்திருப்புங்கள் வணங்குகிறத்துக்கு மறந்திருக்கப்பட்டவர்களேயென்றவாறு.

சித்துகட்டளைகலிக்கலிப்பா

திருப்பொற்பாவைக்குக்கஞ்சம்பொன்னுக்கிய
சித்தரோஞ்சுத்தக்காயமவரென
உருப்பொற்பானதிருவரங்கேசனர்
ஊரகத்துநின்றார்சென்றிறைஞ்சினம்
இருப்புப்பாடகங்காட்டினர்யாமவர்
இருப்பையாடகமாக்கினமீயத்தை
கருக்கிவெள்ளியதாகவிருக்குவோம்
நமதுவித்தைக்கமுதேயருமையே

(ஏ-து) திருப்பொற்பாவையாகிய சீதேவிக்குக் கஞ்சமாகியவெண்கலத்தைப்பொன்னுக்கியசித்தர்நாம் மைத்திருண் காயாம்பூவையொத்த வடி

வழகிய திருவரங்கேசரானவர் திருவூரகமாகிய விடத்திலிருக்கும்போது சென்றிறைஞ்சினேம் அப்போதவரிருப்புப்பாடகங்கட்டினர் நாமவருக்கு அந்தவிரும்பை யாடகமாகியு பொன்னாகச்செய்தோம் அதுவுமன்றியீயத்தை நறுக்கி வெள்ளியதாகவுருக்குவோம் இதுவெல்லா மருமையல்ல வெமதுவித்தைக்கு அமுதமாரத்திரமே யருமையென்றவாறு (இன்னமித்தகே யுரையிப்பொருளன்றிய மிதனுள்ளுரையென்னேவென்னிற் சீதேவியிருப்பது பொற்றாமரையாதலால் கஞ்சமாகியதாமரையைப்பொன்னாக்கினேமென்றார் இருப்புப்பாடசங்காட்டினரென்பது தாமிருக்குமிருப்பிடந்திருப்பாடகமாகிய தலமென்றறிவித்தது இரும்பைபாடகமாக்கினமென்பது பெரியபாம்பின்படத்தை யவருக்கு நாடகசாலையாக்கினமென்றது ஈயத்தைநறுக்கி வெள்ளியதாக வுருக்குவோமென்பது ஈயத்தையுருக்கியூற்றுமபோது வெள்ளியதாயோடுமென்பதுகருத்து) (சஉ)

இதுவுமது-கட்டளைக்கலித்துறை.

அரும்பித்தளையவிழ்தாண் மாலைமார்பனரங்கனெங்கள்
பெரும்பித்தளையும்பிறப்பறுத்தாண்டபிரான்சித்தரோ
தருமபிததளையுந்தாரவும்பொன்னாக்கித்தருவெமப்பா
திரும்பித்தளையினுமெய்பாலமுதினுஞ்சிந்தனையே

(ஈ-ஐ) அரும்பானதரும்பிமுறுக்கவிழ்ந்துபுஷ்பிக்கும்பூமாலையையணிந்த மார்பையுடையவர் அரங்கமாகிய நகரையுடைய பெரிதாகிய பித்தையகளைந்து குடும்பும்பிறப்பை யொழித்தாண்டருளிய பிரானென அரங்கநாயகருடைய திருவடிக்கரிதாகிய சித்தர்காம் நீங்கள் தரப்பட்ட பித்தளையையுந்தாரவையும் பொன்னாக்கித் தருவோம் அப்பாலென்சிந்தையானதிப்போதிரும்பிற்று வெண்ணெயிலேயும், நெய்யிலேயும், பாலிலேயும் விருப்பமாய்ப்பொசிக்கவேண்டுமென்றவாறு. (இதற்குயின்னமுமொன்றுண்டு தரும்பித்தளையுந்தாரவும் பொன்னாக்கியெனபது தரும்பிமறித்து அணைந்துவளையின் முட்டும் அராபாம்புக்குஅரியென்றுபேர்பொன்னுக்குமரியென்றுபேராகையா லப்பொன்னைப் பொன்னாக்குகின்றேமென்றுசொன்றிவாறு. ()

நேரிசைவெண்பா.

சிந்திக்கத்தித்திக்குஞ்செவ்வாய்துவர்த்துப்பாம்
புந்திக்குள்ளேயின்புளிமேவும்-நந்தம்

கருவரங்கங்கைத்தழலுங்காவிரியுனூடே
திருவரங்கத்தேவளருந்தேன்

(எ-து) காவேரியினிடத்திலே திருவரங்கத்திற் கண்வளராநின்றிளபத்தைச் செய்கின்றமையால் தேனைபொத்திருக்கின்ற அரங்கநாயகராகிய தேனையுண்ணவென்று சிந்தையினுற் சிந்திக்குமாத்திரத்திலே தானேயிருவஞ்சமாகிய வாழ்க்கையில் மற்றொருபொசிப்பினுலிருக்கின்ற சிவந்த வாயானது துவர்த்துப்பாய்விடும் இதயத்திலே யிடைவிடாத ஆனந்தமாகிய பேரின்பமுடைத்தாயிருக்குமன்றியும் நமமுடைய கருவரங்கமாகிய கருப்பைக் கைத்துக்கனற்று நிற்குமென்றவாறு. (௩௪)

கட்டளைக்கலித்துறை.

தேனந்துசோலையரங்கேசர்சேவடிமேல்விசயன்
தானந்தநாளையிற்சாத்தியமாலையுந்தாள்விளக்கும்
வானந்தருங்கங்கைநன்னீருஞ்சென்னியில்வைக்கப்பெற்ற
வானந்தந்தானல்லவோமூக்கணுன்மன்றுளாடுவதே

(எ-து) வண்டினங்கள் தாவாநின்ற பூங்காவனஞ்சூழ்ந்த அரங்கநாயகருடைய திருவடியில் அர்ச்சுனனானவன் முற்காலத்திலர்ச்சித்த மாலையும் அடியிணைவிளங்கிய வானிடத்திலே வருங்கங்கையாகிய நன்னீரையுஞ் சிரசிலே வைக்கப்பெற்ற ஆனந்தமாகிய மகிழ்ச்சியினுலன்றோ மூன்று கண்ணினை யுடையவன் மன்றினிடத்திலே நடனமாடுகின்றவாறு. (௩௫)

இரங்கல்-எண்சீர்க்கழிநெடில்-ஆசிரியவிருத்தம்.

ஆடும்படநாகணைமேலணையு
மமலன்கமலத்தவனுஞ்சிவனு
நாடுந்திருமாறுயில்கோயிலின்வாய்
நறைவார்பொழிலூடுறைவாரளகக்
காடுங்குழையைச்சாடுங்குவளைக்
கண்ணுங்குதலைப்பண்ணுங்கரியின்
கோடுந்தாளத்தோடுமபுருவச்
கோதண்டமுமுதண்டமுமே

(இ-து) எடுத்தாடு படத்தினையுடைய பாம்பணையிற் பள்ளிகொள்ளும் பரமபுருஷோத்தமனானவருந் திக்கமலத்துதித்தவனும் அரனுமாராய்ந்தறிதற்கரிய திருமாலானவர் திருக்கண்வளருந் திருவரங்கத்தினிடத்திலே நறுநாற்றங்கமழும் நந்தவனத்திலே நண்ணுந்தலைவியாருடைய அளகாடவியுங் காதிலணிந்த குழையையவந்தலைக்குங் குவளை மலரையொத்த கண்ணுங் குதலையாகிய பண்ணினின்மொழியு மானைக் கொம்பையொத்தழகிய கொங்கையு முத்தினாலே யமைத்ததோடும் புருவமாகியவில்லுமாகவே தோன்றுகின்றது மூகண்டகோளமுழுதும்-எ-று (௪௬)

கைக்கிளை-எழுசீர்க்கழிநெடில்-ஆசிரியச்சந்தவிருத்தம்

அண்டமுழுதுண்டவருமிழ்ந்தவரிடந்தவ
ரளந்தவர்வளர்ந்தருளுமா
சண்டபணவைந்தலையனந்தசயனந்திகழ்
தருந்திருவரங்கர்வனமேல்
கண்டதொருகும்பதிலிரண்டுமகரங்களொரு
கஞ்சமிருவெஞ்சிலைமணம்
கொண்டதொருகொண்டலிருகெண்டையொ
தொண்டையிருகும்பமொருசெம்பணிலமே

(எ-து) அண்டபகிரண்டங்களெல்லாம் போலக்மாகவுண்டுமிழ்ந்து மீட்ந்துமளர்ந்தவர் அதுவன்றியும் நீண்டுவளரும் பெரியகொடிதாகிய தடங்களைப் பொருந்தியவைந்தலையை யுடைய வனந்தசயத்திலே திகழ்ந்தருளிய திருவரங்கேசருடைய வனாயினிடத்திலே என்கண்ணினாற் காணத்தகக்கவிவளஞ்சிக கொம்பொள்றுண்டு அதிலேயிரண்டு மகரங்களு மொருதாமரையு மிரண்டுவில்லும் மணம்பொருந்திய வொருமேகமும் இரண்டு சேற்கெண்டையும ஒரு ஆதொண்டைப் பழமும் இரண்டு குடமும் ஒரு சங்குமுள்ளதென்றவாறு,—(இன்னங்கேளென்னில் - இளவஞ்சிக் கொம்பிடையாகவும், மகரக்குழை காதாகவும், தாமரை முகமாகவும், வில் புருவமாகவும், மேகம்-அளகமாகவும், மீனம்-விழியாகவும், ஆதொண்டைப்பழம் வாயாகவும், குடங்-கொங்கையாகவும், சங்கங் கழுத்தாகவும், கொண்டு தலைவன் தலைவியை வியந்துரைத்தது) (௪௭)

இரங்கல்-தாழிசை.

செம்பொன்னரங்கத்தரங்கநீர் சீதளசந்திரவாவிசூழ்
கம்புளுடன்பயினுண்ணாகர் காதலையென் சொலியாறுவென்

வெம்பனிவந்தபின்வேனிலும்வந்ததுவேனில்போய்ப்
பைம்புயல்வந்ததுசென்றனம் பாதகர்மந்திலர்காணுமே

(எ-து) செம்பொன்னினாற்செய்த வரங்கத்தினிடத்திலே யலைகள்பொருந்திய நீரளாவிய சீதளச்சந்திர வாவியாகிய சந்திரபுஷ்கரணியைச் சூழப்பட்ட கம்புளாகிய சம்பங்கோழியுடனேகூடத் துயிலாநின்ற நாரைகளா யான்கொண்டகாதலை யென்னென்றுசொல்லி யாற்றிக்கொள்ளப்போறேன் வெவ்விதாகிய பனிக்காலமும்வந்தது இரக்கமின்றி நம்மைவிட்டுப்பிரிந்து போனபாதக ரின்னம் வந்திலர்காணுமென்றவாறு (சஅ)

சம்பிரதம்-பன்னிருசீர்க்கழிநெடில்-ஆசிரியவிருத்தம்

காணாதபுதுமைபலகாட்டுவென்கட்செவிக
ளெட்டையுமெடுத்தாட்டுவேன்
கடல்பெருகுவென்பெரியகனகவரையைச்சிறிய
கதிடுனிலடைத்துவைப்பென்
வீணாரவாரமுதண்டமுறவிளைவிப்ப
னிரவுபகனமாறுவேன்
விண்ணையுமறைப்பனெழுமண்ணையுமெய்ப்பனிவை
விளையாடும்வித்தையென்றால்
நீணாகணைப்பள்ளியிற்றிருவரங்கத்து
நெடிதூழிதுயிலும்பிரான்
நெற்றிக்கண்ணனவனைநான்முகனைவாசவனை
நிமிரும்இருசுடரைமுதலாச்
சேணாடர்யாவரையுமடிமைகொண்டவரவர்
சிரத்திற்பொறித்துவிட்ட
திருச்சக்கரப்பொறியிலாதவொருகடவுளைத்
தேடியினிமுன்விடுவனே

(எ-து) காணப்படாதவதியங்களை யெல்லாம் காட்டுவேன் அட்டமாநாகங்களையுமெடுத்தாட்டுவேன் சத்தசாகரங்களையும் பானம்பண்ணுவேன் பெரிதாகிய மகமேருகிரியைச் சிறிதாகிய கடுகிலேயடைத்து வைப்பேன் வீணாரவாரமாக மூதண்டகோளங்களினு முண்டாக்குவேன் இரவுபகலாகவும் பகலிரவாகவு மாற்றுவேன் ஆகாயதலதமறைப்பேன் ஏழு

லகங்களையுமெடுப்பேன் இது வெல்லாம விளையாடும்வித்தையல்ல நீண்டநாகணையிற்றிருவரங்கத்திலே நெடிதான வூழிகாலமு மறிதுயிலமர்ந்தவெம் பெருமானனவர் நெற்றியிலேகண்ணுண்டான திரிநேத்திரனைத் தேவேந்திரனைச் சதுமுகப்பிர்மாவைச் சந்திரசூரியர் முதலானவிண்ணுலகிலுள்ளவர்கள் யாவரையும் அடிமைக்கொண்டு அவரவர்சிரங்களிலே யெழுதிவிட்ட அழிகிய சக்கரப்பொறி யில்லாதவரா யிருக்கப்பட்டவொருகடவுளைத் தேடிக்கொண்டுவந்துஇனிமுன்னே விடுவே னென்றவாறு (என்னவே சக்கரப்பொறியில்லாத கடவுளெவ்வுலகினுமில்லை யாதலாற் றேடிவினிமுன விடுவேனென்ற ருமையறிவித்ததெனக்கொள்க) (௪௯)

எண்சீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்.

முன்னமேழ்புரவியானிரவிகாய்வெயிலினால்
முத்தரும்பியகலாமுழுமதித்திருமுகத்
தன்னமேயின்னமோர்காவதம்போதுமேல்
அகலுமிப்பாலையப்பாலனார்க்காவதம்
என்னையாளுடையவன்றுயிலராவமளியும்
அகலுமிப்பாலையப்பாலனார்க்காவதம்
என்னையாளுடையவன்றுயிலராவமளியும்
இலகுபொற்கோயிலுமிந்துவின்பொய்கையும்
புன்னைவாய்நீழலும்புரிசையும்மதுகரப்
பூவிரித்துறையுமக்காவிரித்துறையுமே

(எ-து) முன்னமே ஏழுகுதிரை கட்டப்பட்ட இரதமுடைய விரவியால் எரிக்கப்பட்டவெய்யிலினாலே வேர்வையாகிய முத்தரும்பிய பூரண சந்திரோதயமபோன்ற அழகிய முகத்தினையுடைய அன்னத்தை யொத்த நடையினையுடையவளே இப்போது நாமிங்ஙனம் நின்று நடந்துபோகுதற்கு முன்னம் இன்னம் ஒருகாதவழி நடந்தளவில் அங்ஙனமழற்று நின்ற பாலைவனமுண்டு அந்தபாலைவனத்துக்கு மப்பால் அரைக்காவதமுண்டு அவடத்திலேயென்னை யாளாகவுடையவருட்கண் வளராநின்ற வனந்தனாகிய மவளியும் விளங்கப்பட்ட அழகின் மிக்கதிருவரங்கமும் சந்திர புஷ்கரணியும் புன்னாக விருக்ஷ நிழலிலுஞ் சத்தப்பிரகாரமும் வண்டுகள் படியப்பட்ட புஷ்பங்கள் மாராநின்ற பூங்காவனமும் அழகிய காவேரிதீர்த்தமும் காணக்கடவோம் அவ்வளவும் நீமனந்தளராமல் வா வேண்டுமென்றவாறு. (௫௰)

கட்டளைக்கலித்துறை.

துறைமதியாமலிக்கான்யாறுநீந்திச்சுரங்கடத்தல்
நிறைமதியாளர்க்கெழுக்கமன்றுநெடுமாலரங்கத்
திறைமதியாவருமாரர்வமிர்தன்னவிந்துநுதற்
குறைமதியாள்பொருட்டாற்கங்குல்வாரலெங்கொற்றவனே.

(எ-து) இதுவழங்குந்துறை - இதுவழங்காத் துறையென்று மதியாம ற் பெரியகான்யாற்றை நீந்தி யரியவழியைக்கடக்கின்றமை-யுன்னைப்போ ல நிறைத்தவறிவுடைமை யாளர்க்கொழுக்க முடைமையன்று-நெடுமாலா கியதிரிவரங்கத்தி லுறையப்பட்ட எம்பெருமானுனவர் முன்னேசமுத்திர ந் தானம்பண்ணவந்துநிறைந்த வமுதத்தையொத்த இந்தக்குறைமதியாகி ய பிறையையொத்த நெற்றியையுடையவள் பொருட்டாயிவ்விருளின்கண் வாராதொழிவாயாகவெம்முடைமதலைவனே யென்றவாறு. (௩௪)

மறம்-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

கொற்றவன் றன்றிருமுகத்தைக்கொணர்ந்ததூதா
குறையுடலுக்கோமறவர்கொம்பைக்கேட்டாய்
அற்றவர்சேர்திருவரங்கம்பெருமாடோழன்
அவதரித்ததிருக்குலமென்றறியாய்போலும்
மற்றதுதான் றிருமுகமேயானாலந்த
வாய்செவிகண்மூக்கெங்கேமன்னர்மன்னன்
பெற்றவளவரசானாலாலின்கொம்பைப்
பிறந்துகுலத்துக்கேற்கப்பேசுவாயே

(எ-து) கொற்றவனாகியவேந்தனுடைய திருமுகத்தைக்கொண்டுவந்த தூதனே இந்தச் சிரமிழந்தமுண்டமாகிய யங்ஙனந்தனித்துக்கிடந்த கு றையுடலுக்கோ மறவராகிய வேடர்பெற்ற வஞ்சிக்கொம்பையொத்த எங் கள்பெண்ணைக்கேட்டாய் ஆசாபாசங்களையுந்தவரிய தபோதனர்களனுக ப்பட்ட திருவரங்கப்பெருமாள் தோழனான குகனெனவேடன் திருவவதா ரஞ்செய்த திருக்குலமென்றறிந்ததில்லையோநீகொண்டுவந்தது திருமுக மேயானால் மற்றுமிதனுடைய வுருப்பாகிய மெய்-வாய்-கண்-மூக்குச-செ வியானதெங்கே-போய்விட்டது-மன்னர் மன்னவனானவன் பிறந்தகுலமா

சனலதற்கினமாகிய ஆவின்கொம்பைப்பிறந்தகுலத்துக் கியற்கையாகப் பேசிப்பெண்கேட்பாயென்றவாறு (ருஉ)

இதுவும் அது-எழுசீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்

பேசவந்ததூதசெல்லெரித்தவோலைசெல்லுமோ
பெருவரங்களருளரங்கர்பின்னைகோள்வர்தாளிலே
பாசம்வைத்தமறவர்பெண்ணை நேசம்வைத்துமுன்னமே
பட்டமன்னர்பட்டதெவகள் பதிபுகுந்துபாரடா
வாசலுக்கிடுமபடல்கவித்துவந்தகவிகைமா
மகுடகோடிதிணையளக்கவைத்தகாலுநாழியும்
வீசுசாமரங்குடிற்கிருடுத்தகற்றைசுற்றிலும்
வேலியிட்டதவர்களிட்டவில்லும்வாளும்வேலுமே

(எ-து) பெண்பேசுதற்குவந்ததூதனே-கேட்பாயாக் கனாயானரித்தபணஞ்செருகுசெல்லுமோபெரியவரங்களை அடியார்களுக்களிக்க வல்ல அரங்கநாயகராகிய இலக்குமிகாந்தருடைய்திருவடிகளிலேயாதரவான மறவர்பெற்ற பெண்ணைவேண்டிய நேசம்வைப்பதற்கு முன்னமேபட்டவர்த்தனராகிய இராஜாதி ராஜாக்கள் பட்டபாடுகளை-எங்கள்பதியிலே புகுந்துபார்ப்பா எங்கள்வாசலுக்கு மூடும்படல்களாக அவர்கவித்துவந்த குடைகளைச்செய்தோம் அதுவுமன்றி எங்களுக்குத் திணையளக்கமரக்காலும் நாழியுமாகவவர்க ளணியப்பட்ட பெருமைபெற்ற கிரீடங்களைச்செய்தோம் - அதுவுமன்றியெங்கள்குடிசைக்கு விழற்கற்றையாகவவர்களுக்கு வீசிவந்தவெண்சாமரைகளைச் செய்தோம் அதுவுமன்றி யெங்கள்தோட்டத்துக்குச் சுற்றிலும்வேலியாக அவர்கள் தொடுக்கப்பட்டவில்லும் வாளும் வேலும்மற்றுமுள்ள ஆயுதங்களைச்செய்தோமென்றவாறு

மடக்கு-நேரிசைவெண்பா.

வேலையுலகிற்பிறக்கும்வேலையொழிந்தோமில்லை
மாலையரங்கேசனை மாலையினுங்-காலையினும்
உன்னினோந்தோமில்லையுட லெடுத்தவன்றுமுதல்
என்னினோந்தோநெஞ்சேயிருந்து.

(எ-து) வராய்மனமே-வேலையாகிய சமுத்திரஞ்சூழ்ந்த பூலோகத்திலே இறத்தலும் பிறத்தலுமாகிய வேலையையொழிந்த நாமல்லர் மாலான

அரங்கநாயகனைக்காலையும்மாலையுங் கருதிக்கருத்துருகி னைந்தநாமுமல்ல ஆதலாலிந்தச்செனனமெடுத்த நாள் முதலெனனகருமத்தைக்குறித்திருந் தோம்-எ-று (௰௪)

ம்டக்கு-கலிநிலைத்துறை

இருமபுவனம்விரும்புவன மணியரங்கர்பணியரங்க
ரிமயநண்ப
வருங்கொடியின்மருங்கொடியின்மதங்குழைக்குங்கனக்குழைக்கு
மனங்கன்சாபக்
கரும்புவருமபொரும்புவருமுத்தநகையொத்தநகை
காந்தள்பூந்தேன்
மருங்குழலுங்கருங்குழலுமுருகுவலையிருகுவளை
மழைக்கண்டாமே

(எ-து) பெரிதாகிய புவனமுழுதும்போனகமாகவிரும்பிய துளபமாலை யணிந்தவரங்கநாயகர் - பாம்பைத்தானே பள்ளிகொள்ளுமிடமாகக்கொ ண்டவருடைய இமையமாகியமலையினிடத்திற் பாங்கனேவராகின்றபூங் கொடியை யொத்தவளுடைய யிடையானது வொன்றுமேயென்னுடைய வொழிவில்லாத மனதைக் குழைக்குமானல் மற்றுங்கனத்தகுழையையு டையாளுக்குள்ள அவையவமானகாமனுடைய வில்லாகியகரும்பின் றுரு வையொத்துப் பொருத்தப்பட்ட புருவமும்முத்தினிதொளியையொத்தமூ ரலுங் காந்தன்பூவின்மொய்க்கும்வண்டினங்கள்பக்கத்தேயழலாநின்ற கரி யகூந்தலும் நறுநாற்றம்வனைந்த இரண்டுகுவளையுங் குவளைமலரையொத்த குளிர்ச்சியையுடைய கண்ணுமானவித்தனையும் வேண்டுமோவென்று ற லைபழிக்க யிடையொன்றுமமையுமென்றவாறு. (௰௫)

பதினன்குசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்
இதனுள் - கேசாதிபாதவரை-௩௨-அவயவங்களும்
அவற்றின் உவமானங்களோடுகாண்க

மழைபிறைசிலைவேல்வள்ளையெள்ளிலவின்
மலர்முல்லைமதிவளைகழையாழ்
வாரிசங்கெளிறுதத்தைவாய்கலயம்
மணிவடபத்திரமெறும்பூர்

அழகுநீர்த்தரங்கத்துடிசுழியரவம்
    அரம்பைஞெண் டிளவரலாமை
அணிதராசிணைகந்துகந்துகிந்தரளம்
    அம்புயமரங்கநாட ணையார்
குழைநுதல்புருவம்விலோசனங்காது
    நாசிவாய்நகைமுகங்கண்டம்
குலவுதோண்முன்கையங்கைமெல்விரல்கள்
    கூருகிர்கொங்கைக்கண்வயிறு
விழைதருமுரோமம்வளையிடையந்தி
    விரும்புமல்குல்தொடைமுழந்தாள்
மிளிர்கணைக்கால்கள்புறவடிபாடு
    மென்குதிவிரனகந்தாளே

(எ-து) அரங்கமாகிய நாட்டின்தொழிலையொத்த மங்கைமாரினுடைய அவயவங்களாகிய அளகமும்நெற்றியும் புருவமும்கண்ணும் காதும் நாசியும் வாயும் நகையும் முகமும் கழுத்தும் குலவப்பட்டதோளும் முன்கையும் உள்ளங்கையும் மெல்லியவிரல்களும் கூரியநகங்களும் கொங்கைகளும் வயிறும் விழையப்பட்ட ரோமவொழுங்குவயிற்றின்வளையும் இடையுமுந்தியும் விரும்பப்பட்ட அல்குலுந்தொடையு முழந்தாளு மிளிராநின்றகணைக்காலும புறங்காலும் பரடும் மேன்மையாகியகுதிக்காலும் விரலும் நகமும் உள்ளங்காலுமாகிய இவ்வவயவங்களெல்லாம் எவையெவைக்கொக்குமென்றால் முகிலையும் பிறையையும்யாழையும் தாமரையையும் களிறுகியமீனையும் கிள்ளைவாயையும் கலசங்களையும் மணியையுஞ் செறிந்த ஆலிலையையும் எறும்பூர்தலி னொழுங்கையும் அழகிய நீர்த்தரங்கத்தையும் துடியையும் பாம்பையும் கதலியையும் ஞெண்டையும் இளவராலினையும் ஆமையையும் அழகியதராசினையும் பந்தையும் பவழத்தையும் முத்தையும் அம்புயத்தையு மொக்குமென்றவாறு,—(எங்ஙனேயெனில் அளக பாரத்துக்கு மழைமேகம் நெற்றிக்குப் பிறையும் - புருவத்துக்கு வில்லும்-கண்ணுக்கு வேலும் - காதுக்கு வள்ளையும் - நாசிக்குஎள்ளின் பூவும்-வாயக்கு இலவின் பூவும் - நகைக்கு முல்லையும்? முகத்துக்கு - மதியும் - கழுத்துக்குச் சங்கும் - தோளுக்கு மூங்கிலும் ? முன்கைக்யாழும் - உள்ளங் லகக்குத் தாமரையும் விரல்களுக்குக் கெளிற்றி மீனும் - நகங்களுக்குக் கிளிமூக்கும் - கொங்கைகளுக்குக் கலசமும்

வயிறுக்கு ஆலிலையும், அவ்வயிற்றிலுள்ள வுரோமவொழுங்குக் கெறும் பூகலும்-புருவம் அவ்வயிற்றிலுள் வளைக்கும், நீர்த்தரங்கமும - இடைக் குத்துடியும் பறட்டுக்குத்தராகம்-குதிக்காலுக்குப் பந்தும், விரலுக்குப் பவழமும், தந்தத்துக்கு முத்தும், உள்ளங்காலுக்குத் தாமரையையும்: இவ்வகை யுவமானங்கண்டுகொள்க. (ருள

கைக்கிளைமருட்பா.

தாளிரண்டும்பாரொன்றுந் தார்வாடும்வேர்வாடும்
வாளிரண்டுங்காதிரண்டில் வந்திமைக்கும்-கோளிரண்டும்
ஐவகைப்பூதமமைந்தருள்ரங்கர் மைவளர்சோலைமலையில்
தெய்வமல்லளித் திருவுருவினவே

(எ-து) இரண்டுகாலும் பூமியிலேபொருந்துதலினாலும் மாலைவாடுதலினாலும் வேர்வையாடுதலினாலும் வாளையொத்த இருவிழியும் இருசெவியினிடத்தில் வந்து வந்திமைத்தலினாலுங் கோளிரண்டாகிய விராகுக்கோள் முதலாகிய கிரகங்களும் பஞ்சபூதங்களையும் படைத்தருளிய வரங்கநாயகருடைய் மை மேகந்தவழுஞ் சோலைமலையினுள்ள் தெய்வமாகிய அணங்கல்ல இவ்வழகியவடிவையுடையவள் பூதமாதராக வேண்டுமென்று தலைவனறிந்துரைத்த தென்றவாறு (ருஎ)

ஊசல்எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்,

உருமாறிப்பலபிறம்புபிறந்துஞ்செத்தும்
ஊசலாடுவதடியேனொழியுமவண்ணம
கருமாயத்தென்னெஞ்சைம்பலகையாக்கிக்
கருணையெனும்பாசத்தைக்கயிறுப்பூட்டி
மருமாலைத்துவளசியவாடிரூசல்
மணிமகரக்குழையசைய்லாடிரூசல்
திருமாறுபுவிமாதோடாடிரூசல்
திருவரங்கராசரேயாடிரூசல்

(எ-து) உருவமானது மாறிப் மாறிப் பலபல் பிறவியாகிய யோனிதோறும் பிறந்து மிறந்து மூசலாடுதலை யடியேனொழித்துவிடும்படிக்குக் கருமையாய் மாயையோடுங் கூடின யென்னெஞ்சைப்பலகையாகஞ் செய்து

தேவரீருடைய கருணையாகிய பாசத்தைக் கயிறாகப்பூட்டி நறுநாற்றமிக்க துளவமாலையசைய ஆடக்கடவீர் இவ்வூசலை; மணிமகரக்குண்டலங்களசைய ஆடக்கடவீர் இவ்வூசலைச் சீதேவி பூதேவியோடு மாடக்கடவீர் இவ்வூசலைத் திருவரங்கராசனே யாடக்கடவீர் இவ்வூசலையென்றவாறு (௫௮)

கலிநிலைவண்ணத்துறை.

ஊசல்வடம்போலூர்சகடம்போலொழியாமே
நாசவுடம்போடாவிசுழன்றேநலிவேனோ
வாசவனும்போதாசனனுங்கூர்மழுவோனும்
நேசமுடன்சூழ்கோயிலரங்காநெடியோனே

(வ-து) ஓடியோடிவருவனவும்போவனவுமானவூசற்கயிறுபோலுமூரப்பட்ட சகடக்கால்போலுமோய்வில்லாமல் அனந்தஞ் செனனங்களோறுமெடுத்தெடுத்து நசிக்கப்பட்டவுடம்பினுடனே கூட ஆவியானது சுழன்று நலியக்கடவேனோ வாசவனாகிய இந்திரனும் போதாசனனாகி பிரமதேவனும் கூரிய மழுவாயுதத்தையுடைய வுருத்திரனும் நேசமுடனே சூழ்ந்து துதிக்கும் கோயிலாகிய அரங்கத்தையுடையவனே நெடியமாலானவனே யென்றவாறு (௫௯)

தழைகட்டளைக்கலித்துறை.

நேசத்தழைக்கும்மதயானைமுன்புநின்றோனரங்கம்
பேசத்தழைக்குமென்னன்பனையாய்பெருங்கற்பத்தின்
வாசத்தழைக்குநறுந்தழைகாணிதுமந்தத்தென்றல்
வீசத்தழைக்குந்தழைபோற்கெடாதுவிலையில்லையே

(எ-று) அன்பினாலே ஆதிமூலமென்றழைத்த மதயானை முன்னேவந்து காத்தவருடைய திருவரங்கத்தைப் பேசுந்தோறும் பேசுந்தோறுஞ் செழித்துத் தழைக்கப்பட்டவென்னுடைய நண்பையொத்தவனே பெரிய கற்பகவிருட்சத்தினுடைய மணம்பொருந்திய தழைகாணுதலால் மந்தமாருதம்வீசத்தழைக்கும் மற்றுமுள்ள விருட்சத்தின் தழையைப்போலக் கெடாது அதுவுமன்றி இதற்கு விலையுமிவ்வளவென்று மதிப்பில்லையென்றவாறு (௬௰)

எண்சீர்க்கழிநெடில்-ஆசிரியவிருத்தம்

விலையானதிலையென்றுநீதந்தமுத்தம்
வெயதந்தமுத்தாகில்வெற்பாவியப்பால்
இலையார்புனற்பள்ளி நாராயணன்பால்
எந்தாயரங்கா லிரங்காயெனப்போய்த்
தலையாலிரங்கும் பணிப்பாய்சுமக்கும்
தன்றாதையவர்தா மரைத்தாள்விளக்கும்
அலையாறுசூடும் புராணங்கள்பாடும்
ஆடும்பொடிப்பூசி யானந்தமாயே

(எ-று.) நாயகனே சொல்லுவாயாக இதற்கு விலைவிடப்படாதென்றுநீ கொடுத்தமுத்தானது வேயீன்ற முத்தேயாகில் அது யிலைபடர்ந்தபுனலி லேதுயிலிடங்கொண்டருளி ஸ்ரீமந்நாராயணனிடத்திலேபோ யெனக்கு த் தாயானவனே அரங்கனே இரங்கவேணுமென்று கபாலத்தைக் கையி லேந்தி யிரக்கும்பாம்பாகிய பாயலைச்சுமக்குந் தன் தாதையாகிய பிரமதே வனானவன் அவருடைய பாததாமரையை விளக்கப்பட்ட அலையாகியகங் கையைத் தரிக்கும் புராணங்களை யெல்லாம் புகலும் பொடியாகிய நீறைப் பூசிக்கொண்டு ஆனந்தமாக நின்றாடவும் ஆடுமெய்த்தன்மையொன்று மி யால் அம்முத்தமன் றென்றவாறு,—(இதின்கருத்து வேயீன்றமுத்த மெ ன்பது ஈசுரனுகையா லவர் விஷ்ணுவினிடத்திலே செய்தமையைவிநோ தமாக விரித்தா றென்றறிக) (௬௧)

தவம்-கட்டளைக்கலித்துறை

ஆனந்தமாயரங்கர்க்கேயுயிர்களடிமையென்னும்
ஞானந்தனாலைம்பொறிவாசல்சாத்திநற்றாளைப்பற்றி
ஈனந்தரும்பற்றுமற்றென்றும்யானெனதென்றுமபி
மானந்தவிர்ந்திருப்பார்க்கிது போலிலைமாதவமே

(எ-து) ஆனந்தமாகிய பேரின்பத்தி லழுந்தியரங்கனுக்கே உயிர்களாகி ய ஆன்மாக்கள் அடிமையென்றறியத்தக்க ஞானமாகிய கபாடத்தினாலே ஐம்பொறியாகிய-மெய்-வாய்-கண் - மூக்குச் - செவியெனனும், வாயல்க ளையடைத்து நன்மை நல்கும் நளினமாகிய தாளைப்பிடித்திட்டு வீனத் தைத்தராநின்ற ஆசாபாசமான பற்றேதுமின்றி யானென தென்னுஞ்செ ருக்குமுதலாகிய மானாபிமானங்களைத் தவிர்ந்திருக்கத் தக்கனவர்களுக்கி தைப்போலொத்த தவமியாதொன்றும் இல்லையென்றவாறு, (௬௨)

இதுவும்அது எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

மாதவங்களென்றோதவங்களில் மருவுசீவனென்றொருவநீபெரும்
பூதமல்லையிந்திரியமல்லையைம் புலனுமல்லைநற்புந்தியல்லைகாண்
சீதரன்பரந்தாமன்வாமனன் திருவரங்கனுக்கடிமைநீயுனக்
கேதுமில்லையென்றறியந்தபின் ஈதின்மாதவமில்லையெங்குமே

(எ-து.) பெருமைமிக்க தவங்களென்று சொல்லப்பட்ட அவங்களிலே சிவனென்று மருவப்பட்ட ஒருவனேகேளாய் மேவுதற்கு நீ வந்து பஞ்சபூதமுமல்ல - பஞ்சேந்திரியமுமல்ல ஐம்புலனுமல்லஅதுவுமனறி இப்புந்தியு மல்லவே காணுகையால் சீதரனென்றும்; வாமனனென்றும், சிறந்ததிருவரங்கேசனுக்கே அடிமையானேன் எனக்கேதொரு குற்றமில்லை என்றறிஇப்படியெறிந்தாயாகிற் பின்பு இதை விடமாதவமானதே தொன்றுமில்லை யென்றவாறு (சுஙு)

இரங்கல்-கட்டளைக்கலித்துறை

எங்காந்தளங்கைநல்லீரென்செய்கேனிரண்டேந்திழையார்
தங்காந்தனென்றறிந்தாலு மில்லாதுதனைக்குநெய்க்கும்
அங்காந்தசெம்பவளத் தெம்பிரானரங்கன்புயங்கள்
செங்காந்தமால்வரையோ விரும்போவென்றனசிந்தனையே

(எ-து) உம்முடைய காந்தாளாகிய அங்கையையுடைய நங்கைமீர்களே கேளீர் யானென்னசெய்யப்போறேன் ஏந்திழையாராகிய ஆவரணங்களுடைய சீதேவிக்கும் பூதேவிக்குங் கணவனென்றறிந்தே னாயினும் என் சிந்தையானது தரித்து நிற்பதில்லை தளையையுண்பதற்கும் நெய்யைக்குடிப்பதற்கும் அண்ணாந்த செம்பவழம்போன்ற திருவாய் மலரையுடைய எம்பிரானாகிய அரங்க நாயகருடைய திருப்புயங்கள் செவ்விதாயுன்னிதமாகிய காந்தக்கல் மலையோ எனதிதையமான திரும்போவென்றவாறு;—(இன்னங்காந்தத்துக்கு மிரும்பிற்கும் கண்டளவே கலப்பதுகாரணமாதலால் செங்காந்தமால்வரையோ இரும்போ வென்தன் சிந்தனையே யென்றுரொன்பது.) (சுச)

களி-தாழிசை

சிந்தையிற்குடிகொண்டிருந்து திருக்கருத்தடிமைக்கொளும்
திருவரங்கர்பொருப்புயர்ந்த திருப்புயம்புகழ்களியரோம்
புந்திமிக்கதுவந்துபுக்கது போதமாதர்களெழுவர்தம்
பூசையேமகபூசையென்றது புதுமைய்ன்றிதுபுத்தர்காள்

அந்தரத்திமையோரருந்துமருந்தும்வெள்ளையதன்றியே
அரியசாதிகொளாதமானிடர்களிடத்தினுமில்லையே
மந்திரத்தினிலாததேவதைவானகத்தினிலில்லையே
வடிவிலாதவையண்டகோளம்வளைந்தவைப்பினுமில்லையே

(எ-து) புத்தர்களே வாருங்கள்-புகல்க்கேளீர் - சிந்திப்பவருடைய சிந்தையிலே-குடியாய்-விட்டு நீங்காம லிருந்து-திருக்கரமாகிய அஞ்ஞானத்தையறுத்தாட் கொண்டருளாநின்ற திருவரங்கேசருடைய வரையிலுமுயர்ந்த புயங்களைப் புகழ்ந்து கொண்டாடும் களிப்பையுடைய களியாகாங்கள் மனதுக்கிதமிகுந்த மகிழ்வானது வந்துவாய்த்தது அதேதென்றால் சத்தமாதர்களுடையவாம் பூசையேபெரிதாகிய பூசையென்பது - அதுசுவமாய் நடக்கின்றதல்ல அதெப்படி யென்னில் - விண்ணுலகிலுள்ள விண்ணவரும் பொசிக்கப்பட்ட அமுதமும் வெள்ளைதான் - அதுவுமன்றி அரிதாகிய சாதிகொள்ளாதமானிடர் அகண்ட பூமியினிடத்திலேயில்லை- அதுவுமன்றிப்பெருமைமிக்க மந்திரத்தில் வசப்படாததெய்வங்கள் வானுலகத்திலுமில்லை அதுவுமன்றி யொருவடிவில்லாத வஸ்து இந்த அண்டகோளம் வளர்ந்தவைப்பிலேயு மில்லையென்றவாறு,(இதன்கருத்து தேவரமுதம்-அதுவும் நிறமொன்றாகையால் வெள்ளையென்றார்- சாதியென்பது கள்ளாகையாற் கள்ளுக்குடியாதவ ருலகத்திலில்லையென்றார் - மந்திரமென்பது மதுவாதலால்-மதுவில்மகிழாத தெய்வம் வாநிலு மில்லையென்றார்-வடிவென்பது மதுவாதலால்-மதுவில்லாதவஸ்து அண்டகோளவைப்பினுமில்லை யென்றாரென்று-இதனுள்ளுரை கண்டுகொள்க (௯௫)

குறளடிவஞ்சிப்பா-இவைபத்தொன்பதும்வஞ்சி-அடிகள்

இல்லறமெனத்துறவறமெனச்-சொல்லறம்பிறதுணையன்றெனப்
பவக்கடலுட்டுவக்கறுப்பான்-காவிரியிடைப்பூவிரிபொழில்
சிலமந்திகள்சினைதாவப்-பலதெங்கின்பழக்குலையுதிர
அடர்கமுகின்மிடறொடிதரத்-தேமாங்கனிசிதறுபூவிழ
முடப்பலவின்குடக்கனியுக-அரம்பைக்கனிவரம்பிற்புக
வயணமருங்கின்மலர்ப்பொய்கையுள் - துயில்வலம்புரிதுண்ணனவுறத்தா
அட்டாமரைத்தவிசுறைதருசூலட்டோதிமம்பேஎட்டேனேழ
மயிற்சேவன்மணங்களிப்பக்-குயிற்பேடைக்குலமொழிப்ப

மழைமுகிலெனமுழவதிர்தரு-திருவரங்கப்பெருநகருள்
அரவணைமிசையறிதுயிலமர்ந்-தருள்புரி (இதுதனிச்சொல்)

இதுஈரடிநேரிசை ஆசிரியச்சுரிதகம்.

திருநாரணனைச்சேர்ந்தனம்
சரணாரவிந்தஞ்சமென்றிரந்தே

(எ-து) இல்லறமென்றுந் துறவறமென்றுஞ் சொல்லத்தக்க அறமுதலானதெல்லாந் துணையல்லவென்று பிறவிக்கடலின துவந்தனையை யறுக்கும்பொருட்டாயக் காவேரியினிடத்திலே பூவிரிந்த பூங்காவிற் சிலகுரங்குகள் கிளைகளிற்றுவும்போது பலபல தென்னம்பழக்குலைகளுதிரவும்-நெருங்கின கமுகமரங்களின் மிடறுகளொடியவும் இனிய தேமாங்கனிகளுடனே சிதறிபபூமலர்கள்விழவும்முடமபடவளர்ந்தபலாமரத்தினுடைய குடம்போன்ற கனிகளுதிரவும வாழைக்கனிகள்வரம்பிலேபுகவும் வயலினதுமருங்கின்மலர்ப்பொய்கைக்குள்ளே துயிலப்பட்ட வலம்புரிசங்கமானது-திடுக்கிட்டதிரவுந் தாளையுடைய தாமரைத்தவிசிலே யுறையப்பட்ட குட்டினையுடைய அன்னமானது பெட்டையன்னத்துடனே யெழுந்திருக்கவும்-மயிற்சேவல் மனங்களிப்பவுங-குயிற்பேடைக் குலமொளிப்பவும்-மழைமேகம்போல முழவதிரப்பட்ட திருவரங்கமாகிய பெரியநகரியினிடத்திலே யரவணைமேலே யோகநித்திரையமர்ந்தருளிய வழகியநாராயணனைச் சேர்ந்தனங்காண்-அவருடையசரணாம்புயத்தையே தஞ்சமென்றறிந் தென்றவாறு (௬௬)

மடக்கு எழுசீர்க்கழிநெடில்-ஆசிரியவிருத்தம்

இரவிலையிவின மதியினைமதியுள்
இறையினையிறையுமெண்ணரிய
காவனைக்கரவின்முனிவனைமுனிவர்
கருத்தனைக்கருத்தனைத்துடைத்தாள்
பரமனைப்பரமபதத்தனைப்பதத்துட்
பாரனைப்பாரனைத்தூதும்
அரவனையரவினரங்கனையரங்கத்
தடிகளையடிகள்சேவியுமே.

(எ-து) இரவானவனை-இரவினிலியங்குமதியானவனை- மதிக்குளுறைய ப்பட்டஇறைவனானவனை-இறையுமெனனுசற்கரியகாவானவனை காலவை முனியப்பட்டவனை முனிவர்கள் கருத்தைவிட்டுக்கடவாதவனைக் கருவை த்துடைத்துஆளப்பட்ட-பரமனானவனைப்பரமபதமாயுள்ளவனைப் பதத் துளடங்கப்பட்ட பாறையுடையவனைப் பாரெல்லாம் பரவிப்புகழப்பட் டவோசையாகிய வரவத்தையுடையவனைக்கண்டு அவர்திருவடிகளைச்சே வியுங்களென்றவாறு(அடிகள்சேவியுமென்றது மத்துமாசகளே சேவியு ங்களென்றுமாம் (சுஎ)

இருப்பனிக்காலம்-கலிநிலைத்துறை

சேவிக்கவாழ்விக்குமெங்கோனரங்கன் றிருக்கோயில்சூழ்
காவிற்கலந்தாகசதந்தேகினர்நெஞ்சுகனநெஞ்சமோ
வாவிப்புரததன்னமேமயின்னமேதோவரக்கண்டிலேன்
பாவிக்கனேகந்தனிக்காலமிந்தப்பனிக்காலமே

(எ-து) கண்ணினாற்கண்டுசேவிக்கப்பெறில் வாழ்விக்குமெமக்கிறைவ னாகிய அரங்கநாயகனுடைய வழகிய கோயிலைச் சூழ்ந்தகாவில்கூடிக்கல ந்திருந்து கனவிலும்பிரியேனென்று காதலைக்கொடுத்துப் போனகாதலர் நெஞ்சமானது வன்னெஞ்சுதானா யிருந்ததோதடாகத்தின் பக்கத்தேசஞ் சரிக்காநின்ற அன்னங்காளின் னேரவனைக்குமேது காரணமாகவோ வரக் காண்கிலேன் பாவியெனக்கு இந்தப்பனிக்காலம்பின்னிடுகிறது அநேகங் கோடிகாலந் தனித்திருந்து தள்ளுதற்கரியநெடுங்காலமாயிற்றென்றவாறு

குறம்:-அறுசீர்க்கழிநெடில்-ஆசிரியவிருத்தம்.

காலமுணர்ந்தகுறத்தினன்கருதினையொன்றதுசொல்லுவேன்
பாலகனுச்சியிலெண்ணெய்வார் பழகியதோர்கலைகொண்டுவா
கோலமலர்க்கையின்மஙகைநின்கொஙகைமுகக்குறிநன்றுகாண்
ஞாலமுவந்திடநாளையேநண்ணுவைநம்பெருமாளையே

(எ-து) நான்திரிகாலவர்த்தமானமுந் தெரிந்தகுறத்திகாண் வாரும்பெ ண்ணேநீ நெஞ்சிலே யொன்று நினைத்தாய் அதை நிசமாய்ச் சொல்லுகி றேன் வன்னுடைய பாலகனுச்சிக்கு எண்ணெய்வாரும் பழமையாகியவு டையுத்தரிய முண்டாகிற் கொண்டுவாரும் அழகிய மலரால் நிறைத்த அ

ளகபாரத்தை யுடையே மங்கையே உன்னுடைய கொங்கையின் முகக்குறி ஈன்மையாயிருந்ததுகாண் அதனாலிக் ஞாலமுழுதும் உவப்பெய்தும் படிக்கு நாளைத்தானையணையக்கடவை நம்பெருமாளே-எ-று (௬௬)

மேகவிடுதூது-கட்டளைக்கலித்துறை

பெருமாலையார்க்குரைப்பே னுமக்கேவிண்டுபேசினல்லால்
கருமாலையாயெழுங்கார்க்குலங்காடொண்டர்காற்பொடிதன்
திருமாலைகொண்டதிருமாலரங்கர்தந்தெய்வத்துழாய்
மருமாலைவாங்கிவமமின்னந்திமாலைவருமுன்னமே

(எ-து) நான்கொண்ட பேராசையை கரியவொழுங்கா யெழாநின்றகார்குலங்காள் உங்களுக்கே வாய்விட்டுரைப்பதல்லாமல் உங்களையன்றி யார்க்குரைக்கப்போகிறேன் தொண்டரடிப்பொடியாழ்வார் சொல்லியருளிய திருமாலையைக் கொண்டருளிய திருமாலாகிய அரங்கருடைய திவ்வியமாகிய மனம்பொருந்திய திருத்துழாய் மாலையைவாங்கி வாருங்கள் அந்திமாலையானது வருகிறதற்கு முன்னமேயென்றவாறு, (௬௭)

நேரிசைவெண்பா.

முன்னம்பிறந்தபிறப்போமுடிவில்லை
இன்னம்பிறப்பிக்கவெண்ணாதே-தென்னரங்கம்
மேவிக்கிடந்தானேவீற்றிருக்குநின்பதத்தென்
ஆவிக்கிடந்தானருள்.

(இ-து) அடியேன் முன்னேபிறந்த பிறப்பிற்கு இவ்வளவென்றோரிது முடிவில்லை ஆகையாலின்னமும்பிறந் திறக்கும்படிக்கு உமது திருவுளத் தி லெண்ணவேண்டாம் திருவரங்கத்திலே சேஷசயனத்தில் திருக்கண் வளர்ந்தருள்பவனே யுனது பாததாமரை நிழலிலேயடைந்து வீற்றிருக்கும்படிக்கெனது ஆவிக்குயிடந்தந்தருள்வீராகவேணும்-எ-று. (௬௮

இரங்கல்-மடக்கு-அறுசீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்

அரும்புன்னாகத தடங்காவே
அவாவென்னாகத் தடங்காவே
அரும்போருகக்கண் பொருந்தேனே
அழுநீருகக்கண் பொருந்தேனே

பாம்புக்கட லூர்நாவாயே-பாவிக்கட லூர்நாவாயே
பார்மீதுயரமறியலேயே-படுமென்றுயரமறியலேயே
கருங்கட்கடலேமாசுரவே-களாவேற்சயலேமாசுறவே
கண்டற்போதுகுவர்லுகமே-கங்குற்போதுகுவாலுகமே
குரும்பைத்தழைக்குங்கரும்பனையே-குயில்வந்தழைக்குங்கரும்பனை
யே,குருகீர்ஙந்தமரங்கனாயே-கொணரீர்ஙந்தமரங்களாயே

(எ-து) அரிதாகிய விசாலமாகிய புன்னாகவனமே யான்கொண்ட ஆசையானது என்னிதயத்தி லடங்குதில்லை தாமனாயினிடத்திலே பொருந்தின வண்டேயானமுத நீரருதொழுகையினாற் கண்ணுறக்கங்கொள்ளவில்லையே பரவியகடலிலே யோடாநின்ற மரக்கலமே பாவியேனுக்கு நாவும் வாயுமலர் தூற்றுகின்றது தீயினாற் சுடுந்தன்மையாகுது பூமி மீதுயர்ந்து விழாநின்ற அலையே யான் படுந்துயரங் கண்டறியயில்லையே கருமையாகிய கண்ணையுடைய கயலே பெரியசுறுவே களாந் துருகப்பட்டவெனக்கு அபலாரோ டொத்திருந்தார்கள் மாசானவுறவினருஞ் சாழம்பூ வுகாநின்ற வெண்மணற்குன்றே சங்குலாகிய போர்பொழுது செல்வது அனேகயுகராசி செல்வதென்னும் படிக்காநின்றது குரும்பையானது தழைக்காநின்ற கரியபனையே கோகிலமானது கரும்பனாகிய காமவேளைவரக்கூவுது ஆகையாற் குருகாகியபட்சிகள் சங்குகள்மரப்பட்ட அழபயகளாயே நம்முடைய வரங்கநாயகனாக்கொண்டு வருவீராகவேண்டு மென்றவாறு (எஉ)

இதனுள்பத்துத்தாமனாகளும் ஒன்பது அதிசயங்களுங்காண்க
நேரிசைஆசிரியப்பா.

களாபொருதொழுகுங் காவிரியறே
ஆற்றிடைக்கிடப்பதோ ரைந்தலையர்வே
அரவஞ்சுமப்பதோ ரஞ்சனதலையே
அம்மலேபூத்ததோ ரரவிந்தவனமே
அரவிந்தமலர்தொரு மதிசயமுளவே
கடல்விளிம்புடுத்த கண்ணகன்ஞாலம்
உடன்முழுதளந்த தொருதாமனாயே
வகிரிளம்பிறையான் வார்சடைதேக்கப்
பகிரதிசான்றதோர் பங்கேருகமே
யாவையும்யாவரும் படைக்கான்முகக்

கோவையின்றதோர் கோகனகமே
திருமகட்கினிய திருமனையாகிப்
பருமணியிமைப்பதோர் பதுமமலரே
சடைத்தலைதாழ்த்துச் சங்கரனிரப்ப
முடைத்தலைதவிர்த்ததோர் முளரிமலரே
ஆங்குமண்டோதரி யணிந்தமங்கலநாண்
வாங்கவில்வாங்கிய வனசமுமொன்றே
விரிந்தபுகழிலங்கை வேந்தர்க்குத்தென்றிசை
புரிந்தருண்மலர்ந்ததோர் புண்டரீகமே
மண்டிணிஞாலமும் வானமுமுட்பட
அண்டமுண்டுமிழ்ந்ததோ ரம்போருகமே
கடைசெவந்தகனறு கருமணிவிளங்கி
இடைசிலவரிபரந் தினியவாய்நெடியவாய்
இன்பந்தழீஇய விருபெருங்கமலம்
துன்பந்தழீஇய தொண்டனேனையும்
உவப்புடனொருகானோக்கிப்
பவக்கடல்கடக்கும் பரிசுபண்ணினவே

(எ-து) இருகரையுமோதிப் பச்சிமவாஹினியாய் வராநின்ற காவேரி யென றோராறுண்டு அந்த ஆற்றினிடத்திலே ஐந்துதலையையுடைய வொருநாகங் கிடக்கும் அந்த நாகமானது சுமக்கப்பட்ட வொருநீலமலை அந்த நீலமலையானது செந்தாமரை வனமாயப் புஷ்பிக்கும் அப்படி புஷ்பித்த செந்தாமரை மலர்கள்தோறும் ஒவ்வொரு அதிசயமுண்டு அதிலே முதலாவது கடலை ஆடையாகச்சூழ வுடுத்த விடமகன்றவுலகமுடனெல்லாமளந்த வொருதாமரை யென்னவே வலத்தாளாகுது இரண்டாவது வகிர்ச்சியாக வகிர்ந்ததுபோன்ற இளம்பிறையைத் தரித்த அரனுடையநீண்ட சடையிலே நிரம்பக்கங்கையை யுமிழ்ந்த வொருதாமரை யென்னவே இடத்தாளாகுது மூன்றாவது, உயர் திணையஃறிணையாகிய சராசரங்களையுண்டுபண்ணும் பொருட்டாய் நான்கு முகமுடைய பிரமதேவனைப் பெற்ற வொரு தாமரையென்னவே உந்திக்தானமாகுது நான்காவது, ஸ்ரீதேவிக்கு அழகியவீடாய் பெரிதாகிய கவுஸ்துவமெனப் பெயர் பெற்ற மணிவிளங்கப்பட்ட வொருதாமரை யென்னவே மார்கமாகுது ஐந்தாவது, சடைமுடி தாழ்ந்துச் சங்கரனுவ னிரந்த பவந்தவள்வில் முடையாகிய துர்க்கந்தம் பொருந்திய பிரமகபாலம் அவர்கையைவிட டகலச்

செய்தவொரு தாமரையென்னவே வலக்கையாகுது - ஆறுவது, மண்டோதரி யணியப்பட்ட மங்கலசூஸ்திரம் வாங்க வில்லைவளைத்த வொரு தாமரையென்னவே இடக்கையாகுது - ஏழாவது, மிகுந்த புகழையுடைய இலங்கைவேந்தனாகிய வீடணற்கு அந்தத்தெற்கின் கண்ணுண்டாகி திசையைக் கொடுக்கத்தக்கதாக மலர்ந்தவொருதாமரை யென்னவே மூகமாகுது-எட்டாவது, நீர்சூழ்ந்தமண்ணும் விண்ணுமுட்பட அண்டமுழுதுமுண் டுமிழ்ந்தவொரு தாமரைபென்னவே வாயாகுது-ஒன்பதாவது இருகடையுஞ்சிவந்து விசாலமாய்க் கருமையுடைய மணிபபாவை விளங்கிய இடையிலேசிறிது செவ்வரிபரந்து இனியதாய்நெடியதா யின்பந்தானெதழுவிய இரண்டுபெரிய தாமரையானது யென்னவே கண்களாகுது; அது துன்பந்தானே தழுவியதொண்டனாகிய யென்னையும் உவகையுடனே யொருக்கால்பார்த்து ஒருவராலுங் கடப்பித்தற்கரிய பிறவிக்கடலைக் கடக்கும்படி செய்ததென்றவாறு (எங)

கார்காலம்வண்டு-கலிநிலைத்துறை.

பண்கொண்டவேயூதுசெவ்வாயரங்கேசர்
பைம்பொன்னிநாண்
டெண்கொண்டபேராசைதந்தார்மறந்தார்
கொலிசைவண்டுகாள்
விண்கொண்டமலைமீதுவிண்மாரிபொழிகின்ற
விசைபோலவென
கண்கொண்டமுலைமீதுகண்மாரிபொழிகின்ற
கார்காலமே

(எ-து) பண்ணாகிய இசைபொருந்திய வேய்ங்குழலை யூதப்பட்ட சிவந்தவாயையுடைய வரங்கனுபகருடைய செழுமைபொருந்திய காவேரி நதிசூழ்ந்த நாட்டிலே யெண்ணுதலையெய்தி பேராசையைக்கொடுத்த தலைவரானவர் மறந்துவிட்டாரோ பண்களைமொழியத்தக் வண்டிங்களே விண்ணளாவிய வெற்பின்மேலே விண்ணிலிருந்து விண்மழை பெய்கின்ற விசையைப்போலே யென்னுடையகண் பொருந்தியமுலையின்மேலே கண்ணிலிருந்து கண்மழையெய்கின்ற கார்காலததையென்றவாறு (எச)

கைக்கிளை-கட்டளைக்கலித்துறை.

காரகமோனம்வடதிருவேங்கடக்கார்வரையோ
நீரகமோநெடுவானகமோதுயினீடுபணிப்

போகமோதென்றிருவரங்கப்பெருங்கோயிலென்னும்
ஊரகமோவிடந்தண்காவிநின்றவொருவருக்கே

(எ-து) மேகத்தினிடமோ - அன்றியும் - நன்மையையுடையவடக்கின்கண்ணுண்டாகிய அழகிய திருவேங்கடமென்னு (மை) மேகந் தவழுமலையோ - முன்னீரிடமோ - நெடிதாகிய வானிடமோ - தூக்கமிக்கபாம்பினது பெரிதாகியயிடமோ - அழகிய தெற்குத்திசைக்குத் திருப்பதியாகிய திருவரங்கமென்னும் பெரியகோயிலாகிய வூரினிடமோகுளிர்ச்சியுடைய காவினிடத்திநின்ற வொருத்தியாகிய வொப்பற்ற விவளுக்கிடமாவதென்றவாறு,— (மின்னற்கொடிபோன்றமையால் இவளுக்கிடங்காரமோவென்றூர் வரையாமகளிர் போன்மையால் இவளுக்கிடம் வடதிருவேங்கடக் கார்வரையோவென்றுன் நீராமகளிர்போன்றமையால் இவளுக்கிடம் நீரகமோவென்றூர் நாககன்னியர் போன்றமையால் இவளுக்கிடம் பணிப்பேரகமோவென்றூர், புவிமாதர்போன்றமையால் இவளுக்கிடங்கோலென்னு மூரகமோ வென்றுரென்பதுகருத்து) (எரு)

வஞ்சித்துறை.

ஒருநயம்பேசுவென்-திருவரங்கேசர்தாள்
மருவுமின்னுசமாம்-கருமவன்பாசமே

(எ-து) வாருங்களுலகத்திரே சூட்சத்திலே மோட்சமுண்டாகும்படி ஒருநயமாகிய ஊதியம்பேசுகிறேன் திருவரங்கேசருடைய திருவடித்தாமரைநிழலிலேசென்று சேருங்கள் வீணுகியகருமகாண்டத்திலே வலிதாகியவுங்களுடைய ஆசாபாசமெல்லாம் அதமாய்விடுமென்றவாறு (எசு)

எண்சீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்.

பாசமாமடியர்பானேசமாமடிகளும்
  பைம்பொனுராடையுஞ்செம்பொன்மாமேனியும்
ஆசையாமலருளாள்வாசமார்பகலமும்
  அஞ்சலென்றருள்செயுங்கஞ்சமுங்கருணையின்
தேசுலாவதனமும்மாசிலாமுறுவலும்
  சீரிதாவெழுதகத்தூரிநாமமுமெனக்

சேனர்திருவரங்கேசனர்திகிரியும்
இலகுவெண்சங்குமேயுலகமெங்கெங்குமே.

(எ-து) ஆசையாகிய அடியார்கள் இதயமல ரிடத்திலே - நேசமாகிய திருவடித்தாமரைகளும் - பசுமையுடைய பீதாம்பரமும்-செவ்விதாயழகி ய திருமேனியும்-பொற்றாமரைப் பூவிலுறையப்பட்ட வள்வாசமாகியமா ர்பகலமும் - பரமென்றடைந்தவர்களைப் பயப்படாதீர்களென் றருள் புரி யுங்கரம்புயமும் கைதையாகியதாழம்பூவும்-ஒளிவிளங்கிய திருமுகமும் மாசிலாத புன்முறுவலும்-சீரிதாயெழுதிய கஸ்தூரிநாமமும் -எனக்கிறை யவனாகிய திருவரங்கேசருடைய சக்கராயுதமும்-இலகப்பட்ட வெள்ளிய சங்கமுமேதெரியப்பட்டது உலகமெங்கெங்கு மென்றவாறு (எஎ)

வஞ்சி - விருத்தம்.

எங்கணுநிறைந் துறையுமெம்பிரான்
கொங்கணுகிவண்டுமூரல்கோயில்சூழ்
உங்கள்வரையெங்கள்வரையொன்றியே
மங்கையுனகொங்கைகளைமானுமே.

(எ-து) எள்ளுமெண்ணெய்யும் போலெங்கெங்கும் நிறைந்துறையப்ப ட்ட எம்பிரானாகிய வரங்கருடைய சுகந்தத்துக்காயடைந்து-வண்டினங்க ள் சத்திக்கப்பட்ட திருவரங்கத்தைச்சூழ்ந்த உங்கள்மலையினதிடமும் எ ங்கள் மலையினதிடமும்-நெருங்கி யிடமணித்தாயிருப்ப தெத்தன்மைத் தென்றால்-மங்கையே யுனதுகொங்கையாகிய மலைகள் ஒன்றோடொன்று சமீபத்திருப்பதுபோ லிருக்குமென்றவாறு

இரங்கல்-கலிநிலைத்துறை.

மானர்கேசன்மேலார்மாலாய்வாழ்கோயில்
தேனேர்காபுற்பூவாராயுந்தேனேபோல்
நானுபோகத்தின்பங்கண்டார்நான்வாடப்
போனர்வாராதேதோவோதாய்போதாவே.

(எ-து) கங்கையாகிய பெண்ணானவள் நிறைந்த சடாகேசத்தையுடைய வன்முதலாய் மேலோர்யாவும் அன்பாயடைந்து வாழுந்திருவரங்கத்தினிட

த்தின் தேனுகள்நிறம்பிய பூங்காவிபூவுகடோறுமாராயப்பட்ட வண்டை ப்போல என்னிடத்தில் நானுபோகத்தினிடத்தின்ப நுகர்ந்து இப்போ நான்வாட்டமுறும்படிவிட்டுப்பிரிந்துபோன தலைவர்வாராமை - எதுகார ணமோ எனக்குச்சொல்லவேண்டும் - போதாவேயென்றவாறு போதா வென்பது (பொருளுணா) (௭௬)

மதங்கு-அறுசீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்

போதவெனக்கெளிதானார்பேரதவனுக்கரிதானார்
நாதராங்கர்திருத்தாணுடியரங்கினடக்கில்]
ஓதுமதங்கிநடித்தாலுள்ளமதங்கியரக்காம்
வேதமறைந்திடவல்லீர்வினையைமறந்திடுவிடீரோ

(எ-து) மிகவும் அடியேனுக் கெளிதானவராய்ப் - பூவயனாகியபிரம்மா வுக் கரிதானவராய்ச் சகலபுவனகர்த்தாவாகிய - வரங்கநாயகருடைய அழ கிய திருவடியைநாடி யரங்கனிடத்திலே நடித்துத்திக்கு-மதங்கியானவ ள் அப்படிநடித்தால்-உள்ளமானது அக்கினியிலிட்ட அரக்காயுருகுமா கையால் - வேதமோதவல்லவர்களே-வினையைவிரைந்து மெளிப்படாம ல்மறந்து விடக்கட வீர்களென்றவாறு (௮௰)

பாண் - தாழிசை.

விடாதுபூமடந்தைமார்விரும்பவாயர்மாதர்தோள்
வியந்துமுன்னயந்தவர்க்குவிற்குமெங்கள்கொங்கைதான்
அடாததன்றுபாணவின்னமனைனன்றியிங்ஙனம்
அரங்கரன்புகூரவின்பமாகவல்லவல்லவே
எடாதிருக்கில்வாய்திறக்குமெனகளையனுச்சிதோய்
எண்ணெயபட்டமெய்யிலிட்டமுத்துமுத்தரீயமும்
படாமுகந்திறந்தசைந்துமழலைவாயின்மணமறுப்
பசுநரம்புபுடைபரந்து பால்சுரந்தமுலையுமே

(எ-து) விட்டுநீங்காமல் கமலையானவள் விரும்பும் - மார்பையுடைய மாயவனது அழகிய புயத்தை வியப்பமெய்திவிரும்பியவர்க்கு விற்கம்ப ட்டயெங்களுடைய கொங்கையானது அவருக்கு அடுக்காதென்று அடுக் கவே யடுக்கமாகையால் இன்னமும் அவ்விடத்திலிருக்க விருப்பமின்றி

இவடத்திலெய்தியரங்கரானவர் அன்புகூரும்படிக்கு யின்பமாகத்தக்கது கண்டுவெடாமலிருந்தால் வாய்திறந்தழுங்குழந்தையாகிய யெங்களையனுடையவுச்சியிலே தோய்ந்த என்னையானது துயில்கியபசையாகிற்கும் மழலைமொழி வழங்காநின்ற. வாயினது மணமறுந் பசுமைப்பெற்ற நரம்பானது பக்கத்திற் பறந்து பாசுறந்திருக்கு முலையானதென்றவாறு. (அக)

இரங்கல்-கட்டளைக்கலித்துறை

முலைகொண்டபான்மணம்வாய்மாறிற்றில்லையம்மொய்குழலோ
அலைகொண்டதின்னமென்கையணையேயலையாழிவற்றச்
சிலைகொண்டசெங்கையரங்கேசர்தாள்கொண்டதேசமெல்லாம்
விலைகொண்டவாழ்விழியாள்சென்றவாறெங்ஙன்வெஞ்சுரமே

(எ-து) முலையுண்டபாலினது மணமானது வாய்விட்டொறினதில்லை மொய்த்தவளகமானது முடிக்கத்தக்கபருவமின்றி யலையாநிற்கின்றது இன்னமுமென்னுடைய கையணையே அலையையுடைய சமுத்திரம்வளற வில்லைப்பிடித்த செங்கரத்தினையுடைய அரங்கேசர் திருவடித் தாமரையால் அளந்துகொண்ட தேசமுழுதும் விலைபெற்றவாள்போன்ற விழியையுடையவளே எவ்வாறுசென்றாய் இறைவர்பின்கடிதாகிய காட்டுவழியிலென்றவாறு. (அஉ)

இரங்கல் எண்சீர்க்கழிநெடில்-ஆசிரியவிருத்தம்

வெஞ்சமுங்கருதுங்கஞ்சனுமெருதும்
வேழமும்பரியும்வீழமுன்பொருதார்
தஞ்சமென்றவருக்கஞ்சலென்றருளுந்
தாயிலன்புடையார்கோயிலின்புடையார்
மஞ்சுவண்டினமுந்துஞ்சுதண்டலைவாய்
வல்லியொன்றதிலோசொல்லியுத்திகழும்
கஞ்சமுண்டதிலே நஞ்சமுண்டதிலோர்
கள்ளமுண்டதுவென்னுள்ளமுண்டதுவே

(எ-து) வெவ்விதாகிய போராக்கருதுங் கஞ்சனென்பவனையும் சகடாசுரனையும் குவலயாபீடமென்னும் யானையையும் குதிரைவடிவாகிய கேசியென்பவனையும் இறந்துவீழும்படி முற்காலத்திற் பொருதினவர் சரண

மென்றவருக்காரணமாயஞ்சாதிசொன்றளிக்குந்தாயினு மெண்மடங் கதிகமாகிய அன்பினையுடைய அரங்கநாயக ருடைய கோயிலின் பக்கத்திலே மேகசாலமும் வண்டினமூர் துயின்மேவும் பூங்காவில் வல்லியாகிய வொருகொடியுண்டு அதிலே இரவினுநதுவியாமல் மலருந்தாமரையுண்டு அதிலே ஆலகாலவிஷமுண்டு அந்த ஆலகாலவிஷத்திலே ஒருகள்ளத்தனமுண்டு அதென்னுள்ளத்தையுண்டுவிட்டது-எ-று (௮௫)

முதுவேனிற்காலம்-எண்சீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்

உண்டமிழ்வாசமுடன்றண்டலைமாருதம்வந்
துலவுசாளரமூடுலவியவானிலவும்
விண்டலர்பூவணையும்மென்பனிநீர்புழுகும்
வேனிலுமேமுதிராவேனிலுமாகியதால்
அண்டர்தொழும்பெருமாளம்புயமின்பெருமாள்
அருமறையின்பெருமாளழகியநம்பெருமாள்
புண்டரிகங்கமழுந்தண்டுறையோதிமமே
புன்னைகள்சிந்தலரேயின்னமும்வந்திலரோ

(எ-து) தாமரைமணக்குந் தடாகம்பொருந்திய நீர்த்துறையிற்றங்கிய அன்னமே புன்னாகத்திலுதிராநின்ற பூவேசொல்லக்கேளீர் உண்டமிழப்பட்டமணத்தினுடனே தண்டலையாகிய காவிற்றவழ்ந்துமந்தமாருதமானது உலவாநின்ற சாளரவாயலூடு குலாவப்பட்ட வொளிபொருந்திய நிலவுமுகிழ்விரிந்த பூவினாற்செய்த வணையும் மெல்லிதாகிய பன்னீரும்புழுகுசவ்வாதும் வேனிலாகிய இரண்டுகாலத்திலும் முதிராவேனிலாகிய இளவேனிற்காலமுமாகிய தன்மையாற்றேவர்கள் தொழப்பட்ட பெருமாளானவர் அம்புயமின்னாகிய இலக்குமிகாந்தரானவர் வேதத்துக்குநாயகனானவர் அழகன்மிக்க நம்பெருமாளானவர் இன்னம் வரக்காண்கிலேன் ஏது செய்வேனென்றவாறு (௮௬)

கூதிர்காலம்-வேற்றொலிவெண்டுறை.

இன்னிசைவேயினர்மன்னியகோயிலையெய்தார்போற்
பொன்னினைவால்வர்போனவிடத்தினிற்போகாதோ
முன்னியமுகிற்றுளியென்றென்மேலெல்லாம்
வன்னியின்பொறிகளைவழங்கும்வாடையே

(எ-து) இனிய இசையைப் பொருந்தியவேய்ங்குழலையுடையவர் நிலை பெற்ற திருவரங்கத்திலினிதுமேற்பட வாராதவர்போனாலும் பொருள்தேடும் நினைவினாற்றலைவரானவர் போனவிடத்திலே, போகமாட்டாத மின்னப்பட்ட மேகமுமழையும் ஒன்றுமென் மெய்முழுதும் நெருப்பினபொறிகளை வழங்கப்பட்ட மேகமுமழையும் ஒன்றுமென்மெய் முழுதும்நெருப்பின்பொறிகளை வழங்கப்பட்ட வாடையானவிக்காற்றென்றவாறு (௮௫)

கார்க்காலம்-அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

வாடையாயிருபனியுமாய்வேனிலாய்வந்ததுகாரொன்றே
பேடைமாமயிற்சாயலாயன்பர் மேற்பிழைகருதிடல்செம்பொன்
ஆடைநாயகன்றிருமகணாயக னரங்கநாயகனேனும்
ஓடைமாவிதுமதமிதுபிளிறியவொலியிதுமழையென்றே

(எ-து) கூதிர்காலம் - பனிக்காலமும் - இனிவேனிற்காலமும் - முதிர் வேனிற்காலமுமாகிய ஐந்துபருவமும்போய் இக்கார்காலமாகிய பருவம் வந்து நேர்ந்ததென்று சாயலினாலே பெண்மயிலை யொப்பாய் தலைவர்மீது பிழை நினையக்கடவதென்று பொன்னன் பீதாம்பரத்தைத்தரித்த நாயகன்றிருமகளாகிய சீதேவி நாயகன் அரங்கமாகிய கோயிலுக்கு நாயகன் அவனேறப்பட்ட பொற்பட்டங்கட்டிய நெற்றியினுடைய யானையிதுமேகமன்று மதசலமிது மழைநீயென்று யிளிறிடப்பட்ட வோசையிது இடியோசையன்று ஆகையால்மழையன்று என்றுமறுத்ததென்றவாறு (௮௬)

கட்டளைக்கலித்துறை

மழைபோன்மரகதம்போலெம்பிரான்வளர்கோயிலன்னீர்
பிழையோமிகர்க்கிதையாருரைப்பாரிவர்பின்வந்தெய்த
தழைபோயுரைத்தவருத்தம்பொருண்மைகொல்சங்கரன்பால்
உழையோயொதுங்கமுயல்போமதிப்புக்கொளித்ததுவே

(எ-து) இருண்டமழை மேகம்போலவும்; மரகத மாணிக்க மலைபோலவும் எனக்குப்பிரானானவர் கண்வளருந் திருவரங்கத்தை யொப்பீர்கள் குற்றந்தீர்த்த உரைக்குரையார்நுரைக்கத்தக்கவர் யாவரொருவருமுரைக்கத்தக்கவரன்று ஆதலாலிவர் பினனாகவந்து தொடர்ந்தெய்த மாந்தழையானது சென்றுபட்டுரைத்தவருத்தம் பொருண்மையினாலன்றோ மானானது

சுரன் கையிற்போயொளிக்கவும் முயலானது சந்திரனிடத்திற் போயொளிக்கவும் காரணமென்று தலைவன் தலைவியானவள் சதியாடித்தனது தோழியருக்குரைத்ததென்றவாறு. (அஎ)

கார்காலம்-எண்சீர்க்கழிநெடில்-ஆசிரியவிருத்தம்

ஒளிக்குமிருசுடர்க்கவளம்விழுங்கும்பெழ்வாய்
உருமுழக்கத்திந்திரவில்லோடைசெற்றித்
துளிக்குமழைமதக்கொண்மூக்களிற்றின்மின்னல்
தோட்டிமாருதப்பாகர்துரக்குங்காலம்
அளிக்குலமுங்களிக்குமயிற்குலமும்பாடி
ஆடும்பொழிற்றிருவரங்கரணையாக்காலம்
விளிக்குமலைக்கருங்கடலுமொறுக்குங்காலம்
வினையேற்குவிழிகடுயின்மேவாக்காலம்

(இ-ள்) தன்னுள் ஒளிக்குதலையுடைய சந்திராதித்தரென்னு மிரண்டு கவளத்தையும விழுங்கியகன்ற வாயினிடத்துள்ள மிடியேயிளிறப்பட்டமுழக்கமாய் இந்திரதனுசே நெற்றிப்பட்டமாய்ப் பெயயப்பட்ட மழையே மதசலமாய் வரப்பட்ட மேகமென்னும்யானையை மின்னலாகிய அங்குசத்தினாலே காற்றென்னும் யானைப்பாகர் துரந்துகொண்டு செல்லுங்காலம் வண்டினங்கள்பாடவும் அதுகண்டுகளிப்பினையுடைய மயில்களாடவும் அகியபொழில் சூழ்ந்த திருவரங்கரானவரணையாதகாலம் சத்திக்குமலையினையுடைய கருங்கடலுமொருக்கப்பட்டகாலம் மிகுந்தவினையைச்செய்தவெனக்கு விழிகளானது துயில்பொருந்தாக்காலமென்றவாறு,- இதன்கருத்து) இத்தன்மையாகிய கார்காலம் அரங்கநாயகரணைவாராகில் கடலுமொருக்க வேண்டுவதில்லை கண்ணுமுறங்காமை வேண்டுவதில்லையென்றறிக (அஅ)

இளவேனிற்காலம்-கலிநிலைத்துறை

மேவலர்வாழ்தென்னிலங்கைமலங்கவொருகாலிருகால்
விற்குனித்தெய்
ஏவலர்வாழ்திருவரங்கத்தெமையிருத்திப்போனவர்நாட்
டில்லைபோலும்
கோவலராவாய்க்குழலோசைக்கானிரைகள்செவியெங்குங்
குறும்புன்மாலைப்

பூவலரின்மணம்பரப்பியிளவேனில்வரவந்த
பொதியத்தென்றல்.

(எ-து) மேலாகிய பகைஞர் வாழப்பட்ட தென்னிலங்கையை மலங்க் வொருகா மிருகோடியு மொருகோடியாய் வளையவில்லை வளைத்தெய்யு மம் பினில் வல்லவராகிய இடையருடைய வாயினலூதும் வேய்ங்குழ லோ சையைப் பசுவினிரைகள் செவியிலுறவொக்கும் கொஞ்சத் தன்மைபொ ருந்திய புன்மையாகிய மாலைப்போதிற் புட்பிக்கப்பட்ட பூவின் மணங்க ளைப் பரப்பிக்கொண்டு இளவேனிற்காலம் வருமளவில் வரவந்தபொதிய மலைத் தென்றலாவதென்றவாறு (அக)

இரங்கல்-கட்டளைக்கலித்துறை

தென்றலைக்குங்குமச்சேற்றைப்பொருள்சிறியாள்பெரிய
துன்றலைக்குந்துடிக்கும்மென்செய்வாடுயராலழைத்த
வன்றலைக்குஞ்சரங்காத்தாயிலங்கைமலங்கவளைத்
தன்றலைக்குஞ்சரத்தாயரங்காவண்டாதியனே

(எ-து) தென்றலாகிய காற்றையும் குங்குமமாகிய சேற்றையும் பொ றுக்கமாட்டாள் மிகவுஞ்சிறியதன்மையை யுடையாளாகையாற் பெரிதாகி ய அலைகடலினது வோசைக்கு மனதுதுடிப்பனேன் செய்தாற்றுவள் துன்பத்தினாலே மெய்யென்று வோலமிட்டழைத்த வன்மை பெற்ற தலையினையுடைய யானையை இரட்சித்தவனே இலங்கையானது கலங்கவ ளைந்து அப்போ தலைத்தபாணத்தையுடையவனே அரங்கமாகிய நகரையு டையவனே தேவதேவாதிபனே தேவரீர்சித்த மிரங்கவேண்டுமென்ற வாறு (கூ0)

க்ட்டளைக்கலிப்பா

அண்டர்போற்றுந்திருவரங்கேசனூர்
அணியரங்கத்திருமுற்றமெய்தினல்
பண்டுபோனவளையாழிவாங்குவேன்
பாலியாதுபராமுகம்பண்ணினல்
தண்டுவாளுஞ்சிலையுமிருக்கவே
சங்குமாழியுந்தாருமென்பேனவை
தொண்டருக்கொற்றிவைத்தோமென்றோதினல்
துளவமாலையைத்தொட்டுப்பறிப்பனே

(எ-று) தேவர்கள் போற்றிசெய்யுந் திருவரங்கேசராகிய நம்மணியரானவர் அழகினையுடைய மும்முத்தத்திலெழுந்தருளப் பெற்றேனாகில் என்கையைவிட்டு முன்னேசுழன்றுபோன வளையலையும் ஆழியாகிய மோதிரத்தையுந் தாருமென்றுவாங்கிக்கொள்ளுவேன் அதற்குக் கிருபைபண்ணாமற் பராமுகம் பண்ணினாலதற்குப் பதிலாய்த்-தண்டு- வாளும் - வில்லும் மிருக்கட்டுஞ் சங்காழியாகியசங்குசக்கரத்தையுந்தாருமெனபேன் அவையடியார்களுக்கு ஒற்றிவைத்தோமென்றுரைத்தால் துளவமாலையைத் தொட்டுபறித்துக்கொள்ளுவேனென்றவாறு (௬௧)

கலிநிலைத்துறை

தொட்டுண்டதயிர்வெண்ணெய்க்கன்றாச்சி
யுரலோடுசூழ்ந்துகட்ட
கட்டுண்டுகழலவிறகறியாமலிருந்தழுத
கள்வன்யாரே
கட்டுண்டானரங்கனெனக்கட்டுரைப்பா
ராளுலுங்கங்கைசூடி
மட்டுண்டகொன்றையான்மலர்மேலா
னரியவடிவனன்றே

(எ-று) அள்ளியுண்ட வெண்ணெய்க்காக அப்போது ஆச்சியாகிய அசோதை உரலுடன் வரிந்துகட்ட கட்டுப்பட்டுக் கழலும்படி வகையறியாமலிருந் தழுதகள்வனாக் கட்டுப்பட்டா னரங்கனென்று கட்டுவார்த்தையாகச் சொல்லுவாராகிலுங் களிப்பினையுடையவண்டுசாதிகள் சத்திக்கப்பட்ட தேனிரம்பிய கொன்றைமாலையைத் தரித்த சிவனும் உந்திக்கமலத்தின்மே லுறைந்த வயனும் அறிதற்கரிய வடிவத்தை யுடையவனுமென்றவாறு (௬௨)

அறுசீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்

வடியாதபவக்கடலும்வடிந்துமூல
மாயைகடந்தப்பாற்போய்வைகுந்தஞ்சேர்ந்
தடியார்கள்குழாங்கூடியுளதடிக்கீழ்
அடிமைசெயுமக்காலமெக்காலந்தான்
கொடியாடுமணிமாடவயோத்திமூதூர்
குடிதுறந்துதிருவரங்கங்கோயில்கொண்ட
நெடியோனேயடியேனுன்முயற்சியின்றி
நின்னருளேபார்த்திருப்பனீசனேனே

(எ-து) துவசங்களாடப்பட்ட நவரத்தினமணிகளா லிழைத்தமாடமாளிகை கூடகோபுரம் நிறைந்த அயோத்தியா புரியைவிட்டுக்குடிவாங்கித் திருவரங்கமாகிய கோயிலினிடத்திலே குடிகொண்டருளிய நெடிதானவனே அடியேனுலாக வேண்டியமுயற்சி யில்லாமல் உனது திருவருள் தானே பாருமென்று பார்த்திருந்த கடையேனொருக்காலும் வடிவதற்கரிய பிறவிக்கடலைக் கடந்துபோய் மூலப்பிரகிருதியையுங் கடந்து அதற்கப்பாலாகிய வைகுந்தத்திற் சேர்ந்து உனதடியார் கூட்டத்துடனே கூட உனதுதிருவடியின் கீழடிமை செய்யத்தக்க அக்காலமானது யெக்காலங் கிடைக்குமோவறிந்திலேனென்றவாறு (சுரு)

கட்டளைக்கலித்துறை.

நீச்சமணர்க்குஞ்சூனியவாதர்க்குநீதியற்ற
பூசற்பௌத்தர்க்குஞ்சைவர்க்கும்யார்க்கும்புகலுகின்றேன்
நாசப்படாவுயிரெல்லாமுதற்றந்தநாதன்கண்டீர்
ஆசற்றசீரங்கத்தாதிமூலத்தரும்பொருளே

(எ-து) நீசத்துவமான சமணர்க்கும் மாயாவாதியர்க்கும் நீதியைமற்ற பூசலாகிய போரையுடைய பவுத்தருக்கும் மற்றுமுள்ள எல்லாச்சமய வாதியருக்கு மெடுத்துரைக் கின்றேன் குற்றமற்ற சீரங்கத்திற்சிறந்த வனுதியாகிய ஆதிமூலத்தரும் பொருளானவனே அழிவில்லாத சகலசீவகோடிகளையு முன்னமே யுண்டாகிய நாதன்கண்டீரென்றவாறு (சுசு)

நேரிசைவெண்பா.

அரும்புண்டரீகத்தடியிணைக்கென்னெஞ்சம்
இரும்புண்டநீராவதென்றோ-விரும்பி
அறந்திருந்துங்கோயிலரங்காவுனைநான்
மறந்திருந்துமேற்பிறவாமல்.

(எ-து.) அரிதாகிய தாமரையொத்த உனது திருவடிகளில் விருப்பமாய் என்னிதையமானது இரும்புண்ட நீருக்கொப்பாய்-ஈண்டு வாரதவென்றைக்கோ புண்ணியமானது திருந்தத்தக்கோயிலையுடைய வரங்கனேஉன்னை மறந்திருந்து இனிமேற்படப்பிறவாமைக்கென்றவாறு. (சுஎ)

கலிவிருத்தம்.

பிறவியெனுங்கடலழுந்திப்பிணிபசியோடிந்திரியச்
சுறவனுக்கக்கொடுவினையின்சுழலகப்பட்டுழல்வேனை

அறமுடையாயென்னப்பாவரங்காவென்னுருயிருக்
குறவுடையாயடியேனையுக்கொள்வதொருநாளே

(எ-து) பிறவியென்னப்பட்ட சமுத்திரத்திலே யழுந்திப்பிணிப்பசியுடனே இந்திரியமாகிய சுறாமீனனது விழுங்கக் கொடியவினையாகிய சுழியிலகப்பட்டுச் சுழலக்கடவேனோ தரும சுரூபமானவனேயெனக்கு அப்பனானவனேயென்னுடைய நிறைந்தவுயிருக்குருவானவனே அடியேனையுமொருபொருளாயுக்கொண்டருள்வதுக் கொருநாளுமுண்டாகுமோமென்றவாறு. (கூகூ)

எண்சீர்க்கழிநெடில்-ஆசிரியவிருத்தம்

ஒருபொருளல்லேனிருவினையுடையேன்
உனதுதொண்டெனுந் துறைகுளித்துன்
பெருகுதண்ணளியின்பாசங்கொட்டிழிந்து
பெறியதோர்முத்தியானபெற்றேன்
திருவுமாமணியுஞ்சங்கமுமேந்திச்
செய்யதாமனாபலபூத்துக்
கருநிறமுடைத்தாய்நதிபொருதரங்கங்
கலந்ததோர்கருணைவாரிதியே.

(இ-து) அடியேன் வந்தொரு தன்மையான பொருளானவனன்று இறக்கிறதும் பிறக்கிறதுமாகிய இரண்டு வினையை யுடையேனுதலால் உனதடிமைத் திறமாகிய துறையினிடத்திற் சென்று குளித்துப்பெருக்கப்பட்ட உனதருளாகிய கயிற்றைப் பற்றியிழிந்து பெரிதாயொப்பற்ற சங்காழியென்னு மடையாள முத்திரையைப் பெற்றேன்சீதேவியும் பெருமைமிக்க கவுத்துவமணியுஞ் சங்கமும்விளங்கிய அவையவமாகிய பலபலசிவந்த தாமரைகளும் பூத்து கரியவண்ணத்தைப்பொருந்திக் காவேரியாகிய ஆற்றினலே பொருந்தப்பட்ட வரங்கத்தி னிடத்திற் கலந் தருளிய வொப்பற்றவொருதனிமுதலாகிய கருணைக்கடலானவனே யென்றவாறு (பின்னுமிதற்கேயுரைதிருவாகிய லட்சுமியும் பெருமை மிக்கமணியுஞ் சங்குந்தோன்றிச் சிவந்ததாமரைகள் பலவும் பூத்துக்கருநிறம்பெற்று நதியிற்பிறப்பட்ட அலையோடுங்கலந்த கருணையுடையகடலே அடியேனொரு பொருளையுடையவனன்று மிகவுமேழையேனுதலால் உனதுதொண்டனெனும் பெயரையுடைய துறையிற்குளித்து அங்ஙன மாளாமற்பெருகிய விரகத்தைச்செய்ய மாதரவாகிய தண்ணளியின் கயிற்றைப்பிடித்துமூழ்கில்பெரிதாகிய வொப்பற்ற முத்தென்னும் புரோசனத்தை யடைந்தேனென்று கடலுக்கு மரங்கர்க்குஞ் சிலேடைசொல்லிய வாறறிந்துகொள்க) (கூஎ)

கட்டளைக்கலித்துறை

வாரிபரங்கம்வருதிருப்பாவைக்குமண்மகட்குஞ்
சீரியரங்கன்வளர்திருக்கோலமுந்தென்றிருக்கா
வேரியரங்கவிமானமுங்கோயிலுமேவித்தொழார்
பூரியரங்கவர்கண்ணிரண்டாவனபுண்ணிரண்டே

(எ-து) திருப்பாற்கடலாகிய விடத்திலவதாரஞ்செய்த திருவாகிய சித்திரப்பாவைபோன்ற ஸ்ரீதேவிக்கும் பூதேவிக்கு மணாளராகிய சிறப்பினையுடையவர் திருக்கண்வளர்ந்தருளிய ஸிங்காரமும் தெற்குத்திசைக்குத் திருப்பதியாகிய திருக்காவேரிசூழ்ந்த திருவரங்கேசருடைய கனவிமானத்தினையுந்திருக் கோவிலையுமேவித் தொழாதவரெவர்களோ அவர்கள் முகத்திலிரண்டு கண்களென்றுண்டாகிய விரண்டுமிரண்டு புண்களென்றுண்டானதென்றவாறு. (௬௮)

நேரிசைவெண்பா.

புண்ணூருடற்பிறவிபோதுமெனக்குமுனக்கும்
எண்ணூறிருந்ததினிப்போதுங்-கண்ணா
குழற்காளதென்னரங்கக் கோயிலாரின்பொற்
கழற்காளரசின்றேனைக்கா.

(எ-து) துற்கந்தமாகிய புண்ணினால்நிறைந்த தேகத்தையுடைய ஜெனனமானது இனியடியேனுக்குப்போதுந் தேவரீருக்கும் இவனிப்படி ஜெனனமரணத்திற்குயவனாழி கிரியைப்போலத் திரியலாமோவென்று சற்றுமிருதயத்திலெண்ணி யிரங்காயலிருந்தது இனிப்போதுங் கண்ணனே வேணுகானப்பிறியனாகியவிடலையே தெற்குத்திசைக்குத் திருப்பதியாகிய திருவரங்கமென்னுங்கோயிலையுடையவனேதேவரீருடைய அழகியதிருவடிகளாக இப்போது அடியேனைக்காக்க வேண்ணுமென்றவாறு. (௬௯)

கலிநிலைத்துறை.

காவிரிவாய்ப்பாம்பணைமேற்கருமுகுல்போற்கண்வளருங்
கருணைவள்ளல்
பூவிரியுந்துழாயரங்கர்பொன்னடியேதஞ்சமெனப்
பொருந்திவாழ்வார்
யாவரினிமிழிகுலத்தோரானாலுமவர்கண்டீர்
இமையநாட்டத்
தேவரினுமுனிவரினுஞ்சிவனயனென்றிருவரினுஞ்
சீரியோரே.

(எ-து) காவேரியென்னுமாற்றிடத்திலே பாம்பணையாகிய சேஷசயனத்திருக்கண் வளர்ந்தருளிய கருணாநிதியாகிய வள்ளலானவரங்கநாயகரு

டைய பூமலர்த்துழாய் மாலைபொருந்திய பொன்னையொத்த திருவடியே தஞ்சமென்றடைந்து வாழப்பட்டவர்எக்குலத்துள்ளாரிலுமிழிகுலத்தோராயினும் அவர்களேகண்டீர் இமையநாட்டத்தினையுடைய தேவர்களிலேயுஞ் சிவனயனென்றுரைக்கப்பட்ட விருவரிலேயுஞ் சிறப்பினையுடையவரொன்றவாறு (அ

கட்டளைக்கலித்துறை

தரங்கத்தினின்றுதளருமென்னாவிக்குன்றுமனாத்தா
ளிரங்கித்தருவதெக்காலஞ்சொல்லாயெழுபாருமுண்டு
பரங்கொட்டராலினும்பாலாழியினும்பசும்பொன்னிரு
மூரங்கத்தினுந்துயில்வாயச்சுதானந்தகோவிந்தனே

(எ-து) தரங்கமாகிய அலைபோலலைந்து தளர்ச்சியையடையும் அடியேனுடைய வாவிக்காதாரமாக உனதுபாதாரவிந்தததை யிரங்கித்தருவதெக்காலமோ சொல்வாயாக ஏழுலகமுண்டு அதின்கனந்தோன்றாமல் ஓராலிலைமேற் பாற்கடலிற்றுயிலும் பசுமை பொருந்திய காவேரிசூழ்ந்த திருவரங்கத்தினிடத்திலுந் துயின்றருளிய அச்சுதானந்தகோவிந்தனான அரங்கநாயகனே யென்றவாறு பரங்கெட்டென்பதற்கு சகலபுவன சராசரங்களுந்தனது குக்ஷிக்குளடங்கித் தானேபரமாயிருந்தானென்றுரைப்பினுமமையுமென்க (௩௧)

எண்சீர்க்கழிநெடில்-ஆசிரியவண்ணவிருத்தம்.

மழைமுகிலெனவேபணாமுகந்திகழ்
வரியரவணையேறிவாழரங்கர்தம்
எழில்பெறுமிருதாளிலேகலம்பகம்
எனுமொருதமிழ்மாலைதானணிந்தனன்
குழலிசையளிமேவுகூரம்வந்தருள்
குருபரனிருபாதபோதடைந்தவன்
அழகியமணவாளதாசனென்பவன்
அடியவரடிசூடிவாழுமன்பனே.

(எ-து) மழைமேகம்போன்ற வண்ணராய்ப்பணாடவியையுடையவரிபொருந்திய பாம்பணைமேலேறி இனிதாயமர்ந்து வாழும் அரங்கநாயகருடைய வெழில்பெற்ற இருபாதாம்புயங்களிற் கலம்பகமென்னும் பாமாலைசாற்றி யருளினன் குழலிசையும் வண்டிசையுமேவும் வளஞ்செறிந்த கூரமாகிய நகரிலுள்ள குருபரனுடைய திருவடிகளையடைந்த அழகியமணவாள தாசனென்னும் பேர்பெற்ற அடியவருக்கடியவருடைய திருவடிச்சூடிவாழும் அன்பனானவனென்றவாறு. (௩௨)

திருவரங்கக்கலம்பகம்-மூலமும்-உரையும்.

முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

பாடல் அகராதி.

பாட்டு	பக்கம்.	பாட்டு	பக்கம்
அண்டர்	௬௪	கடல்வழிவிட	௨௫
அண்டமுழுது	௪௰	கனாபொரு	௫௪
அரங்கமாளி	௩௫	கற்றொளி	௪௰
அரவணடித்	௰௯	காணாதபுது	௪௧
அரும்பித்தவளை	௩௮	காயிலைதின்	௨௩
அரும்புண்ட	௬௫	காரகமோகல்	௫௬
அரும்புன்னகத்	௫௪	காலமுணர்ந்த	௫௨
அலைகடல்வ	௰	காலாயிரமுடி	௰௩
ஆடும்படநா	௩௯	காவிரிவா	௬௮
ஆயினைமனை	௩௪	குருகுறங்குகா	௩௰
ஆழ்வார்முன்	௩	கேசவனையே	௨௪
ஆனந்தமாய்	௪௯	கொண்டல்கா	௨௰
இரங்கத்தனி	௨௬	கொற்றவனறஞ்	௪௩
இரவிலயயிர	௫௨	சருகருந்தியை	௩௬
இருங்குலகு	௩௩	சிர்திக்கத்தித்தித்	௩௯
இரும்புவனம்	௪௪	சிந்தையிற்கு	௫௰
இருளினும்வெ	௨௯	சீர்பூத்தசெ	௬
இல்லறமெ	௫௧	செம்பொன்ன	௪௰
இன்னிசை	௬௧	சேவடியான்	௨௯
உண்டுமிழ்	௬௰	சேவிக்கவாழ்	௨௫
உருமாறிப்பல்	௪௭	தரங்கத்தினி	௬௮
உருவெனவரு	௮	தாளிரண்டும்	௪௬
ஊசல்வடம்	௪௭	தானேதனக்	௰௯
எங்கணுசி	௫௮	திருவரங்கந்தி	௩௭
எங்காந்தளங்	௪௯	திருப்பொற்பா	௩௭
எனக்கேதிரு	௰௩	தீண்டாவழு	௨௨
கருநயனம்	௫௭	துறைமதியா	௪௨
கருநாலுமுக	௯	தென்றலைக்	௬௩
கருபொருள்	௬௬	தேடுகின்றனை	௩௩
களிக்குமிரு	௬௨	தேவராய்த்தே	௭

பாட்டு	பக்கம்.	பாட்டு	பக்கம்
தேனூந்துசோ	௩௧	மழைபிறை	௪௫
தேனமருஞ்	௨எ	மழைபொன்	௬௨
தொட்டுணட	௬௪	மழைமுகிலெ	௬௬
தொழப்பெருத	௩௪	மறக்குமோ	௨எ
நகுகதிர்வழ	௰௫	மறைப்பாற்	௩
நஞ்சமுமமு	௰	மாதவங்களெ	௪௬
நாணந்தின்	௰அ	மாஞூர்கே	௫௬
நீசச்சம	௬௫	மாணேபெய்	௨அ
நீரிருக்குமட	௨௬	முலைகொ	௫அ
நேசத்தழை	௪அ	முன்னம்பிற	௫௩
பண்கொண்	௬௬	முன்னமேழ்	௪௨
பாசமாமடியர்	௫எ	மேவலர்	௬௩
பாதியாயமுகிய	௨௧	வடியாத	௬௪
பிடிக்கும்பர	௫	வாடியோட	௩௬
பிறவியே	௫௬	வாடையா	௬௧
புண்ணூருட	௬எ	வாயினிரவ்	௨௪
புயனுணகு	௰அ	வாரியாங்	௬எ
புலையாற்பி	௨௨	வாழுமெளவி	௩௨
பெருமாலையா	௫௩	வானிட்டகிர்	௫
பெருவாங்கே	௩௰	விடாதுபூம்	௫௬
பேசவந்ததுதி	௪௩	விலையான	௪அ
போதமே	௫அ	வீராங்காகி	௨௩
போயவனி	௨௰	வெஞ்சமுங்	௬௰
போனகம்பதி	௩௧	வேதந்தொகு	௪
மண்டலமும்	௰௪	வேலையுத	௪௪
மருவுகந்தை	௨௧	வைகலந்தமு	௰௩
மலர்தலையுல	௰௧		

பாடல் அகராதி.

முற்றிற்று.

—o—